ஆசிரியர்: மு.தயாளன்

சிறுகதை மஞ்சரி

17

இதழ் 17 மார்கழி 2021 £4.00

வளர்ந்த வளரும் படைப்பாளிகளுக்கான களம்

பங்காளர்கள்

ஷெல்லிதாசன்
பக்கம் 3
இலங்கை

கிருத்திகா
ஜயப்பன்
பக்கம் 8
இந்தியா

கர்ணன்
சின்னத்தம்பி
பக்கம் 12
இலங்கை

ஏ.என்.
எஸ் நியாஸ்
பக்கம் 14
இலங்கை

குரு.
சதாசிவம்
பக்கம் 24
இலங்கை



முல்லைமணி
பக்கம் 30
இலங்கை

தீபதிலகை
பக்கம் 32
இலண்டன்

பவானி
பக்கம் 36
இலங்கை

பேராசிரியர்
செ. யோகராசா
பக்கம் 18
இலங்கை

நந்தினி
சேவியர்
பக்கம் 40
இலங்கை

தங்கள் சமூகம் பற்றிய சிந்தனைகளை எழுத்துகளாக எமக்குத் தந்த மேலே உள்ள படைப்பாளிகளுக்கு மகிழ்வு நிறைந்த நன்றி

காரணம் அறிவோம்! காரியம் புரிவோம்!

இரண்டாது வருடம் முடிந்து மூன்றாவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கிறது சிறுகதை மஞ்சரி. பல புதிய எழுத்தாளர்களையும் வளர்ந்த எழுத்தாளரையும் அரவணைத்தபடிதான் இப்பயணம் சாத்தியமானது. இன்னும் தொடரும். சாதனைகளைத் தொடர்ந்தும் மஞ்சரி புரியும். இந்த நேரத்தில் மஞ்சரிக்குச் சந்தாதாரர்களாக சேர்ந்து கொண்டவர்களுக்கும் அவ்வப்போ அன்பளிப்பாகப் பணம் வழங்கியவர்களுக்கும் சிறப்புக்கதைகளுக்கான பரிசில்களை வழங்கியவர்களுக்கும் சிரந்தாழ்த்தி நன்றி பகர்கிறோம். உங்களின் அன்பும் அரவணைப்பும் என்றும் எமக்குத் தேவையென்பதைக் கூறி அதனை வேண்டி நிற்கிறோம்.

எங்களுடைய பிரதான நோக்கு நாளைய சமுதாயத்திற்கு நாம் என்ன வழங்கப்போகி றோம் என்பதைப்பற்றிச் சிந்திப்பதே.

புலம்பெயர் நாடுகளில் மொழியை இழந்து ஒரு தலைமுறை எம் முன்னே வளர்ந்து கொண்டிருக்கிறது. வாய்வழி இதனைச் சொல்லிக் கொண்டிருக்கிறோமே யொழிய எந்தக் காரியத்தையும் நாம் முன்னெடுக்க எத்தனியாதவர்களாக நாம் இருப்பது கவலையளிக்கிறது.

புலம் பெயர் நாட்டிலிருந்து இச் சிறுகதை மஞ்சரி வந்தாலும் இங்குள்ள பிள்ளைகளுக்கு எதையும் வழங்காமல் வந்து கொண்டிருப்பது மனதைப் புண்படுத்தும் ஒரு விடயமாகவே உள்ளது. இதனைப் படிக்கும்போது உங்களுக்கு ஏதாவது எண்ணங்கள் ஏற்பட்டால் அதனைத் தெரியப்படுத்துங்கள் நடைமுறைப்படுத்தக் காத்திருக்கிறோம்.

பல பெற்றார்கள் தவறான விடயங்களைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதைக் கேள்விப்படும்போது வேதனையாக உள்ளது.

சில பெற்றார்கள் பெண்பிள்ளைகளிடம் காதல் செய் ஆனால் சாதியைக் கேட்டுப் பிறகு காதல் செய் என்று கூறிவிடும் நிலைகள் எங்கள் சமூகத்தை எதிர்காலத்தில் பாதாளத்தில் தள்ளிவிடும் செயற்பாடுகளே என்பதை இங்கே பதிவு செய்கிறோம்.

தாய் மொழி பிள்ளைகளுக்குத் தெரியாமல் இருப்பது கூடப் பெரும் தகுதி என நினைக்கும் பெற்றார்களும் புலம் பெயர் மண்ணில் இருக்கிறார்கள்.

தமிழ்ப் பாடசாலைகளும் தமிழைப் பரீட்சைக்குப் படிப்பிப்பதோடு தம் பணி முடிந்துவிட்டதாக கருதிச் செயற்படுவதும் வேதனையளிக்கிறது.

இவைகளெல்லாவற்றிலிருந்தும் நாம் வெளிவரவேண்டும். எமது சமூகத்தைப் புதியதொரு பாதையில் நாம் வழி நடத்தவேண்டும்.

அதற்காகச் சிந்திக்கின்ற பலரும் இருக்கிறார்கள்.

அவர்கள் இப்போ உறங்கு நிலையிலிருந்து விழித்தெழ வேண்டும்.

இதுவே எமது கோரிக்கை. கை கோர்த்துச் செயற்படுவோம் வாருங்கள்.

மு. தயாளன்

நன்றிக்குரியவர்கள்

ஆர்த்தி துவாரகன், சாருகேசி தயாளன்
ரமணன் தயாளன், சரண்யா தனபாலசிங்கம்
வி. மைக்கல் கொலின், செ.யோகராசா
Dr.P. இராசையா, வணசிங்க அச்சகத்தினர்
ஓவியர் கைலாசநாதன்

சிறுகதை மஞ்சரி 16 இன்
சிறந்த மூன்று சிறுகதைகள்

முத்தம் - நக்கீரன் மகள்
சுமனக்கா- திக்குவல்லை கமால்
பொம்மை - வி. மைக்கல் கொலின்

1000 பேரை இணைப்போம்.....

தாய்மண்ணில் உள்ள பாடசாலைகளுக்கு மஞ்சரியை அனுப்புவதற்கு புலம்பெயர் மண்ணிலுள்ளவர்கள் பங்கு பெறலாம்.
லண்டன்: £5/year **ஐரோப்பா:** 6 Euro/year
மற்றைய நாடுகள்: $10/year

01 **காரணம் அறிவோம்....**
- மு.தயாளன்

02 **உள்ளடக்கம்**

03 **ஓ.. எங்கடை அப்பா....**
- ஷெல்லிதாசன்
திருகோணமலையைச் சேர்ந்தவர். சிறந்த கவிஞர். நல்ல ஆளுமை மிக்க படைப்பாளி

உச்சக்கட்டம்
- கிருத்திகா ஐயப்பன்
இந்தியாவின் தமிழகத்தைச் சேர்ந்தவர். அயராது எழுதிவரும் சோர்வற்ற எழுத்தாளி. துடிப்பும் சமூகப்பார்வையும் கொண்டவர்

12 **பெத்தாச்சி**
- கர்ணன் சின்னத்தம்பி
இலங்கை வடமராட்சி கரவெட்டியைச் சேர்ந்தவர். துடிப்பும் சமூகப்பற்றும் கொண்ட வளர்ந்துவரும் படைப்பாளி

14 **கழிவிரக்கம்**
- ஏ.என். எஸ். நியாஸ்
புத்தளத்தைச் சேர்ந்த சமூகப்பார்வை கொண்ட துடிப்புள்ள படைப்பாளி.

19 **கரும்பலகை (தொடர்கதை)**
- மு.தயாளன்
கரவெட்டியைச் சேர்நதவர். மஞ்சரியின் பிரதான ஆசிரியர்.

23 **வாசகர் கடிதம்**



அட்டை வடிவமைப்பு : ரமணன்
அட்டைப்படம்: திருமலை சுந்தா

24 **கண்ணன் வருவான்**
- குரு சதாசிவம்
அமெரிக்காவில் வதியும் சிறந்த கதை சொல்லி. மண்வாசனை நிறைந்த கதை சொல்வதில் வல்லவர்.

30 **பிணைப்பு**
- முல்லைமணி
காலமான பழம்பெரும் எழுத்தாளர். சமூகம் சார்ந்த பல கதைகளை எழுதிப் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

32 **திரு மதி - தீபதிலகை**
லண்டனில் வதிபவர். பெண் எழுத்தாளர்களில் சிறப்பாகக் கதை சொல்வதில் இவரும் ஒருவர்

36 **மாயன் தோட்டத்து.....**
- பவானி
கொழும்பைச் சேர்ந்தவர். சமூகத்தை விமர்சனக் கண்கொண்டு பார்த்துக் கதை சொல்பவர்

18 **மஞ்சரி கதைகள்பற்றி.**
- செ. யோகராசா
பேராசிரியர். சிறந்த கவிஞர். விமர்சகர். மட்டக்களப்பில் வாழ்கிறார்

40 **எழுத்தின் அனுபவம்**
- நந்தினி சேவியர்
காலமான சிறந்த கதை சொல்லி. சமூகத்தைக் கூர்மையாகப் பார்ப்பவர்

சந்தா விபரம்:
Srilanka: 800Rs/Year
Bank detail : Mrs Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
England £20/Year
Other countries: $80/year
Bank details: M. Natkunathayalan, Barclays,
Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307 SWIFTBIC

பிரதம ஆசிரியர் : மு. தயாளன்
உதவி ஆசிரியர்கள்:வி.மைக்கல் கொலின். செல்வி த. சரண்யா
ஆலோசகர்கள் : பேராசிரியர் செ. யோகராசா,
Dr P. இராசையா, நந்தினி சேவியர்

தொடர்பு முகவரி:
Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK
sirukathai1@gmail.com, +447505455811
Sirukathaimanjari 91, barathi street, Trincomalee,

விநியோகம்:
யாழ்ப்பாணம்: குலசிங்கம் வசீகரன் , +94 773788795
மட்டக்களப்பு: வி.மைக்கல் கொலின் +94 774338878
திருகோணமலை: த. சரண்யா, +94765554649

ஓ..... எங்கடை அப்பா அச்சா அப்பா!

"பிறந்தநாள் வாழ்த்துகள் மகேந்திரன்."
"விஸ் யு ஏ கப்பி பேத்ட்டே மகேந்திரன்"
"கப்பி பேத்ட்டே மகேன்".

அன்று காலை காரியாலயத்துக்குள் நுழைந்த மகேந்திரனுக்கு அவனுடன் ஒன்றாகப் பணிபுரியும் பலரும் மாறி மாறி பிறந்தநாள் வாழ்த்துக் கூறி கைலாகு கொடுத்த வண்ண மிருந்தனர். அவர்க ளின் வாழ்த்துக்களில் அவன் திக்குமுக்காடிக் கொண்டிருந்த வேளை அருகில் வந்த சுந்தரம் அவனுக்கு வாழ்த்துத் தெரிவித்துக் கைகுலுக்கிவிட்டு "என்ன மகேன் இண்டைக்கு பேத்ட்டேக்கு ஒண்டு மில்லையா" என கேள்வி கேட்டபடி பதிலுக்காகக் காவலிருந்தான்.

"நீ யொண்டு.. மனிசி இன்டைக்கு என்ரை பேத்ட்டேக்கு சமைக்க இறைச்சி மரக்கறி வாங்கிவரச் சொல்லி காலையிலேயே நச்சரிச்சவள். பிள்ளையளுக்கு ஆக்கிக் கொடுக்கவேணுமாம். அதுதான் என்ன செய்யிறதெண்டு முழிச்சுக் கொண்டிருக்கிறன்". என்றான் மகேந்திரன்.

அறைக்குள் நுழைந்த மகேந்திரனைக் கண்ட எஞ்சினியர் "பிறந்தநாள் வாழ்த்துக்கள் மகேன்" என கூறி எழுந்து அவனுக்குக் கைகொடுத்தார். "நன்றி சேர் நன்றி" என பணிவாகக் கூறி விட்டு வெளியேற ஆயத்தமான மகேந்திரனை அழைத்த எஞ்சினியர் தனது பொக்கற்றில் இருந்து எடுத்த மூன்று ஆயிரம் ரூபா தாள்களை மகேந்திரனின் கைகளுக்குள் திணித்தார். அவரது செயலில் திகைத்துப்போன மகேந்திரன் மீண்டும் மீண்டும் அவருக்கு நன்றி கூறி விட்டு அவர் கொடுத்த நோட்டுக்களைக் கைகளில் ஏந்தியபடி அவரது அறையில் இருந்து வெளியே வந்தான். அவன் எஞ்சினியரின் அறையிலிருந்து கைகளுள் பண நோட்டுக்களுடன் வெளியே வந்ததை அவதானித்து விட்ட டேவிட் "என்ன மகேன் எஞ்சினியர் பிறந்த நாளுக்குக் காசு தந்தவர் போல இருக்கு. அவர் அப்படித்தான் தன்ரை ஸ்ராபோடை நல்ல மரியாதை எனக்கும் போன வருசம் பிறந்த நாளைக்குக் காசு தந்தவர். அது சரி அப்ப இண்டைக்கு ஒரு சின்னப்பாட்டி வைக்கலாமெண்டு சொல்லு" என்றான் டேவிட். அதைக் கேட்ட சுந்தரம் " என்ன பொஸ் காசு தந்தா பிறகென்ன நான் நீ டேவிட் மூண்டு பேரும் சின்னப்பாட்டி போடலாம்" என்று சொல்லியபடி சிரித்தான். "இப்ப போத்தல் வாங்க முதல் வீட்டுக்கு அரிசி இறைச்சி மரக்கறி வாங்க வேணும் அதுக்குத்தான் காசு காணும் என்னை விடுங்கடா போக" என்ற மகேந்திரனைப் பார்த்து நாளாந்த வட்டிக்குக் காசு கொடுத்து வாங்கிற கருணாகரன் "என்னடா சுந்தரம் எவ்வளவு காசு வேணும். நான் அவனுக்குக் குடுக்கிறன் வாங்கிட்டு சம்பளத்திலை வட்டியோடை தரச் சொல்லுங் கோவன்" எனத் தனது கந்துவட்டிப் புத்தியை அவர்கள் முன்வைத்தான். "பிறகென்ன கரு

"நீ இங்கை கந்தோரிலை ஒரு காசும் செலவழிக்கத் தேவையில்லை வெல்பயரிலை எல்லாருக்கும் சோட் டிஸ்சும் ரீயும் உன்ரை சார்பா கொடுப்பாங்கள். எங்களுக்குத்தான் ஏதாவது..." என சுந்தரம் சொல்லி முடிப்பதற்கிடையில் காரியாலய பணியாளன் மணியம் மகேந்திரனுக்கு அருகில் வந்து "மகேன் ஐயா நீங்கள் வந்தவுடன் எஞ்சினியர் ஐயா உங்களை வரச்சொல்லிச் சொன்னவர்" என்றான். "அ.. அப்படியே" என்ற மகேந்திரன் தனது இருக்கையை விட்டெழுந்து எஞ்சினியரின் அறைக்குள்ளே நுழைந்தான்.தனது காசு எவ்வளவு வேணு மெண்டாலும் தரலாமாம்" என சொல்றதுக் கிடையில் கருணாகரன் ஐயாயிரம் ரூபாயை மகேந்திரன் முன் நீட்டி "நீ ஆறுதலா அடுத்த மாதமளவிலை தாமச்சான் ஆனா கொஞ்சம் வட்டி வரும் சரிதானே" என சொல்லியபடி மகேந்திரனின் கைக்குள் காசைத் திணித்தான். "பிறகென்ன எஞ்சினியர் தந்த மூவாயிரம் கரு கடனா தந்த ஐயாயிரம். ரெண்டு ஸ்பெக்ஷல் அறக்கும் பியர் போத்தல ரண்டும் சோடாவும் வாங்க தாராளமா காணும்" என டேவிட் உசாரேத்தினான். "ஓம் மகேன் உன்ரை பிறந்த நாளை

நாங்கள் கட்டாயம் கொண்டாட வேணும். கட்டாயம் நானும் டேவிட்டும் இண்டைக்கு மத்தியானம் உன்ரை வீட்டுக்கு வாறம். வேற கதையில்லை" என முத்தாய்ப்பு வைத்தான் சுந்தரம்.தண்ணிப் பாட்டியெண்டா மகேந்திரனுக்கும் ஆசைதான். அதனால் இதைச்சாட்டி தானும் குடிக்கலாமெண்ட மனசு கொண்டவனாய் மகேந்திரன்"ஆனா ஒண்டு மனிசி அறிஞ்சா தப்பேலாதடா அது தான்."

"போடா. பெரிய மனிசி. பயமாம் கதை விடுறான். இரகசியமாய் குவாட்டர் வாங்கிக் கொண்டே வீட்டிலை இரவிலை அடிக்கிற நீ எங்களுக்கு கதை விடாதை மகேன்" என மகேந்திரனின் இரகசியத்தை போட்டு உடைத்தான் டேவிட்.

"சரி பெரிய தலையிடியா போச்சு" என இருவருக்கும் சம்மதம் தெரிவித்த மகேந்திரன் சோட் லீவு போட்டுவிட்டு வெளியேறினான். "மாலா இந்தா ரண்டு கிலோ கோழி இறைச்சி பாக்கிலை இருக்கு. தேங்கா மரக்கறி அரிசி எல்லாம் வாங்கியிருக்கிறன்" என மனைவி மாலாவிடம் தனது கையிலிருந்த பாக்கை நீட்டினான் மகேந்திரன். அவளுக்கு அவனது செயல் புதினமாயிருந்தது. ''ஆடிக்கொருக்கா ஆவணிக் கொருக்கா தான் மனிசன் மனம் வைச்சா இறைச்சி வாங்கி வரும். தான் போற போற இடங்களிலை நல்லா குடிச்சுப் போட்டு இறைச்சி மீனெண்டு சாப்பிட்டிட்டு பிள்ளையளைப் பற்றி யோசியாத ஒரு பிறவி இண்டைக்கு நான் சும்மா சொன்னதை நினைச்சு இறைச்சி அதுவும் ரண்டு கிலோ இறைச்சி வாங்கிக் கொண்டு வந்திருக்கிறது பெரிய சாதனைதான்" என அவள் யோசித்த வேளை "ஆய் அப்பா.. கோழி இறைச்சி வாங்கி வந்திருக்கிறார். அச்சா அப்பா. தன்ரை பிறந்த நாளுக்கு நாங்கள் ஆசையா இறைச்சி சாப்பிட வேணுமெண்டு பாவம் எங்கேயோ கடன் பட்டு வாங்கி வந்திருக்கிறார்" எனக் குதூகலித்த அவர்களின் இரண்டு பிள்ளைகளும் துள்ளிக் குதித்தபடி 'ஓ.....எங்கடை அப்பா அச்சா அப்பா"எனச் சொல்லியபடி அப்பாவைக் கட்டி முத்த மிட்டனர். அவனும் பிள்ளைகளை மாறிமாறி முத்தமிட்டு 'பிள்ளையள் என்ரை பிறந்தநாளுக்கு நல்லா சாப்பிடவேணு மெண்டுதானே ரண்டு கிலோ இறச்சி வாங்கினனான். மாலா பிள்ளையளுக்கு நல்லா சமைச்சுக் குடும்..பாவம் பிள்ளையள்" என்று அவர்களை கட்டித் தழுவி முத்தமிட்டபடி இருந்தவேளை ''பிள்ளையள் இண்டைக்கு உங்களுக்கு ரியூசனிலை ஸ்பெசல் கிளாசல்லே ஓட்டோ வரப் போகுது வெளிக் கிடுங்கோ" என தனது ஏழாம் எட்டாமாண்டு படிக்கும் மகனையும் மகளையும் மாலா அவசர அவசரமாக வெளிக்கிடுத்த "அம்மா எனக்கு இறைச்சிப் பொரியல் வேணும்" என்றான் மூத்த பிள்ளை அருண். 'எனக்கம்மா கோழிக்கால் பிரட்டல் கறிதான் விருப்பம். கடிச்சு இழுத்திழுத்துச் சாப்பிட அதுவும் தக்காளி சோசோடை சாப்பிட எவ்வளவு ருசி" என்றாள் இளையவள் தனு. "ஓமோம் பிள்ளையள் உங்கடை விருப்பப்படி அம்மா வடிவா செய்து வைக்கிறன். இப்ப ரியூசனுக்கு போய் வாங்கோ" என்றாள் மாலா பிள்ளையளைப் பார்த்து. "அம்மா.. நாங்கள் வர ரண்டு மணி செல்லுமே"? 'பயப்படாதேங்கோ நீங்கள் வந்த பிறகு உங்களுக்கு தந்திட்டுத்தான் நான் சாப்பிடுவன். அந்தா ஓட்டோவும் வந்திட்டுது. ஓடிப்போய் ஏறுங்கோ பிள்ளையள்" என மாலா சொல்லியபடி பிள்ளையளை ரியூசனுக்கு அனுப்பிவிட்டு சமையலறைக்குள் அவள் நுழைந்தாள். "மாலா பிள்ளையள் ஆசைப்பட் டமாதிரி வடிவா செய்து குடுமப்பா பின்னேரம் அரை நேரம் லீவு போட்டாத்தான் சரி.. சரி நான் போட்டு வாறன்" என மனைவிக்கு சொல்லியபடி கந்தோருக்கு சைக்கிளில் விரைந்தான் மகேந்திரன்.சமையல் முடித்து வியர்த்து விறுவிறுத்தபடி வெளியே வந்தாள் மாலா. பிள்ளையளின் விருப்பப்படி பொரியல் பிரட்டல் என்றெல்லாம் ஆசையாசையாய் செய்து பக்குவமாய் மூடி வைச்ச திருப்தியில் கிணற்றடிக்குப் போக பிள்ளையளது ஸ்கூல் உடுப்புடன் தனதும் கணவரதும் உடுப்புக்களையும் கையிலெடுத்தபடி வெளியே வந்தாள் அவள். அவள் முற்றத்துக்கு வந்தவேளை கணவன் மகேந்திரன் தனது இரண்டு கூட்டாளிகளுடன் கதைச்சுப் பேசியபடி வீட்டுக்குள் நுழைந்தான். "யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே" என்பது போல அவர்கள் வரும் போதே சாராயப் போத்தல் பியர் போத்தலுகள் ஒன்றோடு ஒன்று அடிபட்டு கிளிங் கிளிங் எனச் சத்தம் கேட்டது. மாலாவுக்கு விசயம் பிடிபட்டுப் போனது. இண்டைக்கு தன்ரை மனிசன்ரை பிறந்தநாளை கலகலப்பாகக் கொண்டாட அவனது குடிகார மட்டையள் இரண்டு அவனோடு கூட வந்து நிக்கிறதைப் பார்த்த அவள் மகேந்திரனை முறைச்சுப் பார்த்தாள். அவளது நெருப்புப் பார்வைக்கு ஈடு கொடுக்க முடியாத மகேந்திரன் "டேய் டேய் போத்தலுகள் பலமா சத்தம் போடுதடா. மெல்ல கொண்டு வாங்கடா மனிசி நிக்கிற நிலையைப் பார்த்தா எல்லாருக்கும் தும்புக்கட்டையாலை அடிவிழும் போலை கிடக்கடா" எனச் சொன்ன மகேந்திரன் விறு விறுவென நண்பர்களைக் கூட்டிக் கொண்டு வீட்டின் பின் விறாந்தைக்குள் நுழைந்தான்.

"பார் கந்தோர் நேரம் குடிக்க வந்திட்டாங்கள் படு பாவியள். இவங்களுக்கு ஒரு அரசாங்க வேலையாம்

முப்பதாயிரம் நாப்பதாயிரம் சம்பளமாம். எத்தினை சனம் வேகாத வெய்யிலிலை நிண்டு பாடுபட்டு உழைக்குதுகள். உவங்கள் கந்தோரிலை பானுக்குள்ளை இருந்து சொகுசா வேலை செய்யிறதோடை அடிக்கடி லீவும் போட்டு குடிச்சுக் கும்மாளமும் போடுறாங்கள். இவங்களை தேடி வார சனம் காவல் இருக்க வேண்டியது தான்" என மனசுக்குள் கணவனையும் அவனுடன் கூட வந்த இரண்டு கூட்டாளியளையும் திட்டியபடி குளிப்பதற்காக அவள் கிணற்றடிக்குப் போனாள். "நல்ல காலமடா உங்களைக் கண்டதும் மனிசி என்மேலை பாஞ்சு குதறுமெண்டு நினைச்சன் தப்பினன் பிழைச்சன்" எனச் சொன்ன மகேந்திரன் "பிள்ளையள் ரியூசனாலை வரமுதல் எல்லாத்தையும் முடிச்சுப் போட்டு வெளியேற வேணும்" என்றான். அவன் சொல்ல முதலே டேவிட் சாராயப் போத்தல் ஒண்டை எடுத்து பின்னாலை ஒரு தட்டுத் தட்டி திறந்து மூவருக்கும் முன்னாலிருந்த மேசையில் வைத்தான். மகேந்திரன் குசினிப் பக்கம் ஓடிப்போய் மூன்று கிளாசை எடுத்துக் கொண்டு திரும்பினான்.

டேவிட் சாராயப் போத்தலை எடுத்து எல்லா கிளாசிலும் அரைவாசிக்கு மேலே சாராயம் விட்டான். சுந்தரம் கொண்டுவந்த ஸ்பிரைற் போத்தலை உடைத்து அவற்றுக்குள் கொஞ்சம் கொஞ்சமாய் சோடாவை விட்டு கீழே வைத்தான்.

'சியேஸ்". எனச் சொன்னபடி மூவரும் தமது கையிலெடுத்த கிளாசை கிளிங் கென சத்தம் கேட்க முட்ட வைத்து பானத்தை அருந்தத் தொடங்கினர்.

"மச்சான் மகேன். கடிக்க ஒண்டும் வாங்காமல் வந்திட்டம். மனிசி சமைச்ச இறைச்சிக கறியிலை கொஞ்சம் எடுத்துவாவன்" என்றான் டேவிட்.

"ஓமடா மச்சான் எனக்கு கடிக்க ஏதும் இல்லையெண்டா குடிச்ச மாதிரியிலை" எனச் சொன்னான் சுந்தரம். அரைக் கிளாஸ் சாராயம் உள்ளை போய் மகேந்திரனுக்கு அது மெல்ல வேலை செய்து கொண்டிருந்ததால் "அட எங்களுக்கு இல்லாத இறைச்சியே மனிசி கிணத்தடியிலை நிக்கிறபடியால் நல்லதாய் போச்சு" எனச் சொன்ன மகேந்திரன் மெல்ல மெல்ல மனைவி மாலாவை அவதானித்தபடி சமையலறைக்குள் நுழைந்து ஒரு டிஸ்சை எடுத்து மூடி பக்குவமாய் வைத்திருந்த கோழிக்கறிச் சட்டியை திறந்து கறண்டியால் கறியை அள்ளி எடுத்து சத்தமில்லாமல் வெளியேறினான். அரைப் போத்தலுக்கு மேலை மூவரும் காலி செய்த நிலையில் அவர்களது வாய் ரேஸ்ரைத்தான் தேடியது. அவ்வளவு ருசியாக மாலா சமைத்து வைத்திருந்தாள். அடிக்கடி குசினிக்குப் போவதும் யன்னலால் கிணற்ற டியில் நிற்கும் மனைவியை கவனிப்பதாயும் டிஸ்சில் கறியை போட்டு வெளியேறுவதாயு மிருந்தான் மகேந்திரன். அவர்கள் கொண்டுவந்த சாராயப் போத்தல்களில் ஒன்று முடிய மற்றது திறக்கப்பட்டது. அதற்கிடையில் டேவிட் அவசரத்திலை பியர் போத்தலொன்றை திறந்தவனாய் களக் களக்கென வாய்க்குள் ஊத்தினான். வாய்க்குள் போன பியர் நுரை கக்கியபடி அவன் வாயிலிருந்து வழிந்து அவன் போட்டிருந்த சேட்டை முழுகவாத்தது. டேவிட்டும் இந்த நிலையிலிருக்க சுந்தரம் சாராயப் போத்தலைத் திறந்து தனது கிளாஸ் நிறைய ஊத்தி மடமடவென குடித்துக் கொண்டிருந்தான். அவனொரு 'முடாக் குடி"யனென பெயர் பெற்றவனெண்டா இதுதான் காரணமோ தெரியாது. மகேந்திரன் இறைச்சி டிஸ்சைப் பார்த்தான். எல்லாம் காலியாக இருந்தது. திரும்பவும் பதுங்கிப் பதுங்கி குசினிக்குள் போய் நின்றபடி யன்னலால் எட்டிப்பார்த்தான். மனிசி கிணத்தடியில் நின்று உடுப்பு அலம்பிக் கொண்டு நின்றாள். யன்னலால் எட்டிப்பார்த்த கணவனை கண்டும் காணாத மாதிரி நின்று அவள் அவதானித்தாள். கணவன் குடிக்கிறவன்களுக்கு ரேஸ்ராக இறைச்சிக்கறி எடுப்பதை ஊகித்து அறிந்தவளாய் ரண்டுகிலோ இறச்சி வாங்கிவந்த மனிசன் கொஞ்சமாவது எடுத்து சாப்பிடட்டுமே பறவாயிலை. பிள்ளைகளுக்கு செய்த பொரியலையும் கோழிக்கால் பிரட்டலையும கண் காணாத இடத்தில் மறைத்து வைச்சிருக்கிற திருப்தியில் கணவனின் செயலை அவள் சட்டை செய்யாமல் குளிக்க ஆயத்த மானாள். சமையலறைக்குள் சென்ற மகேந்திரன் டிஸ்சில் இறைச் சிக்கறியை எடுத்துக்கொண்டு சமையலறைக் கதவை சத்தம் எளாதவாறு இறுகப் பூட்டிவிட்டு வெளியேறினான். மகேந்திரன் கொண்டுவந்து வைச்ச இறச்சிக் கறியை சப்புக் கொட்டிச் சுவைத்தபடி இருந்த டேவிட் "என்ரை மனிசியுமிருக்கிறாளே தேவாங்கு ஆனமட்டிலை இறைச்சி மீன் ஆக்கத் தெரியாத சனியன்" எனச் சொன்னபடி கிளாசிலிருந்த சாராயத்தை எடுத்து ஒரு உறுஞ்சு உறிஞ்சி தொண்டையை கையால் தடவியபடி வாய்குள்ளை ஒரு இறைச்சித் துண்டை அவசரமாக திணித்தான்.

"ஓமடா மச்சான் என்ரை மனிசி இருக்கிறாளே கிழமையிலை மூண்டு நாள் மரக்கறி. சனி ஞாயிறிலை யாவது ஏதாவது இறைச்சி மீனை நல்லமாதிரி சாப்பிடுவமெண்டா அதுவும் ருசியா சமைக்கத் தெரியாத சனி மூதேவி. மகேந்திரன் கொடுத்து வைச்சவன். இறைச்சிக்கறியெண்டால் இப்பிடித் தான் நல்ல உறைப்பா ருசியாக் காச்சவேணும்" மென ஆலாபனை பண்ணின சுந்தரம். ஒரு எலும்புத்

துண்டோடு கிடந்த இறைச்சித் துண்டை யெடுத்து கடித்து இழுத்தபடி தனது கிளாசிலை இருந்த சாராயத்தை ஒரு உறுஞ்சு உறிஞ்சி படாரென மேசையிலை கிளாசை வைத்தான். இரண்டு போத்தல் சாராயம் பியர் போத்தில் இரண்டு இரண்டு போத்தில் சோடா எல்லாம் காலியாக மூண்டு பேருக்கும் நிறை வெறி ஏறியிருந்தது. "டேய் மகேன் நீதானடா எங்கடை உயிர் நண்பன். ஆரும் உன்னைப் பற்றி ஏதாவது கதைச்சா சொல்லு அடிச்சு முறிச்சுப் போடுவம்..ஓ..." என்றான் டேவிட். 'ஓமடா மகேன் வாழ்நாளிலை இப்படி ருசியான ரேஸ்ட்டோட நான் குடிச்சது கிடையாது. எங்கை உன்ரை மனிசி அவளைப்பாத்து தாங்ஸ் சொல்ல வேணும்" மென்று தள்ளாடியபடி சுந்தரம் எழும்ப முடியாது எழுந்து நின்றான். "இனி மச்சான் ரண்டு பேரும் கெதியிலை வெளியிலை போங்கடா பிளீஸ் மனிசி வரப்போறாள்" என பதட்டப் பட்டான் மகேந்திரன் அந்த நிறை வெறியுடன். "சரி.. சரி. நீ பயப்பிடாமல் இரு நா..ங்..கள் வெளியிலை போறம்" எனச்சொன்ன டேவிட் மகேந்திரனை இறுக்கிப் பிடித்து அணைத்து அவனை மாறி மாறிக் கொஞ்சினான். இதைக்கண்ட சுந்தரமும் அவனைக் கட்டிப் பிடித்து கொஞ்ச மூண்டு பேரும் நிலைதடுமாறி நிலத்தில் விழுந்து புரண்டனர். மேசையில் இருந்த கிளாசுகள் பலத்த சத்தத்துடன் கீழே விழுந்து புரண்டு உருண்டன. அதற்கிடையில் மகேந்திரனின் மனைவி மாலா குளித்துவிட்டு தான் துவைத்த உடுப்புக்களை கொடியில் காயப் போட்டபடி ஏதோ சத்தம் கேட்குதே என எட்டிப் பார்த்தாள். தனது கணவனும். மற்ற ரண்டு பேரும் நிலத்தில் புரண்டு கிடப்பதைக் கண்டு "சனி மூதேவியள் உதுகளுக்கு குடிக்கிறதெண்டா மாத்திரம் காசு கையிலை வந்திடும். அதுவும் ஓசிக் குடியெண்டால் நேரம் காலமில்லாமல் ஓடி வந்திடுவாங்கள்

எனக்குமொரு தேவாங்கு கிடைச்சிருக்கு என்ரை தலைவிதி" என தனது தலையில் அடித்து திட்டிக் கொண்டு சாமியறைக்குள் நுழைந்தாள் அவள். மனைவியின் பேச்சை நிறை வெறியிலும் கேட்டறிந்த மகேந்திரன் அவசர அவசரமாக ரண்டு பேரையும் மெல்ல தூக்கி நிமித்தி பிளீஸ் ரெண்டு பேரும் மனிசி வர முதல் வெளியே போங்கடா" எனக் கூறி ஒரு மாதிரி அவர்களை அனுப்பிவிட்டு கண்ணுக்குள் உறக்கம் வர மயக்கத்துடன் பக்கத்தில் கிடந்த ஈசி சியாருக்குள் படாரென விழுந்து உறக்கத்தில் மூழ்கினான். ரியூசனுக்கு போன பிள்ளையள் இரண்டும் ஓட்டோவாலை இறங்கி ஓடி வந்தனர். தாய் நிற்குமிடத்துக்கு விரைந்து ஓடிப் போய் " பசிக்குதம்மா. கெதியிலை வாங்கோ" என்றனர். "வந்தனீங்கள் ரண்டு பேரும் புத்தக பாக்கை வைச்சிட்டு ஓடி வாங்கோ பிள்ளையள் குளிச்சிட்டுப் போய் சாப்பிடுவம். நல்ல பிள்ளையளல்லே" அம்மா சொன்ன சொல்லைக் கேட்ட இருவரும் வீட்டு விறாந்தை மேசையில் புத்தக பாக்குகளை வைத்துவிட்டு குளிக்க ஆயத்தமாக கிணற்றடிக்கு ஓடினர். அங்கு வந்ததும் மூத்தவன் "அம்மா நான் சொன்னமாதிரி இறைச்சிப் பொரியல் செய்து வைச்சனீங்களே" என்று கேட்டான். அதற்கிடையில் இளையவள் "அம்மா கோழிக்கால் பிரட்டல் செய்து வைச்சனீங்களே கடிச்சுச் சாப்பிட எனக்கு கனக்கநாள் ஆசையம்மா உந்த ரிவி விளம்பரங்களிலை அதைப் பாத்ததிலையிருந்து ஒரே ஆசை எனக்கு" என்றாள் அம்மாவைப் பார்த்து. "பிள்ளையள் உங்கட ஆசை தானே அம்மாவின்ரை ஆசை செய்யாமல் விடுவனே" எனச் சொன்ன மாலா பிள்ளையளுக்கு குளிக்கவாத்துவிட்டு வீட்டுக்குள் நுழைந்தாள். "அம்மா.. அப்பா கந்தோராலை இன்னும் வரவில்லையே அவற்றை பிறந்த நாளுக்கு அவரோடை இருந்து சாப்பிட ஆசையாயிருக்கம்மா" என்றான் மூத்தவன். "அவர் கிடந்தார் விடுங்கோ நீங்கள் முதலிலை சாப்பிடுங்கோ பிறகு அவரைப்பாப்பம்" என உள்மனதுக்குள் கணவன் மீதிருந்த வெறுப்பை வெளிக்காட்டாமல் பிள்ளையளுக்கு கதை சொல்லி விட்டு "பிள்ளையள் சாப்பாட்டு மேசைக்கு ரண்டு பேரும் போய் இருங்கோ. அம்மா பிள்ளையளுக்கு சாப்பாடு போட்டுக் கொண்டு ஓடி வாறன். ரண்டு மணியாச்சு பிள்ளையளுக்கு பசிக்கும் உடனை வாறன்" என்றவள் குசினிக் கதவைத் திறந்து உள் நுழைந்து இரண்டு கோப்பைகளை கழுவியெடுத்து அவற்றுக்குள் சோற்றை அளவாக போட்டாள். தான் பிள்ளையளுக்கெண்டு தனியாய் ஆசையாசையாய் செய்து வைச்ச இறைச்சிப் பொரியல் கோழிக்கால் பிரட்டல்களை எடுத்துப் போட விரைந்த அவள் பக்குவமாய் எடுத்து வைத்த பாத்திரங்கள் இரண்டையும் பார்த்த போது அவை இரண்டும் திறந்து கிடந்ததோடு வெறுமையாக இருந்ததையும் பார்த்து விறைத்துப் போனாள். நிலமையை சுதாகரித்துக் கொண்ட அவள் ஓடிப்போய் இறைச்சிக்கறி வைத்திருந்த சட்டியைத் திறந்து பார்த்தாள். மேலும் அதிர்ச்சிதான் காத்திருந்தது அங்கும். சட்டியின் அடியில் கொஞ்சக் குழம்பு மாத்திரம் முகம் காட்டிச் சிரித்தது. சாப்பாடு எடுக்கப் போன அம்மாவை வெகு நேரமாக காணாத பிள்ளைகள் குசினிக்குப் போய் எட்டிப் பார்த்தனர். அம்மா கோப்பைகளில் வெறுஞ் சோற்றை போட்டுவிட்டு நெற்றியில் கைவைத்தபடி முகம் கவிழ இருந்து கண்ணீர் விடுவதைக் கண்டனர். "அம்மா. அம்மா.. ஏனம்மா

அழுகிறியள். வெறுஞ் சோற்றை போட்டிடட்டு கறியைப் போடாமல் குந்தியிருந்து அழுகிறியள்" என்றபடி அம்மாவுக்கு அருகே போனார்கள். கறிச்சட்டி திறந்தபடி கிடந்தது. வேறும் இரண்டு பாத்திரங்களும் வெறுமை யாய் கிடந்ததைக் கண்ட மூத்தவன் "என்னம்மா. என்ன நடந்தது அடுத்த வீட்டுப் பூனை அல்லது நாய் ஏதாவது வந்து எல்லா இறைச்சிப் பொரியல் இறைச்சிக் கறியள் எல்லாத்தையும் சாப்பிட்டுப் போட்டுதோம்மா'எனக் கேட்டான். "ஓமடா அடுத்த வீட்டுப் பூனையோ நாயோ இல்லையடா எங்கடை வீட்டு வெறி நாய்தான் முழு இறைச்சியையும் கூட்டாளியளோடை சேர்ந்து சாப்பிட்டு முடிச்சுப் போட்டுது" என அழாக் குறையாக சொன்னவள் திடீரென ஆவேசம் கொண்டவளாய் எழுந்து கணவன் மகேந்திரனை வீடு முழுவதும் தேடிவிட்டு பின் விறாந்தைக்கு அவள் விரைந்தாள். பிள்ளைகள் இரண்டும் பசியும் ஏமாற்றமும் கொண்டவர்களாய் தாயைத் தொடர்ந்து அங்கு சென்றனர். அங்கு சென்றவர்களை அவர்கள் கண்ட காட்சிகள் திகைக்க வைத்தன. மகேந்திரன் ஈசிச்சியாரில் கை கால்களை அலங்கோலமாக எறிந்தபடி நிறைவெறியில் குறட்டை விட்டபடி தூங்கிக் கொண்டிருந்தான். அவனருகே வெற்று மதுப் போத் தல்களும் சோடாப் போத்தல்களும் கிளாஸ் மூன்றும் நிலத்தில் விரவிக் கிடக்க அந்த இடத்தை சுற்றிவர எலும்புத் துண்டுகள் பல சிதறிக் கிடந்தன. அவர்களது வீட்டு வளர்ப்பு நாய் ஓடி யோடி ஒவ்வொரு எலும்புத் துண்டுகளாய் கௌவி எடுத்து மொற மொறவென கடித்துச் சுவைத்துக் கொண்டிருந்தது. இதையெல்லாம் பார்த்த மாலாவுக்கு கோபக் கொதிப்பேறியது. உடனடியாக அந்த இடத்தை விட்டு வெளியேறிய அவள் கிணற்றடிக்குப் போய் ஒரு பெரிய வாளியில் நிறைய தண்ணீர் எடுத்து வந்தாள். அம்மாவின் இந்தச் செயல்களின் தன்மை களை புரியாதவர்களாக பிள்ளைகள் பார்த்துக்கொண்டு நிற்க மாலா தான் கொண்டுவந்த நீரை நேரே மகேந்திரனுக்குக் கிட்டக் கொண்டுபோய் அவனது தலையில் கொட்டி தனது ஆத்திரந் தீர அபிஷேகம் செய்தாள். இதனை சற்றும் எதிர்பாராத பிள்ளைகளிரண்டும் அதிர்ச்சிய டைந்தவர்களாய் 'ஐயோ.... அம்மா..... ஏனம்மா இப்படிச் செய்தனீங்கள்....அப்பா பாவம்..இண்டைக்கு அவற்றை பிறந்தநாளல்லே" என தமது பசியையும் மறந்தவர்களாய் பதறியடித்தபடி திடீரென தலையில் தண்ணீர் கொட்டியதால் திணறியடித்தெழுந்த தந்தையை நோக்கி மின்னலெனப் பாய்ந்தனர்.

நீங்கள் யார்?

ஒரு முறை பயணிக்கும் போது புலவர் காளிதாசனுக்கு மிகவும் தாகமாக இருந்தது. அப்போது ஒரு பெண் கிணற்றில் இருந்து தண்ணீர் எடுப்பதைப் பார்த்தார். கிணற்றடிக்குச் சென்று அந்தப் பெண்ணிடம் தண்ணீர் கேட்டார்.
பெண்: "தருகிறேன். ஆனால் நீங்கள் யார்? உங்களை அறிமுகப் படுத்திக் கொள்ளுங்கள்" என்றாள். காளிதாசர்: தான் யார் என்று இந்த கிராமப்புற பெண் அறிய அருகதை அற்றவள் என்று எண்ணினார். எனவே, "நான் ஒரு பயணி" என்றார். பெண்: "இந்த உலகில் இரண்டே பயணிகள்தானே உண்டு. அது சூரியனும் சந்திரனும் ஆகும். தினமும் உதித்து பிறகு அஸ்தமித்து சதா பயணித்துக் கொண்டே இருக்கிறார்கள்". காளிதாசர்: "சரி. அப்படியானால் நான் ஒரு விருந்தினர்" என்றார். உடனே அந்த பெண்: "இந்த உலகில் இரண்டே விருந்தினர்தானே உண்டு - இளமையும் செல்வமும்... இரண்டும் தற்காலிகமானவை. எனவே அவற்றைதான் விருந்தினர் என்று ஏற்க முடியும்" என்றாள். ஆச்சரியப்பட்ட காளிதாசர்: ''சரி, நான் ஒரு பொறுமைசாலி என்று வைத்துக்கொள்" என்றார். அதற்கு அந்த பெண்: "இந்த உலகில் இரண்டே பொறுமைசாலிகள்தான் உண்டு. அவை, பூமியும் மரமும் ஆகும். யார் பூமியை எத்தனை மிதித்தாலும், பழத்திற்காக மரத்தின் மேல் எத்தனை கல் எறிந்தாலும், அவை பொறுமையாக இருக்கின்றன" என்றாள். பொறுமை இழந்த காளிதாசர்: "மிகவும் சரி. நான் ஒரு பிடிவாதக்காரன்" என்றார். அதற்கு அந்த பெண்: "புன்னகையோடு இந்த உலகில் பிடிவாத குணம் கொண்டவை இரண்டுதான் - நம் நகமும் தலைமுடியும் ஆகும். நாம் வெட்ட வெட்ட வளர்ந்து கொண்டே இருக்கும்" என்றாள். பொறுமை இழந்த காளிதாசர், கோபமாக, "சரி, நான் ஒரு முட்டாள்" என்றார். அந்த பெண் சிரித்துக்கொண்டே, "இந்த உலகில் அறிவும் ஆற்றலும் இன்றி ஆளும் அரசனும், அவனைப் புகழ்ந்து துதி பாடும் அமைச்சருமே இரு வகை முட்டாள்கள் ஆவர்" என்றாள். தான் தோல்வி அடைந்ததை உணர்ந்த காளிதாசர் அந்த பெண்ணின் கால்களில் விழுந்து அவள் பாதங்களைப் பற்றி பின் எழுந்த போது, தான் கண்ட காட்சியில் உறைந்து விட்டார். கற்பித்தல் மற்றும் அறிவுக்கும் கடவுள் ஆன அன்னை சரஸ்வதியே அங்கே காட்சி தந்து, "காளிதாசா, நீ புத்தி உள்ளவன். ஆனால் நீ உன்னையே உணர்ந்தால்தான் நீ மனுஷ்யா. எவன் ஒருவன் தன்னை அறிவதில்லையோ அவன் மனுஷ்ய உச்சத்தை அடைவதில்லை" என்று ஆசீர்வ தித்தார்.

நன்றி: முகநூல்

ஜன்னல் வழியே வீசிய காற்று அடுப்புத் தீயை அலைகழித்தது. ஒருநேரம் தீ கிழிந்த சேலை முந்தானைபோல உருவம் காட்டியது. மறுநொடி பாம்பு போல படமெடுத்து ஆடியது. விமலா தீயைக்குறைத்து தோசையைப் திருப்பிப்போட்டாள். கோதுமை தோசை நாலு மிளகு தட்டிப் போட்டு, சீரகத்தைத் தூவி ஒரு பெரிய வெங்காயம், பச்சைமிளகாய் நறுக்கி மாவின் தலையில் கொட்டியிருந்தாள். மதியசோறு மீறாத நேரங்களில் ரவா உப்புமாவையோ, கோதுமை தோசையையோ வைத்து சமாளிக்க வேண்டிய நிலைமை. வெறும் வயிறாய் படுப்பதில்லை. பசிக்கும் வயிற்றுக்கு எதையோ ஒன்றைப்போட்டு எரிகின்ற கொள்ளியில் தண்ணீரை ஊற்றி அணைப்பதுபோல் பசியையும் அணைத்தாகிவிடும். பிறகென்ன படுக்கைதான், கொட்ட, கொட்ட விழிப்புதான். விமலாவுக்கு சாமான்யத்தில் தூக்கம் வராது. குறுக்கே ஓடும் உத்திரத்தை வெறித்தபடி கிடப்பாள். இருட்டிலும் குளவிக் கூடு கட்டிய உத்திரம் பளிச்சென்று தெரியும்.

"விமலா, பசிக்குது சாப்புடலாமா.....?" மாரிமுத்து தயக்கமாய் கேட்டான். உரிமையோடு பேசி பல காலமாகிறது. எதொன்றுக்கும் ஒரு தடவைக்கு நாலுதடவை யோசித்தே பேச வேண்டியுள்ளது. விமலா தட்டில் தோசையைப்போட்டு ஓரத்தில் மதியக்குழம்பை ஊற்றி எடுத்து வந்து அவனிடம் நீட்டினாள். நாலு தோசை சாப்பிடும்போதே என்ற சந்தேகம் அவன் சும்மா கிடக்கும் நேரங்களில் மனதைக்குடையும். இடுப்புக்கு கீழே உணர்வுகளை நீத்துவிட்டது உடல்.

உடலில் பாதி உணர்விலும், மீதி உணர்வற்ற நிலையிலும் மனிதனாகவும், மரமாகவும் மாரிமுத்து இரட்டைவேடம் கட்டிக்கிடந்தான். வயிற்றிலும்

வரைதல்: கைலாசநாதன்

உச்சக்கட்டம்

இன்னொன்று கேட்கலாமா, வேண்டாமா என்கிற எண்ணம் உள்ளே ஓடிற்று. ஆவலாய் தின்னப்பறக்கிற வயிற்றுக்கு இருப்பு நிலை குறித்து புரியாதோ என்று அவனுக்குத் தோன்றும். எத்தனை போட்டாலும் அடங்காத வயிறு பானையளவு பெருத்துவிட்டதோ உணர்வை நீக்கியிருக்கக்கூடாதா இந்த கடவுள் என்றுதான் அவன் இப்போதெல்லாம் எண்ணுகிறான். விமலா அடுப்படியைச் சுத்தம் செய்து பாத்திரங்களை ஒதுக்கி வைத்தாள். தின்ற கோதுமை தோசை திம்மென்று நெஞ்சிலேறிக் கிடந்தது.

இத்தனைக்கும் இரண்டு தோசைதான் சாப்பிட்டாள்.

மணிக்குட்டி சுரவேகத்தில் பிதற்றினான். இரண்டு நாளாக அவனுக்கு சரியான காய்ச்சல். மாத்திரை போட்ட வேகத்தில் வேர்த்து வடியும் உடல் நேரமாக, ஆக தணலாய் தகிக்கத் தொடங்கிற்று.

"காய்ச்சல் மூணு நாள் இருக்கும். தொடர்ந்து மாத்திரை குடுங்க" என்று அரசாங்க ஆஸ்பத்திரி டாக்டர் எழுதித்தந்த மாத்திரைகளை முழுங்க வைப்பதற்குள் விமலாவுக்கு போதும், போது மென்றாகி விட்டது. "முழுங்கித் தொலை யேன்டா. ஏன் உசிரெடுக் குற....." என்று திட்டினாள். எல்லா கருமத்திற்கும் அவளே மெனக்கெட வேண்டியுள்ளதே என்கிற ஆற்றாமை. அவள் மகன் மீது கோபப்ப டும் போதெல்லாம் மாரிமுத்துவுக்கு தவிப்பாக இருந்தது. .

"மாத்திரையக் கொண்டா, புள்ளைக்கி நான் குடுத்து பாக்குறேன்" என்று சொல்லத் தோன்றியது. மாத்திரை, தண்ணீரை கையில் கொடுத்து மகனை அழைத்து வந்து அருகில் நிறுத்தி சகல வேலைகளும் விமலா செய்யவேண்டும்.

பின்பு மாத்திரையை வாயில் போடுவதென்ன பெரிய வேலையா....இந்த எண்ணம் தோன்றியதும் மாரிமுத்து கதவடைத்ததுபோல் வாயடைத்துக் கிடந்தான். விமலா ஓரம் கிழிந்த பாயை விசிறிப் போட்டாள். அது காற்றைக் கிழித்து தரையில் துவண்டு விழுந்தது.

பாயை வீசிய வேகத்தில் அவளின் மனநிலை புரிந்தது. அதற்கு மருந்து தடவுவதுபோல் ஒரு வார்த்தை சொன்னாலும் மௌனம் உடையும். உடையும் மௌனத்தின் பின்னால் போர்க்குரல் எழும்பலாம். அது துவந்த யுத்தமாகவும் நீளலாம். முடிவற்ற நீட்சியில், திரும்பவும் யதாஸ்தானத்தில் இருப்பு கொள்ள முயன்றால் அது தோல்வியிலேயே முடியும். அதனால் மாரிமுத்து வாய்மூடிப் படுத்திருந்தான். இருவருக்குமிடையேயான மௌனம் ஒரு கனத்த போர்வையை போர்த்திக்கொண்டு காத்திரமாகக் கிடந்தது. விமலா விளக்கணைத்துப் பாயில் விழுந்தாள். கண்கள் உத்திரத்தை வெறித்தன. மணிக்குட்டி வியர்த்து வடியக்கிடந்தான். மாரிமுத்து தூக்கத்தைக் கொண்டு வர பகீரத பிரயத்தனம் செய்து கொண்டிருந்தான். தூங்குவதைவிட தூங்குவதுபோல் நடிப்பதற்கு அதிகம் மெனக்கெட வேண்டியிருந்தது. அந்த மௌனக்கெடல் அடிக்கடி முனகும் விமலாவின் குரலில் தீவிரமாகும்.

"யப்பா.....யம்மா....." என்று அவள் திடீரென குரல் கொடுத்து புரண்டு, புரண்டு படுப்பாள். அவளின் அசைவில் பாய் ஒருவித நறநற ஒலியை எழுப்பும். மாரிமுத்து அசைவற்று கிடப்பான். விமலா முந்தானையால் விசிறிக்கொண்டாள். மேலே சுழலும் மின்விசிறி கடக்கடக் சத்தத்தை தந்ததேயொழிய காற்றைத் தரவில்லை. ஒரே வெக்கையாயிருந்தது. மனவெக்கை, உடல்வெக்கை இரண்டும்தான். ஒரு சொம்பு நீரூற்றினாலும் உடல் குளிர்ந்துவிடும். உணர்வுகளின் கொதிப்பில் மனசுக்குள் ஏறிக்கிடக்கும் கூடு உடலை தகிக்கவைக்கும்போது மேலுடம்பு குளிர்ந்தென்ன பிரயோஜனம். மூன்று வருடங்களாக உடம்பு கொதித்துக் கொண்டிருக்கிறது. சாலையின் மேல் கொட்டப்பட்டிருக்கும் வெயில்பட்ட தாரின் கொதிப்பு. காதலும், ஊடலுமாய், விரசமும், சரசமுமாய் கூடிக்கிடந்துவிட்டு இப்போது மூன்று வருடங்களாக சந்நியாச வாழ்க்கை.

"மணிக்குட்டி, தூங்கித் தொலையேன்டா..." என்று மாரிமுத்து கெஞ்சும்போது விமலா தலையிலடித்து கொள்வாள். மூன்று வயது மணிக்குட்டி " ஏம்ப்பா தூங்க சொல்லுத...?" என்று மழலையாக கேட்பான். "சொன்னா ஒனக்கு புரியாதுடா. நீ தூங்குனாத்தான் நாங்க சந்தோசமா இருக்கமுடியும்." மாரிமுத்து ஒருமுறை சொன்னபோது விமலா அவனை முறைத்தாள். "புள்ளைகிட்ட எதப்பேசுறதுன்னு ஒரு வெவஸ்தையில்லியா....வர, வர ஒங்களுக்கு வாய்க்கொழுப்பு ஜாஸ்தியாயிருச்சு" என்றவளுக்கு உள்ளூர சந்தோஷம்தான். சிமிழ் மாதிரி வீடு. அதில் சிட்டுக்குருவிகளாய் மூன்று ஜீவன்கள். மூவருக்குள்ளும் இழைந்தோடிய அன்னியோன்யம் அவ்வபோது அவர்களையே வியக்கவைக்கும். நல்லதாக உடுத்திக் கொண்டதில்லை. வகையாக சாப்பிட்டதில்லை. மாரிமுத்து வருமானம் அதற் கெல்லாம் இடம் கொடுத்ததில்லை. ஆனாலும் அகல் விளக்கின் சீரான சுடர் தரும் வெளிச்சம் போல் அங்கே மகிழ்ச்சி நிரம்பிக்கிடந்தது. சில நேரங்களில், அதிலும் குறிப்பாக இரவு வேளைகளில் கணவன், மனைவியின் நெருக்கமான தருணங்களில் அது பொன்போல் தகதகத்தது.

" நாலு சொவத்துக்குள்ள நடக்குறது வெளில தெரியாம அதுவோ பாட்டுக்கு குந்துனாப்ல குடும்பம் நடத்துதுவோ. வேளைக்கு ஆக்கி திங்குதுங்களா, பட்டினியா கெடக்குதுங்களான்னு

எதுவும் தெரியாது. எப்பவும் சிரிச்ச மொகமா வளைய வருதுவோ...” என்று பக்கத்துவீட்டு முத்துப்பேச்சி தன் புருஷனிடம் சொல்லிக்கொண்டிருந்ததை கேட்டபோது விமலாவுக்கு உள்ளுக்குள் சிலிர்த்தது. “வாங்குற சம்பளம் மொத்தத்தையும் செலவழிச்சிட்டா நாளைக்கி புள்ளைக்கின்னு எதுவும் சேத்து வைக்கமுடியாது. அதனால எண்ணி எண்ணித்தான் செலவு செய்யணும்” என்பாள்.

“நீ சொன்னா சரிதான்” என்று மாரிமுத்து தலை யாட்டுவான். எல்லாம் சீராகத்தான் போய்க் கொண்டி ருந்தது. அந்தநாள் மட்டும் அது நேராதிருந்திருந்தால் வெல்லப்பாகு தித்திப்பாய் வாழ்க்கை தித்தித்து கொண்டிருந்திருக்கும். வழக்கம்போல் எலுமிச்சை சோறு கட்டிக்கொண்டு வேலைக்குப்போன மாரிமுத்து இரண்டாவது மாடியிலிருந்து கால்தவறி கீழே விழுந்தான். முதுகெலும்பில் பலத்த அடி. விமலா மயக்கம் போட்டு விழுந்தாள். மாரிமுத்து வேலைமுடிந்து வந்ததும் இரண்டாம் ஆட்டம் சினிமா போகவேண்டுமென்று நினைத்து வைத்திருந்தாள். அதற்காக படி மல்லிகைப்பூ வாங்கி தொடுத்து வைத்திருந்தாள். எல்லாமே பாழ்.

மாரிமுத்து படுக்கையில் விழுந்து மூன்றாண்டுகள் ஓடிவிட்டன. ஆரம்பத்தில் அருகிலமர்ந்து ஆறுதல் சொன்ன விமலா கொஞ்சம், கொஞ்சமாக விலகிப்போனாள். அவள் சம்பாதித்தால்தான் குடும்ப வண்டி ஓடும் என்கின்ற நிலைமை. நல்ல வேளையாக நூறுநாள் வேலை கைகொடுத்தது. வருடத்தில் பாதி நூறு நாட்கள் வேலைக்கும், மிச்சம் சில்லறை வேலைகளுக்கும் போய் நாட்கள் ஓடின. வேலை செய்து, செய்து கைகள் காய்ப்பேறிக் கிடந்தன, மனதிலும்தான். மாரி முத்துவின் காதலில் பஞ்சுபோல் மிருதுவாய் இருந்த மனசு வரவர முரடு தட்ட ஆரம்பித்தது. அதோடு உடல் உபாதைவேறு. விமலா வேலைக்குக் கிளம்பி விட்டாள். சாப்பாடு, தண்ணீர் இத்தியாதிகளை மாரிமுத்துவுக் கருகில் கொண்டுவந்து வைத்துவிட்டு மணிக்குட்டியை கையில் பற்றி கதவை அறைந்து சாத்திவிட்டுப் போனவளை மாரிமுத்து வெறித்துப் பார்த்தபடி கிடந்தான். போய்வாரேன் என்று சொல்லக்கூட பிரியப்படாது அவள் அலட்சியமாக வெளியேறினாள். அவனுக்கு சாப்பாடு கொடுத்து, குளிக்க வைத்து, மலம் அள்ளி மாய்ந்து போகிறவளிடத்தில் தனக்கிருக்கும் எதிர்பார்ப்பு நியாயமற்றது என்று அவனுக்கு புரிந்து தான் தொலைக்கிறது. இருந்தும் கேடுகெட்ட மனசு அதற்காக அலைந்தது. விமலா அவனை சிரமப்பட்டு நகர்த்திக் கழிவுகளை சுத்தம் செய்யும்போது அவனுக்கு உடம்பே கூசிப்போகும். உடற் கூட்டுக்குள் ஒளிந்து கிடக்கும் உசிர் வதைபடுவதுபோல அவஸ்தை உழன்றெடுக்கும். பகல் முழுக்கத் தனிமை. வீடடைந்து கிடக்கும் அவனுக்கு அந்தத் தனிமையை சிநேகிதம் பண்ணிக் கொள்ளத் திறமையிருக்கவில்லை. வாழ்க்கை சலித்து போயிற்று. மணிக்குட்டி கூட இப்போதெல்லாம் அவனைக் கண்டும், காணாததும் போல போகிறான். இழுத்துவைத்துக் கொஞ்ச அவனுக்கு ஆசைதான். பயல் பிடி கொடுத்தால்தானே. “மணிக்குட்டி, இங்கவாடா.....” என்று கூப்பிட்டால், “நான் வெளையாடப்போறேன்” என்று அவன் தலைதெறிக்க ஓடுவான். அது தன் மீதான பச்சாதா பத்தை மாரிமுத்துவுக்கு மேலும் அதிகப்படுத்தியது. மாரிமுத்து ஆயாசத்துடன் பெருமூச்சு விட்டான். வெயிலேறி விட்டதற்கு அறிகுறியாக வீடு முழுக்க உஷ்ணமேறிக்கிடந்தது. கைக்கு எட்டும் தூரத்திலுள்ள சுவிட்சை அழுத்தி மின்விசிறியை ஓடவிட்டு உஷ்ணத்தை குறைத்துக்கொள்ள அவனுக்கு விருப்ப மில்லை.

விமலா, மணிக்குட்டியை பள்ளிக்கூடத்தில் விட்டு விட்டு நேரே வேலை நடக்குமிடத்துக்கு வந்தாள். அன்று ஆற்றுக்கரையை சுத்தப்படுத்தும் பணி. ஆற்றின் இருமருங்கிலும் ஏகத்துக்கு செடிகள் மண்டிக்கிடந்தன. அதில் நிறைய பாலிதீன் பைகள் சிக்கி காற்றில் படபடத்தன. கரைகளைச் சுத்தப்படுத்தும் ஏற்பாட்டின் பேரில் அரசாங்கம் தரும் கூலியை பெற்றுக்கொண்டு குப்பைக்கூளங் களை அள்ளிப்போட்டு, செடிகளை பிடுங்கி எறிந்து கரையைத் தூய்மை படுத்தவேண்டும். விமலாவைப் போலவே இருபது பேருக்குமேல் பெண்களும், பத்து ஆண்களும் அங்கே கூடியிருந்தனர். ஆண்கள் மத்தியில் நின்றிருந்த கனகராசு அவளைப் பார்த்து சிரித்தான். விமலா ஒருகணம் தயங்கி பின் லேசாக சிரித்து வைத்தாள். அவனும் வேலைக்கு வரும்போதெல்லாம் அடிக்கடி அவளைப்பார்ப்பதும், சிரிப்பதுமாயிருக்கிறான். ஆரம்பத்தில் எரிச்சல்பட்டாலும் என்றாவது ஒருநாள் அவன் பார்க்கவில்லையென்றால் விமலா தவிப்பாய் உணர்ந்தாள். முறுக்கேறிய உடலுடன் நின்றிருந்த அவ னின் வசீகரப்பார்வை விமலாவை தடுமாறச் செய்தது. அவளும் நல்ல அழகுக்காரிதான். அதிலும் இப்போது துடைத்துவைத்த குத்துவிளக்குபோல் பளீரென்றி

ருந்தாள். உள்ளே சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்த தீ அவள் மேனியெங்கும் தகதகத்து ஜொலித்ததில் அவள் நெருப்பின் சாயலில் பளபளத்து நின்றிருந்தாள். துளி பட்டாலும் பற்றிக்கொள்ளும் நெருப்பு மொத்த முழுவதையும் துவம்சம் செய்தே அடங்கிப் போகும். கனகராசுவுக்கு நெருப்பில் குளிக்க ஆசை. அந்நெருப்பு வெகுநாளாக கனன்று கொண்டிருப்பது அவனுக்குத் தெரியும்.

அதனால் கள்ளப்பூனை போல நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். மதியநேரம். விமலா வுக்குச் செடிகள் பிடுங்கி, பிடுங்கி உள்ளங்கைகள் எரிந்தன. பெருமூச்சு விட்டு பெண்களோடு மரத் தடியில் ஒதுங்கினாள். ஆளாளுக்கு கொண்டுவந்திருந்த டப்பாவை திறந்து பேசிக்கொண்டே சாப்பிட அவளுக்கு வயிறு முட்டிற்று.

"வந்துடுறன்" என்றவள் எழுந்து கொஞ்சதூரம் நடந்துவந்து குத்துச்செடிக்கு பின் மறைந்தாள். வயிறு தளர்ந்து எழுந்தபோது கனகராசு பின்னால் நின்றிருந்தான். பார்த்தவளுக்கு திக்கென்றிருந்தது. "ஒன்னையப் பாக்கத்தான் வந்தேன்" பார்வை துளைத்தது. அவள் தடுமாறி தலைகுனிந்து கொண்டாள்.

"ஆண்டவன் ஒன்னைய இந்த நெலைக்கி ஆளாக்கியி ருக்ககூடாது. " அவள் பேசாது நின்றிருந்தாள். "பொழங்காத எடத்துல செலந்தி வலை கட்டி நாஸ்தி பண்ணிரும். செலந்தி மட்டுமில்ல, கரப்பான்பூச்சி, தேளெல்லாம் கூட வரும். அதுவே அடிக்கடி பொழங்குனா எடம் அம்புட்டு சுத்தமா பளிச்சின்னு இருக்கும்." சொல்லிக்கொண்டே மெல்ல அவள் கரத்தைப் பற்றினான். விமலாவின் இதயத்துடிப்பு அதிகரித்தது. உடலெங்கும் படர்ந்து பரவிய வெம்மை அவளின் கட்டுப்பாட்டிலிருந்த பெண்மையை கபளீகரம் செய்துவிடும் போலிருந்தது. ஒருகணம் தான். "விமலா....." கருப்பாயி குரல் கொடுத்தாள். விமலா சுதாரித்துத் கொண்டு வெடுக்கென அவனிடமிருந்து கையை பிடுங்கிக் கொண்டு ஓட்டமாய் ஓடிப்போனாள். "இவ்ளோ நேரம் அங்க என்னாடி பண்ணுன....?" "அது.....அதுவந்து....."

"பேயப் பாத்தாப்ல ஏன்டி இப்புடி வேர்த்து வடியிற..?"

"யக்கா.....அங்க பெரிய பாம்பு ஒண்ணு. பாத்ததும் மயக்கமே வந்துருச்சி...." தட்டுத்தடுமாறி பொய்யைச் சொல்லி சமாளித்தாள். "சரி, சரி சீக்கிரம் சோத்த தின்னு. நேரமாவுது." விமலா அமர்ந்தாள். கைகள் நடுங்கிற்று. ஒருவாய் சோறு கூட உள்ளிறங்கவில்லை. டப்பாவை மூடிவைத்தவள் தண்ணீரை மடக்மடக்கென்று குடித்தாள். உடம்பு வெடவெடத்தது. விமலா வேலையிலிருந்து பாதியிலேயே வந்துவிட்டாள். அவளைப்பார்த்த மாத்திரத்தில் மாரிமுத்துவிடத்தில் ஒரு பரபரப்பு தொற்றிக் கொண்டது. தனியாளாய் படுத்து கிடந்தவனுக்கு அவளைப் பார்த்ததும் ஒரு ஆசுவாசம் கிடைத்தது போலிருந்தது. பாதி ராத்திரி. அசந்த தூ க்கத்திலிருந்த மாரிமுத்து, மேலே ஏதோ அழுத்துவது போலிருக்க திடுக்கிட்டு விழித்தான். விமலா அவனை இறுக அணைத்துக் கிடந்தாள். "வி..விமலா....." அவள் குமுறி, குமுறி அழுதாள். குத்துச்செடிக்கருகில் நடந்ததை, நடக்க இருந்ததை எண்ணி தாளமாட்டாமல் கதறினாள். மாரிமுத்து விக்கித்துப் போனான். பேச வாய்வரவில்லை. பல நாட்கள் பேசாமல் கிடந்ததில் அவளிடம் எப்படி பேசுவது என்பதான தயக்கம். விமலாவுக்கு நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது. மாரிமுத்துவுக்கு மூச்சு முட்டிற்று. அவள், அவனை நெஞ்சோடு அணைத்தபடி கிடந்தாள். அவன் கைகள் அவளைப் பற்றிக்கொள்ள துடித்தன.. ஒரு ஸ்பரிசம், ஒரு கனிவான பார்வை இதிலெல்லாம் அடங்கப்போவதில்லை தாபம். அடுத்தடுத்து முன்னேறி உச்சத்தைத் தொடவேண்டும். அப்போதுதான் அது குளிரும். சாந்தமடையும். களைப்படைந்து உடலை விட்டு விடுதலையடையும். அதற்கெல்லாம் வாய்ப்பே இல்லையெனும் பட்சத்தில் என்ன செய்து என்ன..... மாரிமுத்து இப்போது முழுமரக்கட்டையாய் உணர்வுகளற்று கிடந்தான்.

மஞ்சரி எழுத்தாளர் கவனத்திற்கு

உங்கள் எழுத்துகளை கூட்டவோ குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ மஞ்சரியின் ஆசிரியர் குழு உரிமை கொண்டுள்ளது. உங்கள் கதைகளை 5 பக்கங்களுக்கு மேற்படாமல் முடிந்தால் பாமினி எழுத்துருவில் 12 அளவில் தட்டச்சுப் பொறித்து அனுப்புங்கள்.

பெத்தாச்சி

வரைதல்: கைலாசநாதன்

இது இவளது காரணப் பெயரா, எதனால் இந்தப் பெயர், யாருக்கும் சரியாகத் தெரியாது. ஆனாலும் அந்த ஊரைப் பொறுத்தவரை சிறுசு முதல் பெரிசுவரை அவள் எல்லோருக்கும் பெத்தாச்சிதான்.. பெத்தாச்சி , தூக்கிவாரிச் செருகிய கொண்டை, குறுக்கு கட்டுச் சேலை, கொடுப்பில் மட்டும் கன்னம் உள்ளே போகாதவாறு இரண்டு பல்லு, நிமிர்ந்த நடை இது தான் பெத்தாச்சி. பெத்தாச்சி அறிந்த காலம் தொட்டே தனியாகவே வாழ்கிறாள். கணவன் சின்ன வயதிலேயே இறந்து விட்டதாகக் கேள்வி, பெத்தாச் சிக்கு ஒரு மகன் இருப்பதாகவும் , அவன் போன இடத்திலேயே யாரையோ காதலித்து மணம் முடித்ததாகவும், பெத்தாச்சிக்கு தன் மருமகளை அவன் மணமுடிக் கவில்லை என்ற கோபத்தில் இன்றுவரை மகனோடு கதைப்ப தில்லை என்றும் ஊரவர் கதைக்கக் கேள்வி, எத்தனை ஆண்டுகள். இன்றைக்குப் பெத்தாச்சிக்கு எப்படியும் ஒரு எழுவது வயது வரும், யார் கையையும் எதிர்பாராமல் தானே, கூலி வேலை செய்து, தன் வயிற்றைக் கழுவிக் கொண்டிருக்கும் வைராக்கியம் பிடிச்ச கிழவி என்னதான் வைராக்கியம் பிடிச்ச கிழவி என்றாலும், அவளும் தாய் தானே, அதுகும் இப்போது கொஞ்சம் ஏலாமலும் போக , அவளது மகனின் நினைப்பு வந்து வந்து போனாலும், அவளுக்கு தானாக மகனோடு தொடர்பு கொள்ள தன்மானம் விட்டுக் கொடுக்கவில்லை, அவள் தனக் குள்ளே முடங்கிப் போனாள்.. பெத்தாச்சிக்கு ஒத்தாசை செய்கிற பக்கத்துவீட்டு மனிசன் கிழவியின்ர நிலமையைப் பார்த்துக் பெத்தாச்சியின் மகனுக்குக் கடிதம் போட. அவனுக்கும், தாய் எப்போது கூப்பிடுவாள், கதைப்பாள் என்று காத்திருந்தவன். இந்தக் கடிதத்தைப் பயன்படுத்தி எப்படியாவது தாயை அழைத்து வந்து தன் கண்ணெதிரில் வைத்துப் பார்க்கவேண்டும் என்ற நினைப்பில் தாயை வெளிநாடு கூட்டி வருவதற்கான ஆயத்தங்களைச் செய்து கூட்டிப் போகவும் வந்து விட்டான்.

இத்தனை காலமும் வைராக்கியமாக இருந்த கிழவிக்கு இப்ப இருப்புக் கொள்ளவில்லை. தன் வாழ்நாளில் தாவணி போட்டறியாத கிழவிக்கு இப்போது சட்டை போட்டு தாவணி போட ஒரே கூச்சமாக, கிழவிக்கு வெட்கமாக இருக்கிறது, சீவியறியாத தலைக்கு உச்சி பிரித்து தலை சீவி கொண்டை போட்டு,கிழவியைப் போட்டுப் படுத்தின பாட்டில ஊரே பெத்தாச்சியைப் பார்க்கவர பெத்தாச்சி வெட்கத்தில

நெழிஞ்சது மனிசி

" இத்தனை வருசமாக இந்த அழகை எல்லாம் எங்க ஆத்தா ஒளிச்சு வைச்சிருந்தா." என்று யாரோ சொல்லக் கேட்டு கிழவி பட்ட பாடு... அதை ஏன் சொல்லுவான்..ஊரே திரண்டுவிட்டது பெத்தாச்சியை வழியனுப்ப, சாப்பாடு போட்டு வளர்த்த பூனையும் பெத்தாச்சியின் காலோடு வந்து உரசி உரசிப்போக, நன்றியோடு வாலையாட்டிக் கொண்டு நின்ற நாயும், என்ன காரணத்தினாலோ பெத்தாச்சி என்று அழைத்து நின்ற

ஊர்ச்சனமும் கலங்க, பெத்தாச்சி உடைந்தே போனாள்..கூட்டிப் பெருக்கிய மண்ணை.. சாதி சனத்தை விட்டுப் பிரிய மனம் இன்றி கிழவி மகனோடு பயணமா கிறாள்..

"பாட்டி வந்திட்டா..ஓடி யாங்கோ.." என்று மகனை அழைத்தபடி உள்ளே நுழைகிறான், பெத்தாச்சியும் பேரனைப் பார்க்கிற சந்தோசத்தில் கண்ணை அங்கும் இங்கும் தேடவிடுகிறாள். வந்த பையன். "காய் கிறானி.." என்று சொல்லி விட்டு அவன் கைப்பேசியில் மூழ்கிவிட்டான். ஆசை ஆசையாக கதைக்கவேணும், கொஞ்சவேணும் என்று நிறையக் கனவுகளோடு வந்த கிழவியின் முதற்கனவே உடைந்து போனது..

வீட்டுக்குள்ள இருந்து வந்த மருமகளை முதன் முதலாகப் பார்க்கப் போகிற சந்தோசம் கிழவிக்கு

" இருங்கோ அன்ரா வேலைக்குப் போக நேரமாயிடுத்து.. பிறகு வந்து ஆறுதலாகக் கதைப் போம்.." என்றபடி கிழவியின் பதிலை எதிர்பாராமலே மருமகள் போய்விட்டாள்.. கிழவிக்கு எல்லாமே புதுமையாகவும், புதிரா கவும் இருக்கிறது. நேரமாற்றம் கிழவிக்கு தூக்கமும் வரவில்லை, பலகைக் கட்டிலில் படுத்த கிழவிக்கு, மெத்தையில் தூக்கமும் வரவில்லை..

"அன்ரா படுத்தாச்சோ... ஒரே அலுப்பாக இருக்கிறது.. காலையில கதைப்பம் .." என்று மருமகளும் தூங்கப் போய்விட்டாள்.. இப்படியே நாட்கள் நகர, பேச்சுத் துணைக்கும் ஆளில்லாமல், அறையிலேயே நாலு சுவருக்குள் ளேயே கிழவியின்ர வாழ்க்கை. குளத்தில, பனம்பழத்தின் கழியை தலையில பூசி,குளத்து மண்ணை உடலெல்லாம் குளிச்சு நீராடின கிழவிக்கு, இதெல்லாம் ஒரே காகக் குளிப்பாகவே இருந்தது. கிழவி நாலு சுவருக்குள் முடங்கியது போலவே, அவளது ஆசைகள், கனவுகளும் முடங்கி விட்டன.மகன் இவ்வளவு காசு செலவழித்துக் கூட்டி வந்துவிட்டானே என்று பொறுத்துக் கொண்டிருந்தாள். பிள்ளைகள் வெளியே போகும் போது கிழவியை வீட்டில் வைத்துப் பூட்டிப் போட்டுப் போகும் போதெல்லாம்

"கடவுளே ஏன் என்னை இப்படிச் சோதிக்கிறாய்.." என்று ஊரில கும்பிட்ட சாமியை எல்லாம் வேண்டினாள் . ஊரில யாரென்றே தெரியாத சனம் எல்லாம் "பெத்தாச்சி" என்று அழைப்பதில் மகிழ்ச்சியாக இருந்த கிழவிக்கு, இங்கு யாருக்குமே தன்னோடு ஆறுதலாகப் பேச நேரம் இல்லாமல் இருப்பது கண்டு கலங்கிப் போனாள். இந்த வாழ்க்கை மீது அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டுவிடுகிறது. அவள் தனக்குள் எப்படியாவது ஊருக்குப் போய்விட வேண்டும் என்று முடிவையெடுத்து அதனை மகனிடமும் சொல்லிவிட்டாள்..

"இதுக்குத் தான் சொன்னனான் அவவுக்கு இங்கத்தே வாழ்க்கை ஒத்துவராது, வேண்டாம் என்று படிச்சுப் படிச்சு சொன்னன் கேட்டியளே.. காசைக் கரியாக்கிப் போட்டு நிக்கிறியள்.." என்று மருமகள் தன் காதுபடவே மகனோடு பேசியதையும் கேட்டாள்..

" அம்மா போனாய் என்றால் இனி எந்த சென்மத்திற்கும் உன்னைப் பார்க்க வரமாட்டன், கடைசிக் கடமை செய்யவும் வரமாட்டன்.. யோசிச்சு முடிவெடு.," என்று மகன் சொன்னதையும் கேட்டது கிழவி.. ஆனால் கிழவி ஊருக்குப் போவதென்றே தீர்மானமாகி விட்டாள்...விமானம் மேலே மேலே போன போது தன் மண்ணை, மக்களை, உறவுகளை, கோயில் குளத்தை, தான் வளர்த்த நாய் பூனை விட்டுப் பிரிவதாக எண்ணிய கவலைகளும் கூடிக் கொண்டே போனது..

இப்போது விமானம் தரையிறங்கும். தான் வாழ்ந்த மண்ணில் தன் சொந்தங்களை, சாதி சனத்தைப் பார்க்கப் போகிறேன் , இந்த சேலையைக் கழட்டி எறிந்து விட்டு, குறுக்குக் கட்டோடு, கொண்டையைத் தூக்கிவாரி முடிஞ்சு கொண்டு.. எங்கடை ஒழுங்கைகளில் நடக்கப் போகிறேன். "பெத்தாச்சி.. பெத்தாச்சி.." என்று ஊர்ச்சனம் அழைக்கும் அன்பில் நனையப் போகிறேன்.. என்று சந்தோசத்தில் மிதக்கும் விமானம் போலவே பெத்தாச்சியும் மிதந்து கொண்டிருந்தாள்...

கழிவிரக்கம்

பாடசாலை நாட்களில் அந்த வீதி, மாணவர்களால் நிரம்பி வழியும். திலீபன் கரவெட்டி தபாற்கந்தோருக்குப் பக்கத்தில் இருந்து வெளிக்கிட்டு வந்து நெல்லியடி சந்திக்கு வந்ததும் பாலேந்திரனும், சிவலிங்கமும் எப்போதும் போல் அவனுக் காகக் காத்திருந்தார்கள். மூவரும் மாறி மாறிக் கதைத்துக் கொண்டு வரும் போதுதான், ஒழுங்கையடியில் நின்று தன்பாட்டில் கதைத்துக் கொண்டிருக்கும் அந்த மனிதனின் முகம் தென்பட்டது. என்னவெல்லாமோ தன் வாய்க்கு வந்த படிக் கதைப்பார். இடைக்கிடை ஆங்கிலச் சொற்களையும் சொல்வார். 'UNNATURAL OFFENSE' என்று அடிக்கடிக் கூறிக்கொண்டிருப்பார். இப்ப கொஞ்சக்காலமாகத்தான் அந்த ஒழுங்கையடியில் நின்று அலட்டிக் கொண்டிருக்கிறார். இதற்கு முன்பு எங்கேயிருந்தார் என்று ஒன்றும் விளங்கவில்லை. திலீபன் பாலுவிடம், "மச்சான்! இவரைப் பற்றிக் கொஞ்சம் ஆரிடமாவது கேட்டு அறிஞ்சு சொல்லன்" என்று முதல் நாள் வேண்டுகோள் விடுத்திருந்தான். பாலு, "மச்சான்! நீ நேற்று சொன்ன மாதிரி சில பேரிட்ட கேட்டனான், அவர் கொஞ்சம்..." என்று தலையைத் தொட்டுக் காட்டினான்.



வரைதல்: கைலாசநாதன்

"அவர் மிக்க நாள் அந்த மாதிரி ஆக்கள் இருக்கிற ஆஸ்பத்திரியில் இருந்தவராம், இனி ஏலாது எண்டு ஊருக்கு திருப்பி அனுப்பிச்சிட்டினமாம்" அவர் இங்கிலீஸ்ல என்ன சொல்றார் என்று ஒருத்தருக்கும் வெளங்கில்லையாம்" என்றான். "அப்ப மாஸ்டர்ட்ட கேப்பம்" என்றான் சிவா.

"இன்னொண்டு சொல்ல மறந்திட்டன். அவரின்ற பெயர் சுப்பிர மணியமாம்" என்றான் பாலு. கொஞ்சம் 'அப்பிடி-இப்பிடி' என்றால் இந்தப் பொடியளுக்கு வேகமாக மூளை வேலை செய்யும். "இவருக்கு என்ன பெயர் வைக்கலாமெண்டு போய் கிளாஸ்ல கதைச்சி முடிவு செய்வம்" என்று பள்ளிக்கூடத்தை நோக்கி நகர்ந்தார்கள். ஆங்கிலப் பாட நேரத்தில் வேலுப்பிள்ளை ஆசிரியர் வகுப்பிற்குள் நுழைந்தார். அப்போது பாலு எழுந்து "சேர்! 'UNNATURAL OFFENSE' என்றால் என்ன?" என்றான். ஆசிரியரின் முகம் கடுமையாகியது. "உமக்குக் கட்டாயம் தெரிய வேண்டுமே? இந்தச் சொல்லை எங்க பாத்தனீ?" என்று கேட்டு விட்டு மேசையைத் திரும்பிப் பார்த்தார். பிரம்பு அங்கே இருந்து கொண்டு எல்லோரையும் பார்த்து சிரித்தது.

"வழியில ஆரோ சொல்லிச்சினம்" என்று நடுக்கத்துடன் கூறினான். "இனிமே உந்தக் தேவையில்லாத கேள்வியெல்லாம் கேக்கவேண் டாம், 'வழியில் அவன் சொன்னான்-இவன் சொன்னான்' என்று இங்கு வந்து சொல்ல வேண்டாம். 'டெக்ஸ்ட் புக்'ஸைப் படியும் 'பேப்பரை'ப் படியும் அது போதும்" என்று அறம்புறமாய் அர்ச்சனை செய்ததைக் கேட்டு திலீபனும் சிவாவும் கைகளால் தங்கள் வாய்களைப் பொத்திக் கொண்டு சிரித்தார்கள். அன்று பாடசாலை விட்டுப் போகும்போது அந்த மனுஷன் ஒழுங்கையடியில் நின்று கொண்டு தன்பாட்டில் கதைத்தபடி நின்றார். "சரி! கவனியாதது போல் கதைத்துக் கொண்டபடி செல்வோம்" என்று கூறிக்கொண்டு வந்தவர்கள், அவரைக் கடந்ததுதான் தாமதம் "சுப்புராமணியம்" என்று கத்திவிட்டு ஓடிப்போய்த் திரும்பிப் பார்த்தார்கள். அவர் இவ்வளவு நாளும் இல்லாமல், முதன் முதலில் இப்படிக் கத்திவிட்டு ஓடிப் போன வர்களின் திசையை அதிர்ச்சியுடன் பார்த்தபடி நின்றார். இதைப் பெரிய சாதனையாக எண்ணி மூவரும் சிரித்து மகிழ்ந்தபடி நடந்தார்கள்.

இரண்டு வாரம் கழிந்தது. ஒரு நாள் திலீபன் வெளிக் கிட்டு கிளம்பி வந்து சந்தியை வந்தடைந்தான். ஆனால், நண்பர்கள் வரவில்லை. அதற்குள் கொப்பி சிலவற்றை வாங்கி வந்திடலாம் என்று அருகிலிருந்த புத்தகக் கடைக்குள் நுழைந்தான். திரும்பி வந்து பார்த்தபோதும் அங்கு இல்லை. மெதுவாகக் கல்லூரியை நோக்கி நடந்தான். தனித்துச் செல்வது ஏதோ ஒரு மாதிரியாக இருந்தது. கொஞ்ச தூரம் நடந்ததும்தான் அந்த மனுஷன் ஒழுங்கை அடியில் நிற்பது தெரிந்தது. எப்படியிருந்தாலும் அந்த மனுஷனிடமிருந்து தப்ப முடியாது. எப்படியும் அடையாளம் கண்டு கொள்வார். சுற்றுமுற்றும் பார்த்தான் பெண் பிள்ளைகள் மூன்று நான்கு பேர்கள் சென்று கொண்டிருந்தார்கள். மெல்லமாகப் போய் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். "என்னடி இவன் பெட்டையளுக்கு பின்னால் நடந்து வாறான், விசரோ? தள்ளியும் வாரானில்லே", என்று ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். அவ்விடத்தைக் கடந்த போது, அவர் அவனை அடையாளம் கண்டுவிட்டார் போலும். உற்றுப் பார்த்துவிட்டு, அவர் காலை ஒரு அடி எடுத்து வைத்ததுதான் தாமதம் முன்னால் போய்க் கொண்டிருந்த பத்மாவை இடித்துத் தள்ளி விட்டு வேகமாக ஓடத்தொடங்கினான், திலீபன். இதைச் சற்றும் எதிர்பாராத பத்மாவின் கையிலிருந்த புத்தகங்கள் எல்லாம் சிதறி விழுந்தன. விழப் போனவளை நண்பிகள் பிடித்து கொண்டார்கள். சிதறி விழுந்த புத்தகங்களை எல்லோருமாக சேர்த்துக் கொடுத்தார்கள். ஓடியவன், காளி கோவிலடியில் நின்ற சில சிரேஷ்ட மாணவர்களோடு சேர்ந்தவாறு நின்று கொண்டான். அதற்குள் சுப்ரமணியத்தாரும் தன்னுடைய வேகத்தில் ஓடிவந்தார். அவ்விடத்தையும் தாண்டி 'தான் ஏன் வந்தேன்?' என்பதையே மறந்து ஓடிக் கொண்டிருந்தார். அவர் ஓடியதைப் பார்க்க விநோதமாக இருந்தது. காலை ஒவ்வொன்றாக மேலே தூக்கி, சைக்கிள் விடுவதைப் போல் சென்று கொண்டிருந்தார். அவர் போகிற போக்கைப் பார்த்தால், வதிரி, அல்வாய் எல்லாவற்றையும் தாண்டி வல்வெட்டித்துறைக் கடற்கரைக்குப் போய்த்தான் நிற்பார் போல் தெரிந்தது. இன்னும் சொன்னால் நவரத்தினசாமி, ஆனந்தன் ஆகியோர் போல் பாக்கு நீரிணையைக் கடந்து இந்தியாவில் போய் கால்பதிப்பார் போல் விளங்கியது. இதைப் பார்த்த சிரேஷ்ட மாணவன் கந்தசாமிக்கு கடும் கோபம் வந்தது. திலீபனைப் பார்த்து அவன் "டேய்! உங்களுக்கெல்லாம் என்ன விசரே பிடிச்சிருக்கு. அந்த வயசான மனிஷனைப் போட்டு ஏன் வதைக்கிறியள்?" எனச் சத்தமிட்டான். திலீபனுக்கு அவன் கூறியது சற்றும் பிடிக்கவில்லை. அவனும் பதிலுக்கு "நீர் மட்டும் என்ன புனிதமானவரே?' 'நேற்று ஊரார் வீட்டு மாமரத்துக்குக் கல்லாலெறிந்த நீர்தானே?" என்றான். "என்னடா சொன்னனீ? நான் கல்லெறிந்தனோ, நீ கண்டியே?" என்று சீறிக் கொண்டு பாய்ந்தான். கந்தசாமி. மற்ற நண்பர்கள் சேர்ந்து அவனைப் பிடித்திருக்காவிட்டால் பெரும் கைகலப்பு தான் ஏற்பட்டிருக்கும். அதற்குள் பத்மா கோபக் கனலில் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க நண்பிகளுடன் வந்து சேர்ந்தாள். திலீபன் அவள் முகத்தைப் பார்க்கப் பயந்து போய், "பத்து! ஏதோ அவசரத்தில் வந்ததில் தப்பு நடந்திட்டுது, மன்னிச்சிடு" என்றான். "இஞ்சேர்டா! 'பத்து'வாம் என்றுவிட்டு, இஞ்ச பார். தாய் தகப்பன் எனக்கு வச்ச பேர் பத்மா. அத விட்டுப்போட்டு 'பத்து', அது-இது எண்டு கொஞ்சுறீரே? உன்ர மூஞ்சுக்கு ஆரும் காதலிப்பினமே?" என்று விட்டு பின்னால் திரும்பி "கமலா! நீ இவனைக் காதலிப்பியே?" என்றாள். "தூ! இந்த மூஞ்சிக்கு காதலாவது, கத்தரிக்காயாவது. வாடி போவோம்" என்று எல்லோருமாகப் புறப்பட்டார்கள். போக முதல் பத்மா கோபம் தணியாமல், "இரு இரு, கேட்டடியில ஏரம்பர் நிற்பார். சொல்லிக் குடுக்கிறன்" என்று திலீபனைப் பார்த்துக் கூறிவிட்டுச் சென்றதும். அவன் அவளைப் பின்தொடர்ந்தபடி, "பத்மா! வேண்டாம். என்னை விட்டுடு நான் உன்ர பக்கமே இனி வரமாட்டன்" என்றான், கெஞ்சிக் கொண்டே. அவள் எதுவும் கேளாததுபோல் நடந்தாள். இப்போது பள்ளிக்கூட கேட்டுக்கருகில் வந்து விட்டாள்.நல்ல வேளை, ஏரம்பர் கொஞ்சம் தள்ளி நின்றார். அவர் 'பென்ஷன்' வயதில் இருப்பவர். எப்போதும் பிரம்பும் கையுமாக நிற்பவர்.

வடமாகாணத்தை விடுவோம்,

இலங்கையிலேயே அவரைப் போல பிரம்பைக் கையாளக்கூடியர் யாருமில்லை வெளுத்து எடுத்துவிடுவார். திலீபன், பயத்துடனேயே மெதுவாக நழுவி, ஓட்டமும் நடையுமாக வகுப்பை நோக்கி சென்றான். மூச்சு வாங்கியவாறே திரும்பிப் பார்த்தான். பெட்டைகள் ஏரம்பரைத் தாண்டி தங்கள் பாட்டில் போய்க் கொண்டிருந்தார்கள். "நல்ல வேளை தப்பினேன்' என்று நெஞ்சைத் தடவிக் கொண்டே, வகுப்பறையைச் சென்றடைந்தான். வீட்டில் அன்றிரவு படித்துக் கொண்டிருந்த நேரம், அவனுக்கு அன்று நடந்தது எல்லாம் ஒவ்வொன்றாக நினைவுக்கு வந்தது.

தன்னைக் கண்ட சுப்பிரமணியத்தார் தன்னைக் கலைத்துக் கொண்டு வருவதை உணர்ந்து, பத்மாவை இடித்துத் தள்ளிக் கொண்டு ஓடிய போது, சிரேஷ்ட மாணவன் கந்தசாமி தன்னைக் கடிந்து கொண்டதால், பதிலுக்கு அவனுடன் சண்டைக்கு தான் ஆயத்தமானது எல்லாம் ஒவ்வொன்றாக நினைவுக்கு வர, தன்மீதுதான் எல்லாக் குற்றங்களும் இருப்பதை உணர்ந்தான். மனம் கனத்தது போலிருந்தது. அம்மா, அப்பாவின் நினைவு வந்தது. அவர்கள் தன்மீது எந்தளவு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பது மனதில் ஓடியது. விடிய வெள்ளென எழுந்து, அம்மா கொடுக்கும் கோப்பியைக் குடித்துவிட்டு, கஞ்சிக் கலயத்தைத் தூக்கிக் கொண்டு சென்று, நாள் முழுதும் தோட்டத்தில் பாடுபட்டு ழைத்து விட்டு பின்னேரம் வீடு வந்து சேரும் அப்பாவை எண்ணிப்பார்த்தான். அது மட்டுமல்ல, பாடசாலையில் இறுதி வகுப்பை அடைந்து விட்ட தன்னை ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் என ஆயிரம் கண்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கின்றன என்பதை எண்ணிப்பார்த்தபோது வெட்கமாக இருந்தது. இனிமேல் இவ்வாறான தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென தீர்மானித்துக் கொண்டான். படிப்பில் கவனம் செலுத்தவேண்டும் என்ற எண்ணம் தலை தூக்கியது. நாளை காலை, முதல் வேலையாக பாலுவிடமும், சிவாவிடமும் இதைச் சொல்லிவிட வேண்டும் என்று முடிவெடுத்தான். இப்படியான பல குழப்பமான எண்ணங்களோடு அப்படியே தூங்கிப் போனான். நாட்கள் கழிந்தன. ஒவ்வொரு மாணவனினதும் எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கும் பரீட்சைகள் முடிவுகள் வந்து சேர்ந்தன. சிலர் கண்ணைத் துடைத்து விட்டுப் பார்த்தார்கள். சிலர் கன்னத்தில் கைவைத்துக் கொண்டார்கள். ஆனால் திலீபன்.. திலீபன்.. கண்ணைத் திறந்து பார்த்தான். நண்பர்களும், ஆசிரியர்களும் "வாழ்த்துக்கள் திலீபன்!" - ஆச்சரியமும், சந்தோஷமும் கலந்தவர்களாக கைகளை நீட்டியபடி வந்து கொண்டிருந்தார்கள். பாராட்டுக்கள் குவிந்த வண்ணமிருந்தன. அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள் என விழாக்களும், ஒன்று கூடல்களுமாக காலம் நகர்ந்தது.

மருத்துவபீடத்துக்கான அனுமதியும் இலகுவாகவே கிடைத்தது. சிநேகிதர்கள் இருவருக்கும் சுமாரான பெறுபேறுகள் வந்திருந்ததால் மருத்துவ பீட அனுமதி கிடைக்கவில்லை. என்றாலும், நண்பனின் வெற்றியை தங்கள் வெற்றி போல் நினைத்து சந்தோஷப்பட்டார்கள்.

வருடங்கள் கடந்தன. பல்கலைக்கழகத்தில் புதிய நண்பர்கள் பலர் கிடைத்தாலும், தன் பழைய நட்பை திலீபன் மறக்கவில்லை. நண்பர்களுக்குக் கடிதம் எழுத மறப்பதில்லை. படிப்பை வெற்றியுடன் நிறைவு செய்த பின், கண்டி பெரியாஸ்பத்திரியில் நியமனம் கிடைத்தது. சிநேகிதர்கள் இருவரும் ஊரிலே ஒரு 'பார்மஸி' நடத்தி வந்தார்கள். ஓரளவு வசதியாகவும் இருந்தார்கள். நீண்ட நாட்களுக்குப் பிறகு, ஊருக்குப் போகும் வாய்ப்பு கிடைத்தது. இப்போது வைத்தியராகிவிட்டதால், இனி 'அவன்' இல்லை 'அவர்'. டொக்டர் திலீபன் சந்திக்குச் சென்றவர், பாலுவின் பார்மஸிக்கு முன் நின்றார். பார்மஸி முன்னைவிட சிறப்பாக முன்னேறியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியுற்றார். பாலு கட்டித் தழுவி வரவேற்றார். சிவா ஒரு வேலையாகச் சென்றிருப்பதாகவும், பின்னேரம்தான் கடைக்கு வந்து சேர்வார் என்பதையும் பாலு சொன்னார். ஆத்ம நண்பர்கள் நீண்ட நாளைக்குப் பிறகு சந்தித்தால் கேட்கவும் வேண்டுமோ?! இவ்வாறாக, பாலுவிடம் பலதையும் பத்தையும் கதைத்துக் கொண்டிருந்தபோது, சட்டென்று நினைவுக்கு வந்தவராக,
"மச்சான்! அந்த மனுஷனைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறது" என்றார்.
"எந்த மனுஷன்?" என்றார், பாலு.
"அதுதான் மச்சான்! பள்ளிக்கூடம் போறவழியில் நின்று தன் பாட்டில் கதைத்துக் கொண்டிருப்பாரே.."
"ஓம், ஓம் அவர் பெயர் சுப்பிரமணியம்"
"அவர்தான்.. அவரைப் பற்றிய நினைவு அடிக்கடி வந்துபோகும்.. நாங்கள் சின்ன வயதில் செய்த அட்ட காசத்துக்குப் பதிலாக அவருக்கு ஏதாவது நல்லது செய்ய வேண்டுமென மனம் சொல்லும்.."
"மச்சான்! நான் அந்தப் பாதைக்குப் போய் கனகாலம். ஸ்கூலுக்குப் பிறகு போனதேயில்லை. வேண்டுமென்றால் போவோம், போய்ப் பார்ப்போம்." என்று உதவியாளரிடம் 'பார்மஸி'யைக் கையளித்து விட்டு, பாலு எழுந்தார். இருவரும் சந்தியைக் கடந்து பள்ளிக்கூடப் பாதையில் திரும்பினார்கள். சற்றுத் தூரத்தில் உள்ள வீட்டு வாசலில் ஒரு பெண்மணி தன் பெண்பிள்ளையோடு நின்று கொண்டிருந்தாள்.
"அதோ! அந்த வீட்டுவாசலில பிள்ளையோடு நிக்கிறா. அந்த மனிஷியை யாரெண்டு உனக்கு தெரியுதா?"
"இத்தனை காலம் கழித்து வர்றேன். எனக்கு எப்படிடா தெரியும்?"
"உனக்கு நல்லாத் தெரியும்.. அவதான் பத்மா.."
திலீபன் சற்று மிரண்டு போனான். மனதுக்குள் பழைய

பயம் மிச்சம் இருந்திருக்க வேண்டும் "ஐயோ! பத்மாவா, அவவோட கதைக்காம மெல்லமா போயிடுவோம்.." கிட்டே நெருங்கியதும் அவளாகவே கதைக்கத் தொடங்கினாள்.

"என்ன? பாலு! இந்தப் பக்கம்? எப்பவுமில்லாம! யாரிவர் ஊருக்குப் புதுசு போல.." என்றாள், மடிப்புக் கலையாத 'ட்ரவுஸரை'யும் நெடுங்கை 'ஷேர்ட்டை'யும் அணிந்திருந்த திலீபனையும் பார்த்து.

"இல்ல மிஸ், இவர் இங்கத்தய ஊர்தான். ஸ்கூல் நாள்ல உங்கள "பத்து' எண்டு சொல்லி உங்ககிட்ட அடிவாங்கப் பார்த்த அதே திலீபன்தான் இப்ப 'டொக்டர்' திலீபன்!"

"திலீபனா இது..?!" ஒரு கணம் அவள் கண்களில் ஆச்சரியம் மின்னி மறைந்தது. சற்று சுதாரித்தவளாக, "அதெல்லாம் எப்பவோ மறந்தாச்சி பாலு, அதெல்லாம் ஒரு காலம்.. விடுங்க.. அது சரி, இப்ப எங்க போறீங்கள்?" என்றாள்.

"அந்த ஒழுங்கைக்குள்ள 'சுப்பிரமணியம்' எண்டு ஒரு மனுஷன், அந்த சந்தியில நிற்கிறவர்தானே, அவற்றை வீடு எங்கேயெண்டு தெரியுமே?"

"ஒழுங்கைக்குள்ளதான் அவரின்ட வீடு. நிக்கிறவங்கள் ஆரிடமாவது கேட்டால் காட்டுவாங்கள்" என்றவள், "வாங்களேன்! ஏதாவது குடிச்சிட்டுப்போவோம்.." என்றாள் உபசரணையோடு.

எள்ளும் கொள்ளும் வெடிக்க, தன் மீது எரிந்து விழும் பத்மாவா இது?! திலீபனுக்கு ஆச்சரியமாக இருந்தது. "இல்ல, பிறகு ஒரு நாளைக்கு வாறம்.." என்றவாறு நகரத் தொடங்கினார்கள்.

ஒழுங்கைக்குள் நுழைந்தார்கள். ஒரு வீட்டடியில் நின்ற ஒரு மனுஷியிடம் விசாரித்ததில் அந்த வீடுதான் என்று ஊர்ஜிதமாகியது. அவர் உள்ளே அழைத்துச் சென்றவர் ஒரு கதிரையை போட்டுக் கொடுப்பதற்கு அங்குமிங்கும் பார்வையை ஓட்டினார். எதுவுமே இல்லை.

"பரவாயில்லை அம்மா, நாங்கள் நிக்கிறம்" என்றவாறே வீட்டை மேலோட்டமாகப் பார்த்தார்கள். ஒரு சிறிய குடிசை வீடு அது. விறாந்தையில் ஒரு கயிற்றுக் கட்டில் போடப்பட்டிருந்தது. அதில் சுப்பிரமணியத்தார் தன் தளர்ந்த உடம்போடு படுத்துக் கிடந்தார். பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

"தம்பியவை! நீங்கள் ஆரெண்டு எனக்குத் தெரியல்லே. ஏதோ வந்தீங்க பாத்தீங்க" என்றார், அந்த மனிஷி.

"அம்மா நாங்க உந்த பள்ளிக்கூடத்திலதான் படிச்ச நாங்கள். ஐயாவை எப்பவும் போறவாற நேரம் கண்டிருக்கிறம். இவர் என்னோட படித்த திலீபன். இப்ப டொக்டரா கண்டியில் வேலை செய்றார்" என்றார் பாலு.

"அம்மா! ஐயாவுக்கு என்ன வருத்தம் ஆரிட்ட காட்டுனீங்க?" என்றார் திலீபன். அதற்கு அந்த அம்மா, "ஆரிட்டயும் இல்ல தம்பி, காசும் கையில இல்ல. சும்மா வீட்ல இருந்த கைமருந்துதான் குடுத்தன்" என்றார். டொக்டர் திலீபன் தன் பையிலிருந்து 'ஸ்டெதஸ் கோப்'பை உருவி எடுத்தார். அவர் சில பரிசோதனைகள் செய்து விட்டு "அம்மா! நீங்க கவலைப்படும்படியா பெரிசா ஒண்டுமில்ல. நான் கொஞ்சம் மருந்து எழுதித்தாறன். இவர் என்ர சினேகிதன் பாலு. சந்தியில் 'பாமஸி' நடத்துறார். பிறகு போய் வேண்டிய மருந்தை வாங்கிக்கொள்ளுங்கோ. காசு கொடுக்கத் தேவையில்லை அம்மா. அதற்குரிய காசை வங்கி மூலமா நான் அவருக்கு அனுப்பி வைக்கிறன். ஒவ்வொரு மாசமும் 2000 ரூவா உங்க சிலவுக்கு வேறயா அனுப்புறன். இவரிட்ட வாங்கிக்கொள்ளுங்கோ. என்ன தேவையாயிருந்தாலும் எங்ககிட்ட தயங்காம சொல்லுங்கோ அம்மா.." திலீபன் சொல்லிக்கொண்டு போக, அதைப் பூரணமாக ஆமோதிப்பதாக பாலு தலையாட்டினார்.

"சரி.. நாங்க போட்டு வாறம், அம்மா" என்று இருவரும் புறப்பட்டார்கள். சத்தம் கேட்ட சுப்பிரமணியம் தன் தலையை தூக்கி கையை நீட்டினார். அது இவர்களுக்கு அவர் கூறிய நன்றி என்பதை இருவரும் புரிந்து கொண்டார்கள்.

அந்த அம்மாவின் கண்களில் நீர் வழிந்தது. "தம்பிமார்! நீங்கள் ஆர் பெத்த பிள்ளையளோ, நீங்களும் உங்களப் பெத்தவங்களும் நல்லாயிருக்கணும்!" என்றார் கையைக் கூப்பிக் கொண்டே. திலீபன், பாலு இருவரின் கண்களிலும் கண்ணீர் மல்கியது இளமைக்காலத்தில் செய்த பாவம் அதில் கரைந்து போவது போல், மனம் ஆறுதல் கொண்டது.

சமூகத்தைப்பற்றிய எதிர்மறையற்ற ஆக்கபூர்வமான சிந்தனைகள் மட்டுமே ஒரு படைப்பாளியின் எழுத்தில் உண்மையையும் வீரியத்தையும் கொண்டுவரும்

மஞ்சரி சிறுகதைகள்

ஒரு பார்வை

மஞ்சரி 16

சுடுவெயில் – தாட்சாயினி

குழந்தைப்பேறு பெறுவதற்காக குடும்பமொன்று நயினாதீவு கோயிலுக்குச் சென்று வழிபடும் களப் பின்னணியில் இக்கதை நிகழ்கிறது. இச் சிறுகதையின் பேசுபொருள் வித்தியாசமானது.முக்கிய பாத்திரமான மாதுளா அவ்வளவு காலமும் தான் தவறாக விளங்கிக் கொண்டிருந்த கொழும் பிலிருந்து தன் குழந்தையுடன் வந்திருந்த அமிர்தாபற்றிய சரியான புரிதல்களை அறிந்து கொள்வ தற்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதே இக் கதையின் பேசு பொருளாகும். மிகச் சிக்கலான குடும்ப உறவுகள் நுட்பமான முறையில் அவிழ்க்கப்படுவதும் அர்த்தபுஸ்டியான வார்த்தைப் பிரயோ கங்கள் கொண்ட மொழி நடையும் பாராட்டும்படியா கவுள்ளன.

சிங்களத்தி – அலெக்ஸ் பரந்தாமன்

முன்னாள் போராளியான தமிழ் இளைஞனுக்கும் இராணுவச் சிப்பாயான கணவனை இழந்து குழந்தையோடிருக்கின்ற சிங்களப் பெண்ணுக்கும் இடையில் ஏற்படும் காதல்பற்றிப் பேசும் வித்தியாசமான கதை. மனோரதியப் பாங்கில் வெளிப்படாமல் யதார்த்தமான முறையில் எழுதப் பட்டிருப் பது தனித்துவமாகிறது.

பொம்மை – வி. மைக்கல் கொலின்.

மத்திய கிழக்கு நாட்டிற்கு வேலைக்குச் சென்றுவிட்ட பெண்களைக் கொண்ட குடும்பங்களில் ஏற்படும் சீரழிவு களுள் முக்கியமானதொன்று தந்தைகளின் வன்புணர்வுக்குச் சிறுமிகள் அகப்படுவதாகும். இவ்வாறு எழுதப்பட்டுள்ள இச்சிறுகதைகளுடன் ஒப்பிட்டு நோக்கும்போது இக் கதையின் வெளிப்பாட்டுமுறை சிறப்பாகவுள்ளது. வாசகர் மனதில் அதிர்வுகளையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்துவதில் இச் சிறுகதை வெற்றி பெறுகின்றது.

நப்பு – செ. கார்த்திக்

தமிழ்நாட்டு கொங்கு மாவட்டச் சூழலில் எழுந்துள்ள இச் சிறுகதையை நொண்டியாகவுள்ள மனைவியை இழந்த கணவனின் ஏக்கவுணர்வுகளை கொரோனா- மழைவெள்ளம் - மகனது அலட்சியமான செயற்பாடு முதலான பல விடயங் களை யதார்த்தமான முறையில் வெளிப்படுத்துவதில் ஆசிரியர் வெற்றியடைகிறார்.

சுமையும் சுகமும் – விமல்பரம்

கணவனை இழந்து தனது பிள்ளைகள் இருவருடனும் இலண்டனில் வாழ்கின்ற குடும்பப்பெண் ஒருத்தி எதிர் கொள்கின்ற வாழ்க்கைச் சுமையும் சுகமும் பின்னிவருவதான புதியதொரு குடும்பக்கதை இதுவாகும். யதார்த்தமாக அணுகியவிதம் பாராட்டுக்குரியது.

இனி ஒரு வழி – குலசிங்கம் வசீகரன்

மனிதம் அருகிவரும் சூழலில் இளைஞனெருவனது மனித நேய மேன்மையை நம்பகரமான முறையில் வெளிப்ப டுத்துவது இச் சிறுகதை.

வாசம் – சந்திரா ரவீந்திரன்

ஜேர்மனியில் தனிமையில் நினைவுகளோடு வாழ்ந்துவரும் குடும்பப்பெண்ணொருத்தியின் கடந்தகால நிகழ்கால வாழ்க்கையை குறுநாவல் எனக் கூறும் விதத்தில் விபரிக்கும் எழுத்தாளர் மிக முக்கியமானதொரு விடயம்பற்றி பூடகமான முறையில் வெளிப்படுத்திருப்பது பாராட்டுக்குரியது.

நடிகை – உரும்பிராய் எம். ரி. செல்வராஜா

முற்றிலும் வித்தியாசமான கரு. முதிர்ந்த வயதினரொருவர் தான் சபல புத்திகாரன் என்பதையும் தன்னை ஏமாற்றிய பெண் ஒரு சிறந்த நடிகை என்பதையும் உணர்ந்து கொளவதே இக்கதை. எழுத்தாளர்கள் பேசாத இப்பொருள் முதன் முறையாக பேசப்பட்டுள்ளது.

முத்தம் – நக்கீரன் மகள்

புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் தொழில் செய்யும் தமிழ்ப் பெண்கள் அதே சமூகத்தினரால் எதிர் கொள்ளப்படும் பிரச்சினைகளிலொன்றை கருவாக எடுத்துள்ளார். மிகமிக உருக்கமான முறையில் வெளிப்படுத்தியவிதத்தில் இக்கதை முக்கியத்துவம் பெறுகிறது.

அக்கா – லதா உதயன்

போராட்ட சூழலில் எழுந்த ரஞ்சகுமாரின் கோசலைபோல போர்க்கால சூழலில் வாழ்ந்து தமது வாழ்வைத் தொலைத்த அக்காமாரில் ஒரு அக்காபற்றிய வலிகளுடன் தீட்டப்பட்ட சித்திரமாக வெளிப்பட்டுள்ளது. மீள் வாசிப்பினூடாக மீள எழுதப்படுமாயின் சிறந்த ஒரு கதையாகும் வாய்ப்புண்டு.

உன்னதங்களின் உயிர் நிழல்கள் - ஷெல்லிதாசன்

பெண் நிலை நோக்கில் சார்பாகவும் எதிராகவும் பல் வேறுவிடயங்களை வெளிப்படுத்தும் நல்ல சிருஸ்டி.

(23 ஆம் பக்கம் பார்க்க)

வரைதல்: செல்வன்

அவ்வளவு விருப்பமில்லாமல் இருக்கு." இப்படிக் கபிலன் கூறியதும் உயிரியல் ஆசிரியை " கபிலன் ஒரு பாடத்தைப் பிடிக்கும் பிடிக்காது என்று சொல்லுறதுக்கு ஒன்பதாம் வகுப்புக் காணாது" என்று கூறினார்.

" அதுதானே.. கபிலன் இப்ப அவசரப்படாமல் இந்த ஒன்பதாம் வகுப்பிலை உனக்குப் பிடிச்சுதோ பிடிக்கயில்லையோ எல்லாப் பாடமும் படிச்சுத்தான் ஆகவேண்டும். நீ பத்தாம் வகுப்புக்கு வந்தாப்போலை யோசிப்பம்" என்று கூறி அதிபர் முற்றுப் புள்ளி வைத்தார்.

கபிலனும் தலையாட்டிவிட்டு வெளியே வந்துவிட்டான். அவர்களுடைய முடிவில் திருப்திப்படாவிட்டாலும் எற்றுக் கொண்டு நகர்வதென மனதுள் தீர்மானித்துக் கொண்டான்.

அவனுடைய கனவுகள் எண்ணங்கள் என்னவோ வேறாகவே இருந்தது.

அவனைப் பொறுத்தவரை கலைப்பட்டதாரியாகி

2

பாடசாலை முடிந்ததும் தன்னைவந்து காணும்படி அதிபர் அனுப்பிய செய்தியால் குழப்பம டைந்து அவரின் அறைக்குமுன் வந்து நின்றான் கபிலன். அவனுடைய மனத்துள் அவர் என்ன சொல்லப் போகிறாரோ என்ற எதிர்பார்ப்பு படபடப்பை ஏற்படுத் திக் கொண்டி ருந்தது.

அதிபரின் அறை திறந்து உள்ளே அழைக்கப்பட்டான். உள்ளே அவனது கணித ஆசிரியர்

கரும்பலகை

உயிரியல் ஆசிரியர் இருவரும் அமர்ந்திருந்தனர். கபிலன் அவர்களுக்கு முன்னால் அமைதியாக நின்றிருந்தான். அதிபர் அவனை நோக்கி " கபிலன் இவர்கள் இருவரும் நீ இரண்டு பாடத்திலையும் நல்ல கெட்டிக்காரன் எண்டுதானே சொல்லுகினம். அப்ப ஏன் நீ உயிரியல் வேண்டாமென்கிறாய்.? ஏன் உனக்கு உயிரியல் ரீச்சரைப் பிடிக்காதோ?"

கபிலனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. பதில் சொல்லத்தானே வேண்டும். " அப்பிடி இல்லை சேர்.. எனக்கு இரண்டு ரீச்சரையும் நல்லாய்ப் பிடிக்கும்... ஆனால் என்னவோ உயிரியல் பாடத்திலை எழுத்தாளனாக வேண்டும். தொழிலாக ஆசிரியத் தொழில் பார்க்கவேண்டும். தன்னை வலுக்கட்டாயமாக விஞ்ஞானப் பாடங்கள் படிக்க வைத்ததால் தன் எண்ணத்தில் தகப்பன் வேட்டு வைத்துவிட்டார் என்று கவலைப்பட்டான். இப்போ விருப்பமில்லாமலே இந்த விஞ்ஞான பாடங்களைக் கற்க வேண்டியுள்ளது. அவனுடைய விருப்பத்தைப் பற்றி அவர் கொஞ்சமும் நினைத்ததில்லை. அவரைப் பொறுத்தவரை சில முடிவுகளை எடுப்பதற்கு அவனுக்கு வயது போதாதென்பதே.

அருணாசலத்தாரைப் பொறுத்தமட்டில் அவன் விஞ்ஞானப் பட்டதாரியாகி விஞ்ஞான ஆசிரியராக வேண்டும். ஆசிரியராக அவனுக்கும் விருப்பம்தான். இந்த விடயத்தில் அவன் முரண்பட்டதில்லை. தகப்பன் விருப்பத்தை விரும்பியோ விரும்பாமலே ஏற்றுக்கொண்டு கடுமையாகப் படிக்க ஆரம்பித்தான். தன் முழுச் சிந்தனையையும் படிப்பிலே செலவழித்தான். காலம் எண்ணங்களோடு தரித்து நிற்பதில்லையே. ஒன்பாதாம் வகுப்பு முடிந்து பத்தாம் வகுப்பிற்கு காலத்தோடு நகர்ந்து வந்துவிட்டான். பாடசாலையில் அவனுக்கு நல்ல பெயர். அவன் விருப்பத்திற்கு ஏற்றாற்போல் உயிரியல் பாடத்திற்குப் பதிலாக உயர் கணிதமும் பிரயோக கணிதமும் பாடசாலையில் தொடங்கப்பட்டது. அவற்றில் சேர்ந்து கொண்டான். உயர் கணித ஆசிரியராக தொமஸ் ஈப்பன் என்கின்ற ஆசிரியர் படிப்பித்தார். அவரைக் கபிலனுக்கு நன்கு பிடிக்கும்.

இதனால் மனம் விரும்பிப் படிக்கத் தொடங்கினான். அவன் படிப்பில் காட்டிய சிரத்தை அருணாசலத்தாரை மகிழ்வுறச் செய்தது. காலம் ஓடிக் கொண்டிருந்தது. இப்போ அவன் பதினோராம் வகுப்பிற்கு வந்து விட்டான். இன்னும் ஐந்து மாதங்களில் க.பொ.த பரீட்சை நடைபெறவுள்ளது.

இரவும் பகலும் படித்தான்.

பரீட்சை வந்துவிட்டது. பரீட்சையிலன்று அருணாசலத்தார் அவனைச் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு அந்திரான் முருகன் ஆலயத்திற்கு கொண்டு வந்து முருகனைக் கும்பிடும்படி சொன்னார். அவனும் முருகனைக் கும்பிட்டு அவரின் அருளைக் கேட்டு பரீட்சைக்குச் சென்றான்.

பரீட்சையில் அவன் படித்தவைகளும் அவனுக்கு நன்கு புரிந்தவைகளும் வினாக்களாக வந்திருந்தன. அழகாகவும் சரியாகவும் எழுதினான்.

பரீட்சை நிலையத்தைவிட்டு வெளியில் வந்தபோது அவனுக்குத் திருப்தியாக இருந்தது. வெளியில் அவனை ஏற்றிச் செல்வதற்காக அருணாசலத்தார் நின்றிருந்தார். நண்பர்களோடு சிறிது பரீட்சைபற்றிக் கதைத்துவிட்டு தகப்பனோடு வீட்டுக்குச் சென்றான். இப்படியாக ஐந்து நாட்கள் பரீட்சை நடந்தது. பரீட்சையில் தன்னால் முடிந்தளவுக்கு செய்திருந்தான். அவனுடைய முகத்தைப் பார்த்து அருணாசலத்தார் அதனை ஊகித்துக் கொண்டார்.

தனதும் தன் தகப்பனாரதும் ஆசையான ஆசிரியராகவேண்டுமென்ற அவா அவன் மனதில் வளரத் தொடங்கி இருந்தது.

காலம் மீண்டும் நகரத் தொடங்கியது.

க.பொ.த பரீட்சையின் முடிவு நாளை வருகிறது என்ற செய்தி பரவிக் கொண்டிருந்தது. அருணாசலத்தாருக்குப் பதட்டமாக இருந்தது. கபிலனுக்கும் பதட்டமாக இருந்தது. அருணாசலத்தாரின் மனம் கபிலன் எப்படியும் பாஸ்பண்ணிவிடுவான் என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தது.

அடுத்தநாள் கபிலன் பாடசாலைக்கு வெள்ளெனவே போய்விட்டான். இதயம் டிக்டிக் என வேகமாக அடித்துக் கொண்டிருந்தது. அவனுடைய நண்பர்கள் அவனைப் பார்த்து " நீ ஏன் மச்சான் கவலைப் படிறாய் நிச்சயமாய் நீ நல்ல றிசல்ட் எடுப்பாய்" என்று வேறு சொல்லிக் கொண்டிருந்தனர்.

அதிபர் புன்முறுவலோடு பாடசாலைக்குள் நுழைந்து கொண்டிருந்தார். அவரின் கையில் பரீட்சைப் பெறுபேறுகள் அடங்கிய பேப்பர்கள் இருந்தன. சரியாக பதினொருமணிக்கு ஆசிரியர் தன் அறையிலிருந்து வெளியில்வந்து 11ஆம் வகுப்பு மாணவர்களை வரச் சொல்லி அழைத்து பெறுபேறுகளை வாசிக்கத் தொடங்கினார். பெயர்களைக் கூறாமல் சுட்டிலக்கங்களை மட்டுமே வாசித்தார். ஒவ்வொருவரும் தங்கள் சுட்டிலக்கம் வாசித்ததும் அங்கிருந்து நகர்ந்தனர்.

கபிலனின் சுட்டிலக்கம் வாசிக்கும்போது அவரின் வாயில் புன்முறுவல் இருந்தது.

கபிலன் எல்லாப் பாடங்களிலும் அதிதிறமைச் சித்தி பெற்றிருந்தான். கபிலனுக்கு சந்தோசம் வானத்தைத் தொட்டது.

எல்லோருடையதும் வாசித்து முடிந்ததும் கபிலனைப் பார்த்து தன் அறைக்கு வரும்படி கூறிவிட்டுச் சென்றார். கபிலனும் அவர் கூறியபடி சென்றான். அவன் சென்றதும் " வா கபிலா வாழ்த்துக்கள் நீ பாடசாலைக்கும் உன் அப்பாவுக்கும் பெருமைதேடித் தந்திருக்கிறாய். இதேபோல உயர்தர வகுப்பிலையும் நீ நன்றாகச் சித்தியடைந்து எல்லோருக்கும் பெருமை தேடித் தரவேண்டுமென்று கூறினார்.

பாடசாலையிலிருந்து புறப்பட்டு நேராக வீட்டுக்குச் சென்றான். தகப்பனைக் காணவில்லை. தாயைப் பார்த்து தன் பெறுபேறுகளைக் கூறினான் . அப்போதான் அருணாசலத்தார் உள்ளே வந்து கொண்டிருந்தார். அவருக்கும் தன் பெறுபேறுகளைக் கூறினான். அவரும் அகமகிழ்ந்து அவனைக் கட்டிப்பிடித்து சந்தோசமடைந்தார்.

அடுத்தது கபிலன் உயர்தரம் படிக்கவேண்டும். அதற்கான பாடசாலையைத் தேர்வு செய்யவேண்டும். கபிலன் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் பாடசாலையில் படிக்க விரும்புவதாகக் கூறினான். அங்கு கணிதம் படிப்பிக்கும் ஏபிரகாம் என்ற ஆசிரியர் நன்றாகப் படிப்பிப்பதாகவும் அங்கு செல்ல விரும்புவதாகவும் கூறினான். அந்தப் பள்ளிக்கூடத்தைப்பற்றி பலர் நல்லவிதமாகக் கூறுவதைப் பலதடவை கேள்விப்பட்டிருக்கிறார். பாடசாலையையிட்டுக் கவலையில்லை. போக்குவரத்து சம்பந்தமாகவே யோசித்தார்.

" சரிதம்பி பார்ப்பம் நாளிருக்குத்தானே பிறகு முடிவு செய்வம்" என்று கூறி முடித்துவிட்டார்.

இந்தக் காலகட்டம்தான் மாணவர் மத்தியில் சில மாற்றங்கள் நிகழ்கின்ற நேரம். சில மாணவர்கள் தவறான பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகி வாழ்க்கையைத் தொலைப்பார்கள். சில மாணவர்கள் பலவிதமான அரசியல் தொடர்புகளில் ஈடுபட்டு சுயநல அரசியல்வாதிகளால் வாழ்க்கையைத் தொலைத்து நிற்பார்கள்.

கபிலனின் வாழ்க்கையிலும் எதிர்பாராதவிதமாக மாற்றம் நிகழ்ந்தது.

அவனோடு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் ஒன்றாகப் படித்த நண்பன் ஒருவனின் தொடர்பு மீண்டும் ஆரம்பமானது. அவனின் பெயர் சிவகுமார். சிவம் என்று எல்லோரும் அழைப்பார்கள்.

சிவகுமார் இடதுசாரிச் சிந்தனையில் நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டவன். எந்தவிதமான தவறான பழக்கவழக்கங்களும் இல்லாத ஒரு நல்ல நண்பன். அவனோடான பழக்கத்தினால் கபிலனின் சிந்தனைகளிலும் மாற்றம் உருவாக ஆரம்பித்தது. அந்த மாற்றம் ஒன்றும் கெடுதலான மாற்றம் இல்லை. எதையும் கூர்மையாகவும் தெளிவாகவும் சிந்திக்கும் ஆற்றல் கொண்ட தத்துவங்களின் அறிமுகம் அவனுக்குள் ஒருவித மாற்றத்தை உண்டுபண்ணியமை தவிர்க்க முடியாததாகவே இருந்தது. இதனால் சிவகுமாருடன் சேர்ந்து அரசியல் வகுப்புகளுக்குச் செல்லத் தொடங்கினான். ஒவ்வொரு அரசியல் வகுப்பும் அவனது மூளையை திருப்பிப்போட்டுக் கொண்டிருந்தது.

இந்த விடயங்கள் ஒன்றும் அருணாசலத்தாருக்குத் தெரிவதற்கான வாய்ப்புகள் இருக்கவில்லை.

ஒரு நாள் அருணாசலத்தாரின் நண்பர் ஒருவர் கபிலனின் இந்த அரசியல் பிரவேசம்பற்றி பட்டும் படாமலும் சொல்லிவிட்டார். அருணாசலத்தார் அவருக்கு முன்னால் நாகரிகமாக நடந்து கொண்டு அமைதியாக வீட்டுக்கு வந்துவிட்டார்.

வீட்டில் கபிலன் இல்லை.

மனைவியிடம் கபிலனை விசாரித்தார். வெளியில் போய்வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றதாக அவள் கூறினாள்.

அருணாசலத்தார் அவனின் படிக்கின்ற மேசையருகில் சென்று அங்குள்ள புத்தகங்களை ஆராய்ந்தார். வழக்கத்திற்குமாறாக அங்கே சிவப்பு நிறத்தில் மாக்சியச் சிந்தனைகள் என்ற புத்தகம் இருப்பதைக் கண்டார். அவருக்கு இரத்தம் கொதிக்க ஆரம்பித்தது. இதை எப்படியாவது முளையிலேயே கிள்ளிவிடவேண்டு மென்று மனதிற்குள் முடிவு செய்து கொண்டார்.

கபிலனின் வரவுக்காக இரைக்காகக் காத்திருக்கும் சிங்கம்போல் காத்திருந்தார். கபிலனின் அம்மாவுக்குப் புரிந்து விட்டது.

மாலை 7.30 மணியளவில் கபிலன் வீட்டுக்குள் நுழைந்தான். முகம் கைகால் கழுவிவிட்டு முற்றத்திற்கு வந்தான். முற்றத்தில் உள்ள கதிரையில் அருணாசலத்தார் ஒன்றும் நடவாதவர்போல் இருந்தார்.

" கபிலன் இஞ்சை வா தம்பி உன்ரை மேசையிலை ஒரு புத்தகம் கிடந்துது. உதையெல்லாம் ஏன் வாசிக்கிறாய்? ஆர் தந்தது?" என்று மிக அமைதியாகத்தான் கேட்டார். கபிலனுக்குப் புரிந்துவிட்டது. சமாளித்தாகவேண்டும்.

" அது ஒண்டுமில்லையப்பா.. நான் உயர்தரத்திலை பொருளாதாரம் ஒரு பாடமாய் எடுக்கலாமென்று நினைச்சன். அதை நண்பன் ஒருவனிட்டைச் சொல்ல இந்தப் புத்தகத்தை வாசி உதவியாயிருக்கும் எண்டு தந்தவன்" என்றான்.

" அது ஏன் பொருளாதாரம். நீ சையன்ஸ் தானே படிச்சனீ?"

" இல்லையப்பா. யூனிவர்சிற்றி முடிஞ்சாப்போலை ஆசிரியத் தொழில் செய்யிறதுதானே உங்கடை விருப்பம். இப்ப ஆசிரியத் தொழிலிலை கணிதத்துக்கும் பொருளாதாரத்திற்கும் ஆசிரியர் பற்றாக்குறையாம். அப்ப கணிதத்தோடை இதையும் கலந்து எடுத்தா பிரயோசனமாயிருக்கும் என்டு நினைச்சன்" என்று அவன் கூறியபோது அதற்குமேல் அவரால் பேச முடியவில்லை. பேசாமலிருந்து விட்டார்.

கபிலனுக்கு தகப்பனை மடக்கி விட்ட சந்தோசம்.

கபிலனின் அம்மாவுக்கு ஒரு பெரிய யுத்தம் தவிர்க்கப்பட்டுவிட்டதென்ற சந்தோசம்.

கபிலனும் அதற்குப்பிறகு தகப்பனுக்கு முன்னாலேயே

பல சிவப்புப் புத்தகங்களை தாராளமாக வாசித்தான். காலம் மீண்டும் நகர்கிறது.
கபிலனுக்கு உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரியில் அனுமதி கிடைத்துவிடுகிறது. அவன் விரும்பிய ஆசிரியர்களே அவனுக்குப் படிப்பித்தார்கள். தகப்பனுக்குக் கூறியதுபோல் கணிதத்தோடு பொருளாதாரத்தைக் கலந்து படிக்கமுடியவில்லை. இதனைத் தகப்பனிடம் வந்து சொல்லிக் கவலைப்பட்டான். அருணாசலத்தார் அவனை பூரணமாக நம்ப ஆரம்பித்துவிட்டார்.
" அப்ப என்ன தம்பி செய்யிறதாய் உத்தேசம்?" என்று கேட்டார் கபிலனும் எவ்வித தயக்கமுமின்றி
" பொருளாதாரத்தை மட்டும் தனிய வெளிவாரியாய் எடுக்கப் போகிறன்" என்று சொன்னான். அவரும் அதனை நம்பிவிட்டார்.
பாடசாலையில் கணிதமும் பௌதிகமும் அவனுக்குத் தண்ணிபட்டபாடாகவிருந்தது.
படிப்பில்மட்டும் அவன் கவனம் செலுத்தவில்லை. சிவத்தின் மூலமாக அந்தப் பாடசாலையில் படிப்பிக்கும் தங்கவடிவேல் மாஸ்டரின் அறிமுகமும் கிடைத்தது. தங்கவடிவேல் மாஸ்டர் ஒரு இடதுசாரி. உண்மையைச் சொன்னால் அவர் ஒரு செயல் வீரர்.
கபிலன் பாடசாலை இலக்கியக் கழகத்தின் பத்திராதிபராகத் தெரிவு செய்யப்பட்டான். அவனது இலக்கிய உலகப் பிரவேசத்தின் ஆரம்பமே அதுதான். இலக்கிய கழகத்தின் சார்பாக ஒரு சஞ்சிகை வெளியிடவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தான். அதனை சபை ஏற்றுக் கொண்டது. அதற்கான வேலைகளில் ஈடுபடத் தொடங்கியதால் படிப்பின்மீதான கவனம் குறையத் தொடங்கியது. இந்த விடயம் அருணாசலத்தார் காதுகளையும் வந்தடைந்தது. அவர் விழித்துக் கொண்டார். மகன் வேறு திசையொன்றில் பயணிப்பதுபோன்ற பயம் ஒன்று வரத் தொடங்கியது.
கபிலன் சஞ்சிகையின் பெயரை இடிமுழக்கம் என வைத்தான். இதற்கு தங்கவடிவேல் ஆசிரியரின் ஒத்தாசையும் உதவியும் பெருமளவில் கிடைத்தது. அதிபருக்கு சஞ்சிகையின் பெயரும் பிடிக்கவில்லை. கபிலனின் போக்கும் பிடிக்கவில்லை. அவரால் அதைத் தடுக்கவும் முடியவில்லை.
அந்தச் சஞ்சிகை வெளியீடு கோலாகலமாக நடந்தேறியது.
இதற்குப் பின் அந்தப் பாடசாலையில் கற்றுக் கொண்டிருந்த விசு என்கின்ற நண்பனின் தோழமை கபிலனுக்குக் கிடைத்தது. விசுவும் இடதுசாரியே. அவன் கபிலனைவிட அதிதீவிர வாதியாக இருந்தான். அவனுடைய சட்டைப்பையினுள் இடதுசாரித் தலைவரின் தத்துவமுத்துக்கள் என்ற புத்தகம் எப்போதும் இருக்கும். இதைப் பார்த்த கபிலனுக்கு தானும் அப்படி வைத்திருக்கவேண்டுமென்ற ஆசை வரும். இதனை அவன் சிவகுமாரிடம் சொல்லிக்கேட்டபோது சிவகுமார் மறுத்து அவை இப்போ தேவையில்லை. படிப்பிலே கவனத்தைச் செலுத்து. பிறகு பார்க்கலாம் என்று கூறிவிட்டான். கபிலனுக்கு அது ஏமாற்றமாகிவிட்டது.
இதற்கிடையில் கபிலனின் நடவடிக்கைகளை அருணாசலத்தாரின் நண்பரான இன்னொரு ஆசிரியர் அப்படியே வந்து கூறிவிட்டார்.
அருணாசலத்தாருக்கும் கபிலனுக்கும் தினம்தினம் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமாகிவிட்டது. சில வேளைகளில் அடியும் விழத் தவறவில்லை. இதனால் சில நாட்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு நல்ல பிள்ளைபோல் இருக்கத் தொடங்கினான். அவனது இந்த மாற்றம் அருணாசலத்தாருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் வேதாளம் முருங்கை மரத்தில் திரும்பவும் ஏறிவிடாமல் இருக்க கண்ணும் கருத்துமாக இருந்தார்.
பாடசாலையில் தவணைப் பரீட்சை ஆரம்பமாகியிருந்தது. எல்லாப்பாடங்களிலும் முதல் மாணவனாகத் திகழும் கபிலனால் இந்தப் பரீட்சையில் எந்தப் பாடத்திலுமே முதல் மாணவனாகத் திகழ முடியவில்லை. முதல்மாணவனாக மட்டுமில்லை முதல் பத்து மாணவர்களுக்குள்ளும் அவனால் வரமுடியவில்லை. இது அவனுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆசிரியர்களாலும் இதனை நம்ப முடியவில்லை. அருணாசலத்தாருக்கு இப்போ பெரிய பயம் வரத் தொடங்கிவிட்டது. எவ்வளவோ பொத்தி பொத்தி வளர்த்த பிள்ளை தன்னைவிட்டுக் கை நழுவிச் செல்வதுபோல் இருந்தது. அவருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.
பாடசா லையின் அதிபர் கபிலனைக் கூப்பிட்டு அறிவுரை சொன்னார். அவனின் நிலைக்கு என்ன காரணம் என்பதையும் தெளிவாக விளக்கி அடுத்த திங்கட்கிழமை காலை உனது அப்பாவை வந்து என்னைக் காணச் சொல்லு என்று சொல்லி அனுப்பி வைத்தார்.
(இன்னும் எழுதுவோம்....)

மேலதிக குறிப்புகள்(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

1. இம் மஞ்சரிச் சிறுகதைகளுள் கணிசமானவை ஒற்றைச் சொல்லாலான தலைப்புடன் வெளிப்பட்டி ருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்துகின்றது. இது வரவேற்புக்குரியதே.

2. **ஒரு கதை பிறந்தகதை** வரவேற்கக் கூடிய ஆரம்பம். இவ்வாறே எனக்குப் பிடித்த கதை என்ற பகுதியையும் ஆரம்பிக்கலாம்.

3. திருமலை சுந்தாவின் உருவகக்கதையும் **(நட்பும் உறவும்)குறுங்கதையும் (அம்மா)** பாராட்டிற்குரியன. இவை அவரது முதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளன.

4. சிங்கள மொழிபெயர்ப்பான **சுமனக்கா**வும் மறக்க முடியாதவொரு பாத்திரமாக சுமனக்காவை இனங் காட்டியுள்ளது. இளம் எழுத்தாளரின் நிதானமான வாசிப்பிற்குரியது.

5. **வாருங்கள் விமர்சிப்போம்** பகுதி வரவேற்கப்படக் கூடியதுதான். எனினும் அணுகுமுறையில் தவறுகள் ஏற்படாதவையாக அமையவேண்டும். இவ்விதழில் வெளிவந்த இலங்கையர்கோனின் வெள்ளிப்பாதசரம் பகுதியில் ஒரு சில தவறுகள் உள்ளன என்பதனை வாசகர்கள் கவனிக்கவேண்டும். உதாரணமாக வர லாற்றுக் கதைகள் என்பது சிறுகதையின் ஒரு வகையே. உத்தியன்று.

6. **கரும்பலகை**யின் ஆரம்பம் ஈர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. தொடர்ந்து கரும்பலகையில் எழுதப்படுவன எவை என்பதே கவனிக்கப்பட வேண்டியது.

7. கணனி அச்சுமுறை வந்தபின் பந்தி அமைப்பு முறை மாறியது. அதாவது பந்தி வேறுபாடு முன்னர்போல் முதல்வரி ஓரங்குலம் தள்ளி ஆரம்பிக்காமல் ஒருவரி அல்லது அரைவரி இடைவெளியுடன் வெளிப்படும் முறை ஏற்பட்டது. இவ்வித்தில் இத் தொகுதிச் சிறுகதைகள்ஒரு சிலவற்றில்அது கவனிக்கப்படவில்லை. இதனால் சிறுகதை முழுவதும் ஒரு பந்தியாகக் கருதப்படும் விபரீதம் ஏற்பட்டுவிடும்.

வாசகர் கடிதம்.....

ஆசிரியர்
சிறுகதை மஞ்சரி,
இலண்டன்.

2021 ஐப்பசி இதழில் வந்துள்ள, நந்தினி சேவியரின் 'எழுத்தின் அனுபவங்கள்...' பகுதியிலுள்ள கருத்துத் தொடர்பாக, இதனை எழுதுகிறேன். **"ஒரு நாள் அ. யேசுராசா என்னைச் சந்தித்தார். சில எழுத்தாளர்களின் சிறுகதைகளை அலையில் பிரசுரித்து அக்கதை பற்றி இன்னொருவரது விமர்சனத்தையும் வெளியிட இருப்பதாகவும் அதற்காக எனது கதை ஒன்றையும் கேட்டிருந்தார்."** என்று குறிப்பிட்டுவிட்டு, தான் 'ஆண்டவருடைய சித்தம்' என்ற சிறுகதையை எழுதிக் கொடுத்ததாகவும், அது பிடிக்க வில்லை என நான் திருப்பிக் கொடுத்ததாகவும் எழுதியுள் ளார். இது தவறான தகவல். அவ்வாறான பகுதியொன்றை 'அலை' இதழில் நாங்கள் வெளியிடவேயில்லை வெளி யிடக் கருதியிருக்கவுமில்லை!

நந்தினி சேவியர் இறப்பதற்கு சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்வரை இருவரும் நாற்பது ஆண்டுகால நண்பர்கள். அவரது 'பயணத்தின் முடிவில்' சிறுகதையை 'அலை'யில் (பங்குனி - சித்திரை 1977) வெளியிட்டேன். 'மூவர் பார்வை' என்ற பகுதியில், அவரது கருத்துகளையும் (அலை, ஐப்பசி 1985) இல் வெளியிட்டேன். பின்னாள்களில் எனது தொடர்பைக் காரணமேதும் தெரிவிக்காது துண்டித்துக் கொண் டார். இருபாலை மில்லில் அவர் வேலை செய்த போது, சில தடவைகள் அவரை அங்கும் சந்தித்துக் கதைத்து வந்துள்ளது உண்மை. அவர் சிறந்த எழுத்தாளர் என்பதில், அன்றும் இன்றும் எனக்குக் கருத்துவேறு பாடில்லை. 'புதுசு'- 8 ஆவது இதழில் (மார்கழி 1983) வெளியான அக்கதையை இன்று எடுத்துப் படித்தபோதும், பிடித்த கதையாகவே உள்ளது!

பிற்காலங்களில் முகநூலில் அவர் எழுதிய குறிப்புகளில், பல தரவுப் பிழைகள் நினைவுக் குழப்பத்தினால் ஏற்பட் டிருந்ததைச் சுட்டிக்காட்டியதில், அவர் என்மீது கோபம் கொண்டிருந்தார். 'புதுயுகம் பிறக்கிறது' இதழ்பற்றிய குறிப்பில், மூன்று வரிகளில் - நான்கு தரவுப் பிழைகள் இருந்தன!!! இதுபோன்றதொன்றாகவே 'ஆண்டவ ருடைய சித்தம்' பற்றிய கருத்தும் உள்ளதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ. யேசுராசா.
குருநகர்.
இலங்கை (1-11-2021)

கண்ணன் வருவான்

எத்தனை நாளைக்குத்தான் இதைச் சகித்துக் கொண்டும் தாங்கிக்கொண்டும் வாழ்வது. இந்தப் பதினைந்து வயதுக்குள்ளேயே எதிர் காலம் பற்றிய தெளிவற்ற பார்வையும், பயங்கரமும் கண்ணனை மிரட்டிக் கொண்டிருந்தது. குடும்பத் தலைவன் குடித்துவிட்டு வந்தால் வீட்டில் இருப்பவர்கள்தான் அனுசரித்துப் போகவேண்டுமென்கிற நியாயப் படுத்தலை ஏற்றுக்கொண்டு அவனால் ஒத்துப்போக முடியவில்லை. மது போதையில் தந்தை துரைசாமி நடத்திய அந்த வெறியாட்டத்தின் பயங்கரம் நுவரெலியாக் குளிரோடு சேர்ந்து அவனின் நடுக்கத்தைக் கூட்டிக்கொண்டிருந்தது. அவனை தந்தை என்று நினைக்கவே வெறுப்பாயிருந்தது. துரைசாமியின் உழைப்பு அவனது குடிக்கும், பொறுப்பற்ற செலவுகளுக்கும் போதாமல் தாய் செல்லத்தின் உழைப்பைப் பறிக்க சண்டித்தனம் செய்வது அயலவர்களுக்கும் பழகிப்போனது.

இன்றைக்கும் அதுதான் நடந்தது, தாய்க்கு அடிவிழாமல் குறுக்கே வந்தவனை ஒரு எதிரியைத் தாக்குவதுபோல் தாக்கி கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டான். கீழே விழுந்ததில் முழங்கை யிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. நொண்டியபடி நடந்துபோய் தள்ளியிருந்த பாறாங்கல் ஒன்றில் அமர்ந்து கொண்டான். துரைசாமியின் ஆரப்பாட்டம் ஓய்ந்து செல்லத்தின் புலம்பல் மட்டும் அழுகைக்கு ஊடே கேட்டுக்கொண்டிருந்தது. தங்கை சித்திரா தாயைக் கட்டியபடியே விம்மிக் கொண்டிருந்தாள்.

"கண்ணன், கண்ணன்" அழைத்தபடியே சித்திராவைக் கையில் பிடித்தபடி வெளியே வந்த செல்லம்

வரைதல்: கைலாசநாதன்

அங்குமிங்கும் பார்வையைச் செலுத்தினாள். மங்கிய வெளிச்சத்தில் குளிரைக் குறைப்ப தற்காய் உடலைக் குறுக்கியபடி கண்ணன் சற்றுத் தள்ளி அமர்ந்திருந்தான். கிட்ட வந்த செல்லம் பக்கத்தில் இருந்து அவனை இழுத்து தன் மடியிலே படுக்க வைத்தாள். அவனது சிவந்த உடம்பில் துரைசாமியின் வெற்றுக் கைகள் இரத்தக் கோடுகளைப் போட் டிருந்தன. தாயின் அணைப்பும் ஸ்பரிஷமும் அடக்கி வைத்திருந்த உணர்வுகளை உடைத்துவிட்டது. "தம்பி, இந்தக் குளிருக்க இருக்க வேண்டாம். வா, வீட்டுக்குள்ள வந்து இரு". செல்லம் தொட்டுத் தூக்கிய கையை மெதுவாக விலக்கி விட்டான்.

"அம்மா, மாட்டை அடிக்கிறமாதிரி அடிச்சு, போடா வெளியில என்று தள்ளி விடுற அளவுக்கு நான் என்ன செய்தனான். குடி போதையில நிக்கேக்க மெதுவாய்த் தள்ளி விட்டாலே மல்லாக்காய் விழுந்திடுவார். ஆனால் நீங்கள் அப்பிடி என்னை வளர்க்கேல்லை."

தாயை விலக்கிவிட்டு நடக்கத் தொடங்கிய வனை ஓடிப்போய்ப் பிடித்துக் கொண்டாள் செல்லம். இன்னொரு தடவை இப்படி நடந்தால் அவன் பொறுக்க மாட்டான் என்கிற பயம் செல் லத்தை யோசிக்க வைத்தது. அவனை இருத்திவிட்டு உள்ளே போனாள்.

துரைசாமி ஒரு பக்கத்தில் மல்லாந்து கிடந்தான். ஏறி இறங்கும் மூச்சுத்தான் உயிர் இருப்பதை உறுதிப்படுத்தியது.

"கண்ணன் உள்ளவா முதல் சாப்பிடு எல்லாம் பேசலாம்"

"நான் வரமாட்டன் என்ர சேட்டை எடுத்துத் தாருங்கோ"

அவன் பிடிவாதமாய் நின்றான் தடித்துப்போன இடங்களுக்கு சுடுதண்ணீர் ஒத்தடம் கொடுத்தபோது செல்லத்துக்குக் கண்ணீர் தாரை தாரையாய்ச் சொரிந்தது. "என்ர தலைவிதி நான் வாங்கிறன். போதையில பிள்ளையளை அடிக்க அவர் ஆர்?" நேரேகேட்கத் துணிச்சல் இல்லாமல் மனது கொட்டித் தீர்த்தது. அவன் ஆம்பிளைப் பிள்ளை இந்த வேதனையும் விரக்தியும் அவனை மனிதனாக்கும் என்ற நம்பிக்கை செல்லத்துக்கும் ஒரு துணிச்சலைக் கொடுத்தது. கண்ணனை வீட்டுக்குள் கொண்டுவந்து ஆறுதல்படுத்தி யாரும் தெரிந்தவர்களின் உதவியோடு கொழும்புக்கு அனுப்பலாமென்று அவள் போட்ட கணக்குத் தப்பாகிக்கொண்டிருந்தது. ஏதோ தீர்க்கமான முடிவோடு எழுந்து வீட்டுக்குள் நுழைந்தாள். கண்ணன் வீட்டுக்கு முன்னால் வளர்ந்து நின்ற பலா வேரில் காலை நீட்டியபடி இருந்தான். சித்திரா பதின்மூன்று வயதுக்கே உரிய புரிதலில் என்ன நடக்கப்போகிறது என்று தெரியாமல் தமையனோடு ஒட்டிக்கொண்டு நின்றாள். மத்தியானம் மீதமிருந்த சோற்றைக் கறிச் சட்டியில் போட்டுப் பிரட்டியபடிவெளியே வந்த செல்லம் கண்ணனுக்குப் பக்கத்தில் சப்பாணி போட்டு அமர்ந்துகொண்டாள். சோற்றை உருண்டையாக்கி வாயிலே ஊட்டிவிட்டாள். வயிறு நிறைந்ததோ இல்லையோ தாய் பாசத்தில் மனம் நிறைந்திருந்தது. ஒரு கவளம் சோற்றை எடுத்துத் தாய்க்கும் சித்திராவுக்கும் ஊட்டிவிட்டான். செல்லம் ஒரு சேட்டை எடுத்துவந்து கண்ணனுக்குப் போட்டு விட்டாள். தெறிகளைப் பூட்டுவதற்கு அவன் கை ஒத்துழைக்க மறுத்தது. தானே தெறிகளையும் பூட்டியபோது கலங்கிய கண்களைத் துடைத்துக்கொண்டாள். இன்னொரு சேட்டையும் காற்சட்டையையும் 'சொப்பிங்' பையிலே போட்டு எடுத்துவந்து கையிலே கொடுத்தாள். அந்த வீட்டில் அவனுக்கு இருந்த சொத்து அவ்வளவுதான். கைக்குள் பொத்தி வைத்திருந்த இரண்டாயிரம் ரூபாயைக் கவனம் சொல்லிக் கொடுத்துவிட்டு இறுக அணைத்து "ஓ" என்று அழத் தொடங்கினாள்.

"எங்க போகப்போறாய்"அவனது தலையை நிமிர்த்தி முகத்தைப் பார்த்து ஏக்கமாய்க் கேட்டாள் செல்லம்.

"கொழும்புக்குப் போறதெண்டுதான் யோசிக்கிறன்"

"கண்டிக்கு அங்கால ஒரு காலமும் போகாதை நீ,கொழும்பு என்ன சின்ன இடமே?"

"வெளிக்கிடுற துணிச்சல் வந்திட்டுது.என்னால முடியும் என்ற நம்பிக்கையும் இருக்கு.நான் வெளிக்கிட்டால் அப்பா திருந்திறதுக்கும் வாய்ப்பிருக்கு."

சித்திராவை இழுத்து இறுக அணைத்துக்கொண்டான். இப்போதுதான் அவளுக்கு ஏதோ புரிவதுபோலிருந்தது. சத்தமாய் அழத் தொடங்கினாள்..

"முருகன் கூட இருப்பார் பயப்பிடாதை.போய் சேர்ந்த உடனே கடிதம் போடு"

"இல்லை அம்மா.நான் இருக்கிற இடம் தெரிஞ்சால் அப்பா அங்க வந்தும் பிரச்சனை தருவார்.நான் உங்களையும்,சித்திராவையும் நல்ல நிலையில வைச்சுப் பாக்கக்கூடிய தகுதியோடதான் வருவன்.என்னட்டையிருந்து ஒருதகவலும் வரேல்லை எண்டால் நான் எங்கையோ நல்லாயிருக்கிறன் என்று தைரியமாய் இருங்கோ." அணைப்பிலிருந்து விடுபட்டவன் உடுப்புப் பையை எடுத்துகொண்டு வீட்டு வாசலுக்கு வந்தான். திறந்திருந்த கதவினூடே தந்தை படுத்திருப்பது தெரிந்தது..குறட்டை ஒலி மட்டும் மிரட்டலாய் ஒலித்துக்கொண்டிருந்தது. மார்பிலே கையைக் கட்டியபடி தலைகுனிந்து சில வினாடிகள் நின்றான். திடீரென்று திரும்பியவன் தாயையும் சித்திராவையும் ஒன்றாக அணைத்து முத்தம் கொடுத்துவிட்டு நடக்கத் தொடங்கினான். ஒளி மங்கிய வெளிச்சத்திலும்,செல்லத்தின் திரையிட்ட கண்ணீருக்குள்ளும் சிறிது,சிறிதாகி அவன்மறைந்துபோனான்.

கண்டி பஸ் நிலயத்தில் அவன் இறங்கும்போது இரவு பத்து மணியாகிவிட்டது. பல கடைகள் ஏற்கனவே மூடியிருந்தாலும் நகரின் பரபரப்பு முழுதாய் அடங்கவில்லை. அடிபட்ட உடம்புவலி அதிகமாயிருந்தது. ஒரு இடத்தில் இருந்தால் நல்லது என்று தோன்றியது.

"கொலம்ப,கொலம்ப,கொலம்ப"ஒருவன் குரலெடுத்துக் கத்திக்கொண்டிருந்தான். எட்டி நடந்துபோய் உள்ளே நோட்டம் விட்டான். பஸ் ஏற்கனவே பயணிகளால் நிறைந்திருந்தது. நின்று போகக்கூடிய அளவு உடம்பிலே தெம்பில்லை.

"வவுனியாவ,வவுனியாவ" அரைவாசி காலியாயிருந்த பஸ் ஒன்று வவுனியாவுக்குப் போக தயாராய் நின்றது. இப்போதெல்லாம் அடிக்கடி பத்திரிகைகளிலும் வானொலியிலும் அலசப்படும் பெயராக அது மாறியிருந்தது. அது ஒரு தமிழ் நகரம் என்பது மட்டும் கண்ணனுக்குத் தெரியும். காலியாயிருந்த ஆசனங்களைப் பார்க்கும்போதே உடம்பு வலிகுறைவதுபோலிருந்தது. கொழும்பா? வவுனியாவா? மனதுக்குள் நடுவரில்லாப் பட்டி மன்றம் நடந்துகொண்டிருந்தது.வீட்டைவிட்டு வெளிக்கிட்டாச்சு.எங்கு போனாலும் வரவேற்று அழைத்துச் செல்ல எவரும் வரப் போவதில்லை.

பிரச்சனைகளும், சவால்களும்தான் வரவேற்கப் போகின்றன. ஏதோ ஒரு அசாத்தியத் துணிச்சல். வவுனியா பஸ்ஸில் ஏறி வசதியாய்ஒரு ஆசனத்தைப் பிடித்து உட்கார்ந்துகொண்டான். கும் இருட்டில் ஓடும் வாகனங்களும், மின் வெளிச்சங்களும் பின்நோக்கிக் கடந்துகொண்டிருந்தன. காற்றின் வருடல் வலித்த உடம்புக்கு ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தது.

"தம்பி, வவுனியா" நடாத்துனர் எழுப்பியபோதுதான் துங்கிப்போனது தெரிந்தது. அவசர, அவசரமாய் எழும்பிச் சொப்பிங் பையைக் கையிலே எடுத்துக்கொண்டு இறங்கினான். இன்னும் விடிய வில்லை. மின்னொளியில் அவன் எதிர்பார்த்ததைவிட வவுனியா பெரு நகரமாகத் தெரிந்தது. கடைகள் அடர்ந்த பெரு வீதியிலே கால் போன போக்கிலே நடந்தான். பூட்டப்பட்ட கடைகளின் விறந்தைகளில் சிலர் உறங்கிக்கொண்டிருந்தனர். ஆட்களில்லாத ஒரு கடையின் முன் பகுதியைப் பார்த்தபோது கொஞ்ச நேரம் படுக்கத் தோன்றியது.

படுத்தும் அடுத்து என்ன என்ற பதிலில்லாக் கேள்வியில் தூக்கம் வர மறுத்தது. கடைகள் ஒவ்வொன்றாகத் திறக்கத் தொடங்க நகரமும் பரபரப்பாகிக் கொண்டிருந்தது. வேகமாய் வந்த மோட்டார் சயிக்கில் கண்ணன் இருந்த கடைக்கு முன்னால் நின்றபோது அவன் எழுந்துகொண்டான். இறங்கி கைப் பையிலிருந்து திறப்புக் கோர்வையை எடுத்தபடி அந்த மனிதர் வரும்போதே அவர்தான் அந்தக் கடையின் முதலாளி என்பது தெரிந்து விட்டது. ஒதுங்கி ஒரு ஓரமாய் நின்றான்.

"ஆர் தம்பி நீ என்னட்டை ஏதும் அலுவலோ? அறுபது வயது மதிக்கத்தக்க அவரின் அன்பான கேள்வி அவனுக்கு சிறிது ஆறுதலாயிருந்தது.

"ஐயா, எனக்குப் பெயர் கண்ணன். நுவரெலியா விலிருந்து வாறன். வீட்டில அப்பாவோட சின்னப் பிரச்சனை. அதாலை நான் உழைக்கவேணும் என்ற எண்ணத்தில வீட்டைவிட்டு வந்திட்டன். எனக்கு இஞ்ச ஆரையும் தெரியாது." என்று சொல்லி முடிக்கும்போது கலங்கி வடிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டான்.

"எத்தினை வயது உனக்கு?"

"பதினைந்து"

"இதென்ன கை எல்லாம் காயம்? சேட்டைக் கழட்டு" சற்றுத் தயங்கினான்.

"உம், கழட்டு" கழட்டிக் கையிலே வைத்துக் கொண்டான். கைகளிலும், முதுகிலும் துரைசாமியின் கைவரிசை கறுப்புக் கண்டல்களாய் இன்னும் மறையாமலிருந்தது.

"என்னடா இது சண்டை பிடிச்சனியா?" இல்லை என்பதன் அறிகுறியாய் தலையைமட்டும் ஆட்டிவிட்டு மிரள, மிரள முழித்துக் கொண்டு நின்றான்.

"என்னநடந்தது என்று சொல்லாட்டி பொலிஸைக் கூப்பிடப்போறன்"

தனக்கு முதல் கிடைத்த அறிமுகமே முரண்பாடாய் முடிந்துவிடுமோ என்ற பயத்தில் முதல்நாள் வீட்டில் நடந்த சம்பவம், தன் குடும்ப சூழல் எல்லாவற்றையும் சொல்லி முடித்தான். சொல்லி முடித்தபோது மனச்சுமை குறைந்து, கண்ணில் நீர் நிறைந்து நின்றது. கடையின் முதலாளி முருகேசன் எழுபது வருஷத்திற்கு முன் தந்தை வேலுப்பிள்ளையால் தொடங்கப்பட்ட அந்தக்கடையை இன்றுவரை தொடர்ந்து நடத்திவருகிறார். ஆரம்பத்தில் பெயர்ப் பலகையே இல்லாமல் வேலுப்பிள்ளை கடை என்று அறியப்பட்ட இந்தச் சொத்து இப்போது 'வேலுப்பிள்ளை அன் சன்'என்ற விலாசத்துடன் வவுனியாவின் பிரபல வர்த்தக நிறுவனங்களில் ஒன்றாக மாறியிருந்தது. முருகேசனின் இரண்டு மகன்களும் லண்டனில் ஒரு பெரும் வர்த்தக நிறுவனத்தை வெற்றிக ரமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

வவுனியாவிலுள்ள முக்கியமான இந்துக் கோவில் நிர்வாகத்திலும், அதன் சமூக நலத் திட்டங்களிலும் முருகேசன் தீவிர பங்காளராகவும் விசுவாசியாகவும் இருந்தார். இந்தப் பையனுக்கு ஏதாவது உதவவேண்டும் என்ற எண்ணம் வந்தாலும் திடீரென்று யாரையும் நம்பிவிடக்கூடாது என்ற அனுபவப் பாடங்களும் மனதிலே வந்து போனது.

"கண்ணன், இந்த வயதில நீ வேலை செய்யேலாது. தொடர்ந்து படிக்க ஒழுங்கு பண்ணினால் படிப்பியா?" தனது பெயரை அவர் உச்சரித்ததில் அவனது உடம் பெல்லாம் புல்லரித்தது. அவனால் பேசமுடியவில்லை.

"என்ன செலவைப்பற்றி யோசிக்கிறியா? அதைப்பற்றி ஒன்றும் யோசிக்கவேண்டாம்" அவன் பதிலை எதிர் பார்க்காமலே பணியாளைக் கூப்பிட்டார்.

"நல்லாக் களைச்சு வந்திருக்கிறான். கூட்டிக் கொண்டுபோய் சாப்பாடு ஏதாவது வாங்கிக் குடுத்து கொஞ்ச நேரம் படுக்கவிடு" பணியாளுக்குப் பின்னால் அவன் போய்க்கொண்டிருந்தான். அன்றைக்கே கோவிலின் 'அன்பு இல்லம்' நிர்வாகத்தோடு பேசி கண்ணன் அங்கு தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து முடித்தார். அன்பு இல்லத்தின் கல்வி நடவடிக்கை களுக்குப் பொறுப்பாயிருக்கும் செல்வகுமார்

மாஸ்டரோடு தொடர்புகொண்டு பாடசாலையில் சேர்ப்பதற்கான முன் ஏற்பாடுகளையும் செய்தார். கண்ணனுக்கு எல்லாம் ஏதோ கனவுபோலிருந்தது. "கண்ணன், நீ அன்பு இல்லத்தில இருந்துதான் படிக்கப்போறாய். காசு ஏதாவது வைச்சிருக்கிறியா?". அங்கே காசு வைச்சிருக்கேலாது. காசு என்னட்டை இருக்கட்டும் உனக்கு அங்கே இருக்கிறதோ, படிக்கிறதோ விருப்பமில்லையெண்டால் சேரிட்டை சொல்லிப்போட்டு எப்பவெண்டாலும் வந்து உன்ர காசை வாங்கிக்கொண்டு நீ வீட்ட போகலாம்." "இல்லை ஐயா, நான் வீட்டையிருந்து வெளிக்கிடேக்க 'முருகன் உன்னோடை இருப்பார் பயப்பிடாமல் போ' அப்பிடிச் சொல்லித்தான் அம்மா அனுப்பினாங்க. இப்ப நான் முருகனையே பாத்திட்டன்" அவன் கண்ணிலிருந்து சொரிந்தது ஆனந்தக் கண்ணீர் என்று உணரும்போது முருகேசனின் கண்களும் கலங்கியிருந்தது. அன்பு இல்லத்தில் கண்ணன் முக்கியமான பாத்திரமாய் மாறியிருந்தான். ஐந்தாம் வகுப்புக்குக் கீழே உள்ள மாணவர்களுக்கு ஆசிரியராயும் பணி செய்தான். சிங்களம் எழுதவும், சரளமாய்ப் பேசவும் அவனால் முடிந்தது பல விடயங்களில் ஆலய நிர்வாகத்திற்கும் உதவியாயிருந்தது. இல்லக் குழந்தைகள்மீது அன்பு காட்டினான். வாழ்க்கையில் அவன் சந்தித்த சோதனைகள் பாடசாலையிலும் அன்பு இல்லத்திலும் அவனைச் சிறந்த மாணவனாக வடிவமைத்தது. பிள்ளைகள் பேரப்பிள்ளைகள், கூட இல்லாததால் மாதம் ஒருதடவையாவது மனைவியுடன் அன்பு இல்லத்திற்குப்போய் குழந்தைகளுடன் பொழுதைக் கழிப்பதை முருகேசன் வழமையாக்கிக்கொண்டிருந்தார். கண்ணன் சாதாரண தரம் நல்ல முறையில் சித்தி அடைந்தாலும் மேலே படிப்பதில் அவன் ஆர்வம் காட்டாதது முருகேசனுக்கு சிறிது கவலைதான். மதுவால் சீரழிந்துபோன தன் குடும்பத்தைச் சீராக்கவேண்டிய பொறுப்பு தனக்கு இருப்பதை கண்ணன் தெளிவு படுத்தியபோது அவனைப்பற்றி அவர் பெருமைப்பட்டுக் கொண்டார். 20ம் நூற்றாண்டின் இறுதியும், 21ம் நூற்றாண்டின் தொடக்கமும் கை குலுக்கிப் பிரிந்துகொண்ட காலமது. சனத் தொகை, காணி விலை, வாடகை, வர்த்தகச் சுழற்சி எல்லாம் இரண்டு, மூன்று மடங்காய் உயர்ந்து வவுனியா வட பகுதியின் வர்த்தக சாம்ராச்சியமாய் எழுந்து நின்ற நேரம். இந்தத் திடீர் மாற்றங்களுக்கு வேலுப்பிள்ளை அன் சன்ஸ் ஈடுகொடுக்க முடியாமல் தடுமாறத் தொடங்கியது. புதிய நிறுவனங்கள் கடை விரிக்கத் தொடங்கின.

இந்த நேரத்திலேதான் கண்ணனை முருகேசன் தவிர்க்க முடியாமல் இணைத்துக் கொண்டார். நகரத்தின் காலச் சூழல் வளர்ச்சியோடு முருகேசனின் நிறுவனமும் உச்சம்தொட்டு நின்றது. 'விரும்பினால் எடு இல்லாட்டிப் போ' என்கிற பழைய பாரம்பரியங்களை கண்ணன் மாற்றியமைத்தான். பணத்தைவிட ஒரு வாடிக்கையா எரின் இழப்பு பலமானது என்பதை அவன் செயலில் காட்டியபோது முருகேசனுக்கு அந்த அனுபவம் புதிதாயிருந்தது. கண்ணனின் அணுகுமுறையால் அவனுக்கென்றே புதிய வாடிக்கையாளர் அணிவகித்தபோது முருகேசன் 'பெயரளவில் முதலாளி' என்ற நிலைக்கு வந்திருந்தார். வேலுப்பிள்ளை அன் சன்ஸில் இணைந்து மூன்று வருஷத்தில் 'கண்ணன்'என்ற பெயர் வவுனியா வர்த்தக சமூகத்தில் தவிர்க்க முடியாத தாய் மாறியிருந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை. கண்ணனை வீட்டுக்குக் கூப்பிட்டு முருகேசன் வர்த்தக நிலையத்தின் எதிர்காலம் பற்றி நிறையப் பேசினார். மூன்று வருஷ ஊதியத்தை அவனது திருப்திக்கு ஏற்ப தீர்மானித்து சற்று அதிகமாகமாகவே கொடுத்தார். "கண்ணன் நீ வந்து ஆறு வருஷம் ஆகுது. உன்ர பிடிவாதங்களை விட்டிட்டு வீட்ட போய் உன்ர கடமைகளைக் கண்டிப்பாய்ச் செய்யவேணும். இப்ப இராணுவ நடவடிக்களுக்காக ஓமந்தைப் பாதை மூடியிருக்கிறதால வியாபார நெருக்கடியும் குறைவா யிருக்கு. நீ வருமட்டும் நான் பாத்துக்கொள்ளுறன். நீ நாளைக்கே போகவேணும்." திடீரென்று அவர் சொன்னபோது கண்ணனின் இறுக்கமும் சற்று உருகத் தொடங்கியது. "சரி ஐயா, உங்கட விருப்பத்தை நான் தட்டேல்லை. எனக்கு ஒரு நாள் அவகாசம் தாருங்கோ. கணக்கு வழக்கு எல்லாம் சரியாய் முடிச்சு சிக்கல் இல்லாமல் தந்திட்டுப் போறன்" அவனது அந்தப் பணிவும் கடமை உணர்ச்சியும் அவரின் இதயத்தைத் தொட்டது. அடுத்த நாள் எல்லாம் முடித்து கனவுகளைச் சுமந்துகொண்டு புறப்பட்டுவிட்டான். நுவரெலியாவிலிருந்து ஓட்டோ ஒன்றைப் பிடித்துக்கோண்டு வீட்டை நோக்கிப் பயணப்பட்டான். மனம் அவனை முந்திப்போய் வீட்டை எட்டிப் பார்க்க முண்டியடித்தது. தந்தை திருந்தியிருப்பாரா? தாய் தன்னைக் கண்டதும் எப்படிக் குதூகலிப்பாள்? சித்திரா வளர்ந்து இன்னும் பெரிய ஆளாய் வந்திருப்பாள் என்று மனது மகிழ்ச்சியில் குதித்துக் கொண்டிருந்தது.

ஆறு வருஷத்திற்கு முன்பு பார்த்த இடங்கள் பேரிதாக மாற்றமடைந்ததாய்த் தெரிய வில்லை. வீட்டுக்குக் கிட்ட ஓட்டோ தரித்ததும் இறங்கி வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான். அவனது அழகான உடை,குறும்தாடி வெயிலுக்குள் காயாத குளிர்ச்சியான உடல்வாகு கண்ணனை அந்தச் சூழலுக்குப் பொருத்தமில்லாமல் காட்டியது. வீடு என்று சொல்லப்படும் அவனது குடியிருப்புத் தொகுதி இன்னும் உருமாறிச் சிதைந்து போயிருந்தது.

"அம்மா"பக்கத்து வீடுகளில் இருக்கும் சின்னப் பிள்ளைகளும் செல்லத்தை 'அம்மா' என்று அழைப்பதால் பதட்டமில்லாமல் வந்து கதவைத் திறந்தாள்.ஏற்கனவே பார்வைக் கோளாறு இருந்ததால் கண்ணனை உடனே அடையாளம் காணமுடியா திருந்தது. "அம்மா,நான் கண்ணன்" வாசலில் நின்றவனைக் கட்டி அணைத்து உள்ளே இழுத்துக்கொண்டாள். "எங்கடா போனனி நான் இந்த இடத்தில இருக்கிறன் என்ற ஒரு தகவல் அனுப்பியிருந்தால் இவ்வளவு கஷ்டங்கள் எங்களுக்கு வந்திருக்காதே." செல்லத்தின் அழுகை சத்தமாய் ஒலித்துக்கொண்டிருந்தது. வீட்டுக்குள் தந்தையையும், தங்கையையும் துளாவிக்கொண்டிருந்த கண்ணனின் கண்களில் கருகிப்போன மாலையோடு கண்ணாடிச் சட்டத்திற்குள் துரைசாமி புகுந்துகொண்டதை நம்ப முடியவில்லை.அவனின் விம்மலும் செல்லத்தின் அழுகையோடு சேர்ந்து ஒலித்தது.

"அப்பாக்கு என்னாச்சும்மா"

"காரணமில்லாமல் குடிச்சவரு, நீ போனதுக்கப்புறம் என்ர புள்ளையை அடிச்சுக் கலைச்சுப் போட்டனே என்று காரணம் சொல்லிக் குடியைக் கூட்டிக் கிட்டாரு. இரண்டு தடவை கொழும்புக்கெல்லாம் போய் உன்னைத் தேடினாரு. குடிச்சுக் குடிச்சு போய் சேர்ந்திட்டாரு" அழுகை விசும்பலாய்க் குறைந்து கொண்டிருந்தது. ஆரவாரத்திற்குள் உள்ளே தூங்கிக் கொண்டிருந்த குழந்தை சிணுங்கியபடி தவழ்ந்து வந்துகொண்டிருந்தது. கண்ணனுக்கு எல்லாமே அதிர்ச்சியாயிருந்தது.

"ஆற்ற குழந்தையம்மா இது"

"மருமோள்தான்" செல்லத்தின் பதிலில் உற்சாகமில்லை.

"என்னம்மா? சித்திராவின்ர குழந்தையா?"என்று கேட்டபோது அவன் முகம் இறுகிப்போயிருந்தது. இருபது வயதுக்குள் ஒரு குழந்தைக்குத் தாயா?இது சித்திராவே தேடிக்கொண்டது என்ற முடிவுக்கே அவன் வந்திருந்தான். தான் பல்லைக் கடித்துக்கொண்டு ஆறு வருஷம் அஞ்ஞாத வாசம் செய்தது அவளுக்கா கத்தானே என்று எண்ணும்போது எழுந்த ஆத்திரம் கண்களில் தெரிந்தது.

"குமார் என்று ஒரு பையன் பதுளையில அப்பாவோட வேலை பாக்கிறவன் என்று இரண்டு தடவை அவர்கூட வந்ததிலதான் எங்களுக்குப் பழக்கம். அப்பா திடீரென்று ஆஸ்பத்திரியில செத்துப்போனதும் அவனைத் தவிர எங்களுக்கு உதவ ஆருமே முன்வரேல்லை.செத்த வீட்டுச் செலவுக்கெண்டு அவனிட்டத்தான் ஒரு வருஷத் தவணையில கொஞ்சம் காசு கடனாய் வாங்கினனான். சடலத்தை ஏதோ அடக்கம் பண்ணவேணும் எண்டதுதான் முக்கியமாய்த் தெரிஞ்சதேயொழிய திருப்பிக் கொடுக்க முருகன் ஏதாவது வழி விடுவான் என்ற நம்பிக்கைதான் இருந்தது."

"தவணை முடிஞ்சு பிறகும் ஆறு மாதம் தவணை கேட்டு அதுகும் முடிஞ்சுபோச்சு. இறுதியாய் மாமாவுக்கு செய்த கடமையாய் நினைச்சுக் கொள்ளுறன் சித்திராவைக் கட்டித் தாருங்கோ என்று வந்தான். சித்திரா அண்ணை வரவேணும் என்று அடியோடு மறுத்துவிட்டாள். வேற வழி தெரியேல்லை.சமாதானம் சொல்லி அவளின்ர முழு விருப்பமில்லாமலே செய்து குடுக்கவேண்டியதாய்ப் போச்சு" ஒரு பெருமூச்சோடு கண்களைத் துடைத்துக்கொண்டாள் செல்லம். குழந்தையைத் தூக்கி தோழோடு அணைத்துக் கொண்டான். பிறந்தபோது இருந்ததை விட நைந்துபோன அரைஞாண் கயிறு மாத்திரம் குழந்தையின் இடுப்பிலே மேலதிகமாய் இருந்தது. குமாரின் இலட்சணத்தை அதைக்கொண்டே கண்ணன் புரிந்துகொண்டான்.

"சித்திரா எங்கே அம்மா?"

"எனக்கு கண்பார்வை சரியில்லாததால வேலை இல்லை எண்டிட்டாங்கள். சித்திராவின்ர உழைப்பிலதான் குடும்பம் உருளுது. இப்ப வாற நேரம்தான். வந்திடுவாள். கதவிலே தட்டவெளிக்கிட்ட சித்திரா தாயின் புலம்பலும் ஆண் குரலும் உள்ளேயிருந்து வந்தபோது அதிர்ச்சியில் உறைந்து போனாள். குமார்தான் வந்திருக்கிறன் என்று எண்ணியபோது ஆத்திரத்தில் உடல் கொதித்தது. கதவில் சத்தமாய்த் தட்டினாள்.யாரோ ஒருவனின் தோழில் தன் குழந்தை. அவளுக்கு எதுவுமே புரியவில்லை. கண்ணனுக்கு சித்திராவின் கோலம் தலையிலே அடித்துக் கொண்டு அழ வேண்டும்போலிருந்தது. வந்திருப்பது கண்ணன் என்று அறிந்ததும் கட்டிக்கொண்டு அழுதாள்.

"உனக்கு ஒருவேலையும் இல்லாமல் எல்லாமே முடிஞ்சு போச்சண்ணை" அழுகையோடு வந்த வார்த்தை களின் முன் அவன் குற்றவாளியாய்க் குறுகி நின்றான்.
"குடும்ப மானம் போகக்கூடாது என்று அம்மாவின்ர சொல்லைக் கேட்டு குமாரை கட்டினன். இப்ப அவன் வேண்டாம் என்ற முடிவுக்கே வந்திட்டன்."
"பொறம்மா அவசரப்படாதை.யோசியாமல் எல்லாம் செய்தாச்சு. இனியெண்டாலும் சிலதை கொஞ்சம் பொறுமையாய்க் கையாளுறது நல்லது." கண்ணன் சித்திராவின் தலையைத் தடவி அமைதிப்படுத்த முயன்றான்.
"கலியாணம் கட்டி மூன்று மாதம்கூட சந்தோஷமாய் இருக்கேல்லை. ஆரம்பத்தில பதுளையில வேலை என்று ஒவ்வொரு நாளும் வீட்ட வந்து போனவன் பிறகு கிழமைக்கு ஒருக்கால் மாதத்திற்கு இரண்டு தடவை என்றாகி இப்ப இரண்டு மாதமாய் ஆளும் இல்லை தகவலும் இல்லை. மூன்று மாதத்துக்குப் பிறகுதான் குடிக்கிறான் என்று தெரியும். வீட்டை வந்தால் என்ர சம்பளக் காசைக் கேட்டு ஒரே சண்டை. அடிவாங்க லாம். அயலுக்குள்ளை அவமானப்பட்டுக் கொண்டி ருக்கேலாது.கடைசியாய் வரேக்கை பிள்ளையைத் தூக்கி வைச்சு செல்லம் கொஞ்சிக்கொண்டிருந்தான். அம்மா சொன்னா பொறுப்பு வர திருந்துவான். நீ கொஞ்சம் பொறுமையாய் நடந்கொள் என்று. சம்பளக் காசில மிச்சம் பிடிச்சு கால் பவுணில இரண்டு காது வளையம் வாங்கிப் பிள்ளைக்குப் போட்டிருந்தனான். விடியப் பாத்தால் ஆளும் இல்லை. பிள்ளையின்ர காதிலை இருந்த தோடும் இல்லை. இவன் நாளைக்கு என்னையும் விலை பேசமாட்டான் என்று என்ன நிச்சயம். நீ எனக்கு ஏதாவது நல்லது செய்யவேணு மெண்டு நினைச்சால் அவனிட்டையிருந்து என்னை வெட்டிவிடு." சித்திராவின் அழுகையை ஆற்றுப்படுத்த முடியாமல் அவன் தோற்றுப்போய் நின்றான். அடுத்த நாள் சித்திராவை பதுளைக்கு அழைத்துப்போய் அவளுக்கும் குழந்தைக்கும் நகைகள் உடுப்புகள் எல்லாம் வாங்கிக் கொடுத்தான். தாய்க்கு கண் பரிசோதனை செய்து கண்ணாடிக்கு பதிவு செய்தான். பின்னேரம் கண்ணன் வந்ததை அறிந்த அக்கம் பக்கத்தில் உள்ள வர்கள் வந்து போய்க்கொண்டிருந்தனர்.சோகங்களைக் கடந்து ஒரு மகிழ்ச்சி மெல்லிய ஒளியாய் வீட்டில் பரவத் தொடங்கியிருந்தது. இரண்டு நாள் கழித்து கண்ணன் பழைய நண்பரகளுடன் வெளியில் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தான். குடிபோதையில் தட்டுத் தடுமாறி ஒருவன் வந்துகொண்டிருந்தான். "இவன்தான் உன்ர மச்சான்"நண்பர்கள் சொன்னது அவனுக்கு அதிர்ச்சியாயிருந்தது. மௌனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தான். காலிலே கால் தடக்க நடந்துபோன குமார் நிலையிலே பிடித்துத் தாங்கியபடி கதவைக் காலால் உதைத்தான்.பலவீனமான கதவு பலத்த சத்தத்தோடு திறந்துகொண்டது. கண்ணன் அவசர அவசரமாய் வீட்டை நோக்கி நடந்தான்.
"போடா வெளியிலை.பிள்ளையின்ர காதுத் தோட்டைக் கழட்டி வித்துக் குடிக்கிற நீயெல்லாம் ஒரு மனுஷன்?" சித்திரா கோபத்தின் உச்சத்தில் நின்றாள்.
"நீ பேசுவாய் ஆரடி பதுளைக்குக் கூட்டிக் கொண்டு போய் நகை வாங்கித் தந்தவனாம்.அவனை என்ன வைச்சிருக்கிறியோ, இல்லைக் கட்டீட்டியோ?" கழுத்தைப் பிடிக்கக் கையைக் கொண்டுபோனவனை தள்ளிவிட்டாள் சித்திரா..மல்லாக்காய் விழுந்தவனின் பிடரி சீமெந்துக் குந்திலே அடிபட்டு இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.கண்ணன் வருவதற்குள் எல்லாமே நடந்து முடிந்துவிட்டது. ஓடிவந்து தூக்கினான் தலை மடிந்து தொங்கியது. நண்பர்களும் ஓடி வந்துவிட்டனர். பரிசோதித்ததில் உயிர் போய்விட்டது உறுதியானது. பொலிஸ் விசாரணையில் சகோதரியைக் காப்பாற்றத் தானே தள்ளிவிட்டதாக கண்ணன் வாக்குமூலமளித்தான்.சடலத்தை வைத்திய சாலைக்கு அனுப்பிவிட்டு பொலிசார் கண்ணனைக் கைதுசெயதனர். சகோதரிக்கு உதவிய பொறுப்புணர் வின் முன் கைது அல்ல தூக்கையும் ஏற்றுக்கொள்ள அவன் மனம் உறுதியாயிருந்தது. ஓமந்தைப் பாதை திறந்து வியாபாரம் களை கட்டத் தொடங்கியிருந்தது. வரும் வாடிக்கையாளரின் முதற் கேள்வி "கண்ணன் எங்க ஐயா" என்பதாகவே இருந்தது. "கண்ணன் வருவான்"என்று சொல்லும்போது முருகேசனின் மனதில் அவன் உயர்ந்து நின்றான். "எங்கிருந்தோ வந்தான்.இடைச்சாதி நான் என்றான் இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன் கண்ணன்....." முன்னாலிருந்த ஒலிப்பதிவுக் கூடத்திலிருந்து வந்த சீர்காழியின் காந்தக் குரல் முருகேசனின் காதில் புகுந்து மனத்தை நிறைத்துக்கொண்டிருந்தது.

வாசிப்பதுவும் வாசிப்பதைப்பற்றிச் சிந்திப்பதும் நிறைவான படைப்பாளி உருவாவதற்கான அடையாளங்களாகும்.

பிணைப்பு

சிறப்புச் சிறுகதை

ஓவியம்: கைலாசநாதன்

சின்னப் பொடியர் வயல் வரம்பில் நிற்கிறார். பருவத்தின் பூரிப்பை எடுத்துக்காட்டும் உடையுடன் நாணிக்கோணி நிற்கும் அழகியின் விழியசைப்பை எதிர்நோக்கியிருக்கும் வாலிபனின் முகக்களை அவரிடமிருக்கிறது. அவர் உள்ளத்துக்குக் கிளுகிளுப்பையும் இன்பத்தையும் கொடுத்துக் கொண்டு நிற்கிறாள் நிலம் என்னும் நல்லாள். புதுப்பொலிவுடன் வளர்ந்து கதிர் வந்து பாறேலறித் தலைகுனிந்து நிற்கும் நெற்கதிர்களைக் கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டு நிற்பதில் ஒரு காதலனுக்குள்ள இன்பம் அவருக்கு.

நெடுங்கேணியென்னும் கிராமத்தில் உள்ள அந்த நிலம் அவருக்குச் சொந்தம். அவர் அந்த நிலத்துக்குச் சொந்தம். பிரிக்கமுடியாத பிணைப்பு. அன்றொரு நாள் மணவறையிலே நாணிக்கோணி வந்து அருகே இருந்தாளே மீனாட்சி. அவளுக்கும் அவருக்கும் இடையில் உள்ள பிணைப்புக்கூட இதற்கு ஈடாகமாட்டாது என்று தான் கூறவேண்டும். கல்யாணம் செய்த புதிதில் மீனாட்சி கூடச் சொல்லியிருக்கிறாள். "உங்களுக்கு எங்களைவிட வயல் காணியில்தான் பட்சம் கூட ஒரு நாளெண்டாலும் வீட்டிலை தங்கிறியள் இல்லையே" பழைய நினைவுகளை மனம் அசைபோட வயல் வரம்பிலே நடக்கிறார். ஐந்து வயதாயிருக்கும்போது தந்தையை இழந்தது. பத்து வயதில் தாயைப் பறிகொடுத்தது அநாதையானது. உடை யாருக்கு அடிமையாகி ஓடாய் உழைத்தது எல்லாம் அவர் மனத் திலே திரைப்படம் காட்டின. சம்பளம் பெறாத கூலியாளராய் உடையார் வீட்டுப் பணிவிடைகளையெல்லாம் செய்து முடித்தது எல்லாம் பழங்கதைகள்.

உடையாரின் மனைவி தங்கமான மனுஷி. அந்த அம்மையாரது சிபாரிசின் பேரிலேதான் உடையாரின் மனம் இரங்கியது. பத்து வருஷ உழைப்பின் பின் வருஷத்துக்கு இருநூறு ரூபா சம்பளம் போட்டுக் கொடுத்தார் உடையார். இப்படிச் சேர்த்துக்கொண்ட ஆயிரம் ரூபா சின்னப்பொடியரை இரண்டு ஏக்கர் காணிக்குச் சொந்தக்காரனாக்கியது. நெற்கதிர்களை உற்றுப் பார்க்கிறார். இன்னும் ஒரு மாதத்திற்குள் அரிவி வெட்டலாம்.

"இம்முறையெண்டாலும் ஒரு 'வாட்டர்பம்ப்' வாங்கிப் போடவேணும்" முதல் வருஷம்தான் பூமித்தாய் அவரை வஞ்சித்து விட்டாள். வானம் பொய்த்து விட்டதால் போட்ட முதலைக்கூட எடுக்க முடியாமல் போய்விட்டது.

ஓரளவென்றாலும் அவரிடம் பசையிருக்கிறதென்றால் அது அவரின் மேட்டுநிலம் மிளகாய்த் தோட்டம் கொடுத்த பரிசுதான்! அவரின் மூத்த மகள் தங்கத்துக்குப் பிள்ளை பேற்றுக்காலம் நெருங்கி விட்டது. அவள் சின்னப்பொடியர் வீட்டிலே முகாம் போட்டு விட்டாள். மகன் ஆனந்தன் யாழ்ப்பாணத்தில் படிக்கிறான். மூன்றுமுறை பரீட்சையெடுத்து நாலு 'சி'யுடன் பாஸ் பண்ணிவிட்டான். அது அவருக்குப் பெரியபெருமை. சின்னப்பெடியர் மழைக்குக் கூடப் பள்ளிக்கூடத் தாழ்வாரத்தில் ஒதுங்கும் பாக்கியம் பெறவில்லை. இவருடைய அறியாமையை கணக்கு வழக்குத் தெரியாத தன்மையை பயன்படுத்திப் புகையிலை வியாபாரி அவரை ஏமாற்றி விட்டபோது தான் அவருக்கு ரோஷம் பிறந்தது. கணக்கு வழக்குத் தெரியவேணும். இந்த எண்ணமே ஆனந்தனை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பத் தூண்டியது. இளையவன் இராசையா ஐந்தாம் வகுப்புடன் ஏடு கட்டிவிட்டான். மூன்றடி ஒரு யாரா? மூன்று யார் ஓர் அடியா

என்ற தகராறுதான் இராசையாவின் படிப்புக்கு முற்றுப்புள்ளிவைத்தது. 'இராசையாவுக்கும் படிப்புக்கும் வெகுதூரம்' என வகுப்பாசிரியர் செய்த சிபார்சின் பேரில் படிப்புக்கு முழுக்குப்போட்டு விட்டான் இராசையா.

சின்னப்பொடியரைப் பார்ப்பவர்கள் அவருக்கு ஐம்பது வயதிருக்கும் என்று மதிக்க மாட்டார்கள். உழைத்து உழைத்து உரமேறிய உடம்பு

1950 இலிருந்து தன் எழுத்துப் பணியை ஆரம்பித்த முல்லை மணி (இயற்பெயர்: வே. சுப்பிரமணியம்) அவர்கள் பல நரடகங்களை எழுதித் தயாரித்ததுமல்லாமல் பல சிறுகதைகள் கவிதைகளையும் பல பத்திரிகைகளையும் எழுதியுள்ளார். இவர் 2016 ஆம் ஆண்டு எம்மைவிட்டு மறைந்துவிட்டார். இவரை நினைவு கூர்ந்து இவரது சிறுகதையொன்றை சிறப்புக் கதையாகத் தருகிறோம்.

இரும்பைப்போல் இருந்தது. அவருடைய சீவாத பரட்டைத்தலையும் பல நாட்கள் நாவிதனின் சேவையைப் பெறாது குத்திட்டு அடர்த்தியாக நிற்கும் உரோமங்களைக் கொண்ட முகமும் பழுப்பேறிய நாலு முழவேட்டிக் கட்டும் சின்னப்பொடியரை இனங்காணப்போதுமான இலட்சணங்கள். இராசையா சோறு கொண்டு வருகின்றான்.

"வா மேனை வா கொக்காவின்ரை பாடு எப்படி?"

"அவ சுகமாய்த்தான் இருக்கிறா?"

"வா வா ரெண்டு பேருமாய்ச் சாப்பிடுவம்"

"நான் சாப்பிட்டிட்டன் அப்பு: இது உங்களுக்குத்தான் சாப்பிடுங்கோ"

"சரி சாப்பிட்டிட்டு வேலிகட்டவேணும் மான்கொடியை எடுத்து நனையப்போடு" இராசையா மான் கொடிச் சுருளை எடுத்து நீருள் இடுகின்றான்.

"வேலி அடைச்சுப்போட்டு மிளகாய்க் கண்டுத் தறைக்குப் போகவேணும். தையிலை வைச்ச கண்டுகள் பாத்தி கட்டியாச்சு, இண்டைக்கு இறைக்கவேணும்" மனதில் திட்டம் தீட்டுகிறார் சின்னப்பொடியர். இரண்டு ஏக்கர் தோட்டக்காணிதான் அவர் முதல் வாங்கியது. அது தான் அவரை ஆளாக்கியது. பிறகு 'கெட்டு நொந்து போன' உடையாரிடம் ஐந்து ஏக்கர் நெற்காணியும் வாங்கிவிட்டார். தங்கத்தின் 'கிளறிக்கல்' மாப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை கொழும்பில் உத்தியோகம். அதுவும் அவருக்குப் பெருமையான விஷ யந்தான். இரும்பாக இருந்த சின்னப்பொடியர் தும்பாக இளைத்துப் போய்விட்டார். அவருக்குத் தீராத வருத்தம் புற்றுநோயாம். கொழும்புக்குக் கொண்டுபோய் வைத்தியம் செய்தும் பலன் கிடைக்கவில்லை. சின்னப்பொடியர் நெடுங்கேணியில் பெரிய புள்ளியாக இல்லாவிட்டாலும், நாலுபேர் மதிக்கக்கூடிய முறையில் இருந்தார். அவருடைய கடைசிக்காலம் இப்படி வரும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

"யாழ்ப்பாணத்தில் படிக்கிற ஆனந்தனுக்கு சுண்டிக்குளிப் 'பெடிச்சி'யொன்றுடன் காதலாம். பொட்டையின்ரை தாய் தேப்பனுக்குச் சம்மதமாம். ஆனால் பெடிச்சியை வன்னிக்கு விட அவர்களுக்கு விருப்பமில்லை. வன்னியிலுள்ள காணி பூமியை விற்றுவிட்டு, யாழ்ப்பாணம் வரச் சம்மதித்தால் பெடிச்சியை ஆனந்தனுக்குக் கொடுக்கச் சம்மதமாம்." யாழ்ப்பாணம் சென்றுவந்த அடுத்தவீட்டுக்காரத் தம்பையர் கொண்டுவந்த தகவல் இது.

"அவைக்குச் சம்மதமாமோ? பெத்து வளர்த்து காசு சிலவழிச்சுப் படிப்பிச்ச என்னைக் கேளாமல்..." பலவீனமான நிலையிலும் துள்ளியெழுகின்றார், சின்னப்பொடியர். ஒரு தந்தியடித்து ஆனந்தனைக் கூப்பிடும்படி கட்டளையிடுகிறார் அவர். கடைசிக் காலத்திலே தானும் கணவனும் தகப்பனுக்குப் பக்கத்திலிருக்க வேண்டும் என நினைத்துக் கிருஷ்ணபிள்ளையையும் வரவழைத்துவிட்டாள் தங்கம். தங்கத்தின் குடுமியும் சும்மா ஆடவில்லை, கடைக்குட்டி இராசையாவின் மீது சின்னப்பொடியருக்குப் பாசம் அதிகம். அதனால் காணி பூமியின் பெரும்பங்கை அவனுக்கு எழுதி விடுவாரோ என்ற பயம் அவளுக்கு. ஆனந்தனும் பன்னிரண்டு மணிக்கு வந்து சேர்ந்த பத்துமணி பஸ்ஸில் வந்துவிட்டான். என்னதான் கோபமிருந்தாலும் பெற்ற பிள்ளையைக் கண்ட சின்னப்பொடியர் துள்ளி விழவில்லை. மனதிற்குள் எரிந்து புகைந்து வேதனையையும் காட்டிக்கொள்ளாமல் மகனை அருகில் அழைக்கிறார்.

"மோனை! என்ரை நிலைவரம் உனக்குத் தெரியும். இண்டைக்கோ நாளைக்கோ எண்டிருக்கிறன்." அவர் கண்ணில் நீர் பனிக்கின்றது. பக்கத்தில் நின்ற ஆனந்தன், இராசையா, மீனாட்சி, தங்கம் எல்லோருமே கண்ணைத் துடைத்துக் கொள்கின்றனர்.

"உங்களுக்குத் தெரியுந்தானே, நான் எவ்வளவு கஷ்டப்பட்டுக் காணி பூமியைச் சம்பாரிச்சதெண்டு எனக்குப் பிறகு அதைப் பார்க்க மேய்க்க, தம்பிக்கு உதவியாக நீயிருக்க வேணும். இனிப் படிச்சது போதும்." பக்கத்தில் நின்ற தங்கம் ஆனந்தனை முடுக்கி

விடுகின்றாள்.

“அப்பு! நான் சொல்லுறனெண்டு குறை நினையாதையுங்கோ. அத்தானும் எத்தினை நாளைக்குக் கடைச் சாப்பாடு சாப்பிடுறது. கொழும்பில் ஒரு ‘அனெக்ஸ்’ வாடகைக்கு எடுத்து அக்காவையும் கூட்டிக்கொண்டு போக விரும்புகிறார். கொழும்பிலை வீடு எடுக்கிற தெண்டால் ஆயிரம் ரெண்டாயிரம் சந்தோஷம் கொடுக்கவேணும்.”

சின்னப்பொடியர் நெஞ்சை அமர்த்திப் பிடித்துக் கொண்டு ‘லொக் லொக்’ என இருமுகிறார். அவர் எழும்ப முயலும்போது தங்கமும் மீனாட்சியும் தாங்கிப் பிடிக்கின்றனர்.

“எனக்கும் நெடுங்கேணியிலை இருக்கிறது விருப்ப மில்லை. இது நாகரிகம் இல்லாத இடம். என்ரை ‘பிறண்ட்ஸ்’ பகிடி பண்ணுகினம். நீங்க கண் மூட முந்தி காணி பூமியை வித்து நானும் அக்காவும் பிரிச்சுக் கொள்ளுறம். தம்பிக்கு வீடு வளவு கிடக்குத்தானே” கிழவர் எப்படித் துள்ளியெழுந்தார் என்று சொல்ல முடியாது.

“டே இது நிலமில்லையடா என் இரத்தமடா. என் வியர்வையடா. ஏன் உங்கடை உடம்பு, இறைச்சி, இரத்தம் எல்லாம் இந்த நிலத்திலிருந்து பெற்றது தானடா. உன்னை இப்படிப் பேச வைச்சதும் இந்த நிலம்தான். நிலத்தை விற்கச் சம்மதிக்க மாட்டேன். இது என் உயிர்.” கிழவர் எழுந்து ஓடுகிறார். எல்லோரும் அவர் பின்னால் ஓடுகின்றனர். ஆடியுழவு உழுத வயல் நிலம். இரண்டு கையாலும் மண்ணை அள்ளுகிறார். இந்த மண்...! என்னை உங்களை எல்லோரையும் வளர்த்தது, இந்த மண்தான். மூண்டு வரியம் மழையில்லாமல் நெல் விளையாமல் பட்டினியாய்க் கிடந்த போதுகூட இந்த மண்ணை விற்கவில்லை. இதை விற்க விடமாட்டேன். ஆவேசம் வந்தவர் போல் இரைகின்றார். “அப்பு நிலத்தை விற்கவில்லை. நிலத்தை ஒரு போதும் விற்கமாட்டேன்” ஆனந்தன் கூறுகிறான். “நான் செத்த பிறகு என்னை இந்த நிலத்தில்தான் எரிக்கவேணும். சாம்பலை இந்த வயலில்தான் தூவ வேணும்.” மண்ணிலே விழுந்த உருளுகின்றார். அவர் முகத்திலே ஒரு பிரகாசம், தாயின் மடியிலுள்ள குழந்தை போன்றதொரு நினைப்பு. கண்ணை மூடுகின்றார் பிறகு கண் திறக்கவேயில்லை!

www

திரு ‘மதி’

மாலதிக்கு இந்த பாடலைக் கேட்ட போதெல்லாம் அவளுள் பல கேள்விகள் எழுப்பி அவளை குடைந்து கொண்டு இருந்தது “எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே ,பின் நல்லவராவது தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே” இந்தப்பாடலின் இரண்டாவது அடிதான் அவளின் பிரச்சனை.

அவளின் மூத்தமகன் உத்தமன் இலங்கையில் பிறந்தவன். ஆறு வயதுவரை அங்கேயே ஆரம்ப பாடசாலையில் முதலாம் ஆண்டு முடிந்த கையோடு அவள் கணவன் அவளையும் உத்தமனையும் வரும்படி இருவருக்கும் டிக்கெட்டுகள், வீசா எடுக்கும் பத்திரங்கள் எல்லாம் அனுப்பி லண்டனுக்கு வந்தார்கள். அவள் கணவன் சரவணன் லண்டனில் பெயர்பெற்ற ஒரு வியாபார ஸ்தலத்தில் வேலை பார்க்கிறான். குடும்பத்தை



வரைதல்: கைலாசநாதன்

கூப்பிட்டு விட்டவன் அதோடு தன் கடமை முடிந்ததாக நினைக்கும் வண்ணம் தன் நேரத்தை வீட்டில் கழிப்பதை விட வேலைத்தளத்திலும் மிகுதி நேரத்தை தன் நண்பர்க ளோடும் அதிகம் செலவழிப்பான். தான் பிறந்த குடும்பத்தை விட்டு வெகுதூரம் வந்ததால் குடும்ப இணைப்பை விட நண்பர்களின் சேர்க்கைக்கும் வந்து சேர்ந்த நாட்டின் கலாச்சாரத்துக்கும் முக்கிய இடம் கொடுத்து இருந்தான். சரவணன் லண்டன் வந்து பதினைந்து வருடங்களுக்கு பின் ஊர் திரும்பியவனை பெற்றோர்கள் பார்த்து மாலதியை மணம் முடித்து வைத்தார்கள். விவாகம் முடிந்த சில மாதங்கள் பின் அவன் லண்டன் திரும்பும் போது மாலதி இரண்டுமாத கர்ப்பிணியாக இருந்தவள் ஆறு வயது மகனோடு லண்டன் வந்து சேர்ந்தாள். தற்போது உத்தமனோடு சேர்த்து நான்கு குழந்தைகள். மாலதி யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்ட படிப்பை முடிந்து வேலைக்கு போகும் முன் இக் கலியாணம் பொருந்தி வரவும், அதை தொடர்ந்து கர்ப்பிணியானதால், அவளின் வேலைக் கனவு பகல் கனவானது. லண்டன் வந்த ஆரம்ப காலங்களில் இந்நாட்டு குளிரையும் கலாசாரத்தையும் புரிந்துகொள்ள சில மாதங்கள் எடுத்தாலும், அவளுக்கும் கணவனுக்கும் இடையே பெரிய ஓட்டுதல் வரவில்லை. அதேபோல் உத்தமனுக்கும் தகப்பனுக்கு நெருக்கம் இல்லை என்பதை விட இனம் புரியாத பனிப்போர். உத்தமன் பிறந்து ஆறு வருடங்கள் உற்றார் உறவுகளோடு வாழ்ந்த வாழ்க்கையை மறக்க முடியாமலும் வந்த நாட்டின் முரண்களை சமாளிக்க முடியாமலும் இரட்டை வால் குருவி போல் குளம்பிக்கொண்டு இருந்தான்.

''எனக்கு இங்கு இருக்க பிடிக்கவில்லை தாத்தா பாட்டியிடம் போகலாம் வாங்க அம்மா'' என்று தாயை நச்சரித்துக் கொண்டு இருந்தவனை இங்கு இருக்கும் மன நிலைக்கு கொண்டு வர மாலதி பெரிதும் சிரமப்பட்டாள்.

கணவனின் ஆறுதல் அவளுக்கு கிடைக்காதது போல் அடம்பிடிக்கும் மகனையும் அன்பு காட்டி அணைக்க அவன் தகப்பன் முன் வருவதில்லை. ஏதாவது பிரச்சனையை கணவன் முன் கொண்டு போனால் ''அது நீ பழக்கிய பழக்கம். ஊரில் எல்லோரும் செல்லம் கொடுத்து பிள்ளையை பழுதாகி வைத்து இருக்கு'' என்று சொல்லி தீர்வு காணாமலே விலகிப் போய் விடுவான் . அல்லது அணைத்து ஆறுதல் சொல்லி திருத்துவதற்கு பதிலாக கண் மூடி தனமாக அடிப்பான். அன்பைவிட வெறுப்பு என்னும் நெருப்பையே மகன் மீது கொட்டுவான் . நாட்கள் செல்ல செல்ல அந்த வெறுப்பையும் அக்கறை இன்மையையும் மனைவி மீதும் காட்டுவான் அப்போதெல்லாம் மாலதி சிறகொடிந்த பறவை போல் துடிப்பாள். தன்மேல் குற்றம் சொல்லும் கணவன் இங்கு வந்து பிறந்த பிள்ளைகளிலும் அக்கறை காட்டுவதில்லை. அவர்கள் அடம் பிடித்தால் அவர்களுக்கு கொடுக்கும் தண்டனை, உத்தமனுக்கு கொடுக்கும் தண்டனையை விட சற்றுக் குறைவாக இருக்கும் சரவணன் .

பதினைந்து பதினாறு வருடங்களாக இங்கு வந்து தன் மனம் போல் சுதந்திரமாக வாழ்ந்தவனுக்கு குடும்பம் சுமையாக தோன்றியது. எந்த பொறுப்பும் இல்லாத,தன் கடமைகள் எதையும் ஏற்றுக்கொள்ளாத ஒரு ஜடத்தோடுதான் தன் வாழ்க்கை பிணைக்கப்பட்டது என்பதை அவள் இங்கு வந்த சில மாதங்களிலேயே உணர்ந்து கொண்டாள். கூப்பிட்ட கடமைக்கு உங்களுக்கு சோறு போடுகிறேன் அவ்வளவுதான் என்பான். சண்டை பிடித்தவாறு தன் பக்க நியாயத்தை எடுத்து சொல்ல அவளுக்கு நேரம் கொடுப்பதில்லை. அவன் வெளியில் போனாலும் ,வீட்டில் இருந்தாலும்,படுக்கைக்கு போனாலும் அவன் துணை அவன் செல்போன் மட்டும் தான். சுருக்கமாக சொன்னால் அவன் அவளுக்கு அவள் வீட்டில் குடி இருக்கும் ஒரு அந்நியன் போல். பிள்ளைகள் ஒன்றோடு ஒன்று சண்டை போட்டாலும் சரி,அடம் பிடித்து அழுதாலும் சரி என்ன நடந்தது என்று விசாரிக்காமல் ' எல்லாம் தாய் பழக்கிய பழக்கம் 'என்று சினந்து கொண்டே வெளியில் போய்விடுவான். பிள்ளைகளின் மேல் ,தன் மேல் அன்பு காட்ட முடியாத கணவன் , எப்படி நடந்தாலும் கவலை இல்லை என்ற இறுக்கமான மனநிலைக்கு அவள் வந்து வெகுநாட்களாகி விட்டது. உத்தமன் பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கிறான். படிப்பில் பெரும் புள்ளி இல்லை. எல்லாம் சுமார்தான். வீட்டில் தங்குவதை விட வெளியில் காலத்தைப் போக்குவதில் அவன் தன் தகப்பனை போல் நடக்க தொடங்கி விட்டான். ஏதாவது கேட்டால் எரிந்து விழுவான். அவனிடமும் அன்பு ஊற்று வற்ற தொடங்கி விட்டது. அவனுக்கும் அவனுக்கு அடுத்து பிறந்த பிள்ளைக்கும் இடையில் எட்டு வயது இடைவெளி இருப்பதால் அவர்களுடனும் தந்தையின் பாணியையே அவனும் கைப்பற்றினான். பிள்ளைகள் அண்ணா என்று அழைத்தாலும் காதில் வாங்கிக்கொள்ள மாட்டான். பிள்ளைகளுக்கும் அவர்களுக்கிடையே சமாதானம்

இல்லை. அந்தக் கவலை எல்லாம் அவளுக்கு தான். உத்தமன் பத்தாம் வகுப்பு படிக்கும் போதே அவனின் ஆசிரியை மாலதியை வரவழைத்து அவனுக்கு நல்ல' 'கவுன்சிலிங்'தேவை என்று அறிவுறுத்தியுள்ளார். அதை அவள் கணவன் காதில் போட்டும் அவன் எதையும் வாங்கிக்கொள்ளவில்லை.

"இங்கு படிக்க இஸ்டம் இல்லை என்றால் ஊருக்கு அனுப்பி விடு" என்று சொல்லிவிட்டு பிரச்சனையில் இருந்து நழுவிக்கொண்டான் . உத்தமன் முன்பெல்லாம் வீட்டுக்கு யார் வந்தாலும் அவர்களை அன்பாக வரவேற்பான். குசலம் விசாரிப்பான் . ஏதாவது குடிக்கிறீர்களா? என்று கேடப்பான் . டெலிபோனில் யார் அழைத்தாலும் அவர்களுடன் நட்புரிமையுடன் பேசி விபரம் அறிந்து தகவல் சொல்வான். அவர்கள் எல்லோரும் அவனிடம் அன்பு காட்டுவார்கள். அவன் தன் பெயருக்கு அர்த்தம் காட்டும் உத்தமனாகவே இருக்கிறான் என்று சொல்வார்கள். இப்போது யார் வந்தாலும் அவன் அவர்களைக் கண்டும் காணாதவன் போல் சென்று விடுவான் . அம்மா என்ன சமைத்து இருக்கிறீர்கள் என்று குசினியையும் தாயையும் சுற்றி வந்தவன் இப்போது கூப்பிட்டாலும் பதில் மொழி சொல்வதில்லை . தன் அறைக்குள் கதவை தாழ்பாள் போட்டுக் கொண்டு மடிக்கணனியில் முழுக் கவனத்தையும் வைத்து இருக்கிறான். அவளும் உத்தமன் செய்கைகளால் மனமுடைந்து போனாள். மகன் உத்தமன் கொடுக்கும் மனஉளைச்சலால் அவள் மற்ற குழந்தைகளின் மேலும் கவனம் செலுத்த முடிவதில்லை. சரவணனிடம் பிள்ளைகளின் பிரச்சனைகள் பற்றி எப்பொழுது சொன்னாலும் அவன் வாயில் இருந்து வருவதும் இந்த பாடல் வரிகள்தான். இது அவளின் வேதனையை இன்னும் கூட்டிக் கொண்டு இருந்தது. ஒரு தாய் தன் வயிற்றில் குழந்தை உருவான காலத்தில் இருந்து பிரசவிக்கும் காலம் வரை முகம் காணாத குழந்தைக்காக எவ்வளவு பத்தியம் இருக்கிறாள். பிறக்கப்போகும் தன் குழந்தையின் உடல் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்துக்கும் தன்னையே ஒறுத்து வாழ தொடங் குகிறாள். பிறக்கப்போகும் குழந்தை ஊனமுற்ற குழந்தையாக வந்துவிடக்கூடாது என்பதற்காக வேண்டாத தெய்வம் இல்லை.வைக்காத நேர்த்தியும் இல்லை. பின் மண்ணில் பிறந்த வேளை தொட்டு எழுந்து நடமாடும் காலம் வரை கண்ணும் கருத்துமாக அக் குழந்தைமேல் அக்கறை காட்டுகிறாள். அதன் எதிர்காலம் பற்றிய கனவும் அதன் தேவையும் அவள் மனதில் ஆழமான விதையாக விழுந்து முளைவிட தொடங்கி விடுகிறது. எந்த தாயும் தன் குழந்தையை மற்றவர் போற்றும் படி வளர்க்கவே ஆசைப்படுவாள். நற்குணம் உள்ளவர்களாக வளர நல்ல போதனைகள் நிறைந்த கதைகளை தன் தாலாட்டுப் பாட்டுக்கள் மூலம் சொல்ல தொடங்கி விடுவாள் . விளையாட்டுக்கு கூட பொய் சொல்லக்கூடாது என்று போதிப்பாள். அப்படிப்பட்ட தாய் மேல் அவன் தீயவனாவதற்கும் அவள் வளர்ப்பு தான் காரணம் என்பது எவ்வளவு அபத்தமானது.

நாம் ஏன் அழுகிறோம்? வாழ்க்கையில் ஏமாற்றப்படடால் அதன் துரோகத்தை, அது தரும் வேதனையை தாங்க முடியாமல் அழுகிறோம். மற்றவகளால் உதாசீனம் செய்யப்பட்டால் அவமானத்தால் அழுகிறோம். இழப்பின் பிரிவால் வரும் துயரத்தில் அழுகிறோம். இப்படி பல காரணங்கள் இருந்தாலும், அவற்றை எதிர்கொண்டு சவாலாக்கும் திறமை எம்மிடம் இல்லாததால்தான் அழுகிறோம். அழுது வரும் கண்ணீரால் துன்பங்கள் விலகுகிறதா? அழுது தீர்த்து விடு நெஞ்சில் உள்ள பாரம் கரைந்து விடும் என்கிறார்கள். உண்மையில் பாரம் கரைகிறதா? உன்னுடைய கவலையை பிறரிடம் பகிர்ந்துகொள்ள பாரம் குறையும் என்கிறார்கள். உண்மையில் பகிர்ந்துகொள்ளும் போது தீர்வு கிடைக்கிறதா?. இந்த கேள்விக்கும் அதன் பதிலுக்கும் சுழற்சி முறையில் மாலதியின் மனம் பட்டி மன்றம் நடத்திக்கொண்டு இருந்தது.

இந்த வாழ்க்கை அவள் தானாகத்தேடிக் கொண்டது இல்லை. அதற்காக இதற்கு முழுக் காரணம் அவள் பெற்றோர்கள்தான் என்று சொல்லி அவர்கள் மேல் பழியை போடலாமா?. அலசிப்பார்த்து கலியாணம் செய்து இருக்கலாம் என்றால் மாப்பிள்ளை வெளிநாட்டில் இருந்து மூன்று மாத லீவில் வந்து இருக்கிறார். நல்ல பண்பான குடும்பம் என்றும், எல்லாம் நன்றாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன்தான் ஆயிரம் பொய்யை சொல்லி பலபேர் சேர்ந்து ஒன்று கூடி கலியாணம் நடந்தது. திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது. இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்க கூடாது. அது ஆயிரம் காலத்து பயிர் என்கிறார்கள். அதில் மனிதனுக்கு நம்பிக்கை இல்லாததால்தானே சட்டம் இயற்றி அதன் மூலம் இணைக்கிறான். எதுவாக இருந்தாலும் சரியான கேள்விக்கு தப்பான பதிலை ஏற்கமுடியுமா?. இவ்வளவு காலமும் வாழ்ந்த வாழ்க்கையில் பிழை எங்கே இருக்கிறது என்பதைக் கண்ட பின்பும்,

எல்லாவற்றையும் அழித்து விட்டு முதலில் இருந்து தொடங்க முடியுமா? திருத்த முடியாத பிழைகளை திருத்த முயற்சிப்பது எப்படி?. ஒத்துப்போய் விட்டுக்கொடுத்து வாழலாம் என்றால் எதை விட்டுக்கொடுக்க முடியும்?. பிள்ளைகளின் எதிர்காலத்தையும் அவர்களின் இளமைக்கால சந்தோஷத்தையும் சுதந்திரத்தையும் அல்லவா விட்டுக்கொடுக்க வேண்டும். யாருடனும் கலந்து ஆலோசிக்காமல் நீ தான்தோன்றித்தனமாக எடுத்த முடிவு என்பார்கள். அதுவும் சரியானதா?.

மற்றவர்கள் தீர்ப்புக்கு கூறும் விடயத்துக்கு அவர்கள் அவளோடு கூட வாழ்க்கை நடத்த வில்லையே! வாழ்க்கை அவளுடயது, முடிவு எடுக்க வேண்டியவளும் அவள்தான். கொடுமைக்கார குடிகார புருஷனோடு எம் நாட்டில் எத்தனை பெண்கள் குடும்பம் நடத்துகிறார்கள் என்பதை உதாரணத்துக்கு கொண்டு வருவார்கள். தன் மனைவியை அருகில் வைத்துக்கொண்டு அடுத்தவன் மனைவியை பார்த்து ஜொள்ளு விடும் கணவனை கண்டும் காணாதது போல் நடக்கும் பெண்களை பார்த்து இருக்கிறாள். அவர்களின் கையாலாகாத தனத்தால் எத்தனை இரவு கலங்கி அழுது இருப்பார்கள். எத்தனை நாள் கண்ணீரோடு சோறு சாப்பிட்டு இருப்பார்கள் என்பதை ஊரார் கணக்கில் எடுப்பதில்லை. கணவனுக்கு துரோகம் செய்து கொண்டு ஊரார் முன்னிலையில் தன்னோடு அன்பாக தன்மனைவி நடிக்கிறாள் என்று தெரிந்தும் பிள்ளைகளுக்கு தாய் வேண்டும் என்ற காரணத்தால் சகித்து வாழும் கணவன்மார்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். துரோகம் என்ற சொல் இருபாலருக்கும் பொருந்தும். இவ்ற்றைக் கண்ட,கேட்ட போதெல்லாம் மாலதி வெகுண்டு எழுவாள். நெஞ்சினில் தன்னை பற்றிய பெறுமதியும் அதை காப்பாற்ற வேண்டும் என்ற உறுதியும் இருந்தால் எவருக்கும் பணிந்து போக தேவை இல்லை. உண்மையான அன்புக்கு அடிமைத்தனம் என்ற சொல் பொருந்தாது என்பது மாலதியின் வாதம். பொறுப்பை தட்டிக்களிக்கும் சுயநல வாதியோடு குடும்பம் நடத்துவது பெரிய கொடுமை என்று எடுத்து சொன்னாலும் தெரிந்தும் தெரியாத தாம் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்று வாதாடும் மனிதர்களின் போதனைகளை கேட்பதில் பயன் இல்லை. இரு தோணியில் பயணம் செய்தால் ஊர் போய் சேர முடியாது. அவள் சுயநலவாதி இல்லை . சிவப்பு என்று தெரிந்த பின்பும் அதை பச்சை ஆக்கிக் காட்டுவேன் என்று சொல்வதற்கு அவள் முட்டாளும் இல்லை. தான் கற்ற கல்வியிலும் தன்மேலும் அவளுக்கு மதிப்பும் தம்பிக்கையும் இருக்கிறது. அவளால் தன் குழந்தைகளுக்கு தாயாகவும் தந்தையாகவும் இருந்து அவர்களை வழி நடத்த முடியும். உத்தமன் தன்னை அறியாமலேயே தன் வாழ்க்கையை அதள பாதாளத்தில் தள்ளிக்கொண்டு இருக்கிறான். முதலில் அவனைக் காப்பாற்ற வேண்டும். இனியும் தாமதித்தால் இன்னொரு சரவணனை உருவாக்கி விடுவான். பெண்கள் தனித்து நின்று பெரிய பெரிய சாதனைகளை நடத்திக் காட்டி இருக்கிறார்கள். அவர்கள் போல் நானும் தனித்து நின்று போராடி வெற்றி பெறுவேன் என்ற தீர்மானத்தோடுதான் இந்த முடிவுக்கு வந்தாள். இன்று குடும்ப நல நீதிமன்றத்தில், நீதிபதிக்கு முன்னால் அமர்ந்து இருப்பவளைப் பார்த்து நீதிபதி கேட்கிறார் '' இன்று வழக்கின் கடைசி தீர்ப்பு சொல்லும் நாள் உமது முடிவில் எந்த மாற்றமும் இல்லையே! நீர் எடுத்த முடிவில் உறுதியாக இருக்கிறீரா?". அதற்கு அவள் பதில் "ஆம் எந்த மாற்றமும் இல்லை. என் முடிவில் நான் உறுதியாக இருக்கிறேன்." அடுத்து நீதிபதியின் கேள்வி " நீர் உமது கணவரிடம் இருந்து ஜீவனாம்சமாக எவ்வளவு தொகையை எதிர்பார்கிறீர்? '' அதற்கு அவள் "நான் எதையும் எரிபார்க்கவில்லை ''. அவள் அவனிடம் எதிர்பார்த்தது எல்லாம் நல்ல கணவனாக பிள்ளைகளுக்கு அன்பான தந்தையாக இருக்க வேண்டும் என்பது மட்டும்தான். அவனிடம் அது இல்லாதபோது அவள் வேறு எதை எதிர்பார்ப்பது ?. கோர்ட் கலைந்தது. சட்டத்தால் இணைத்து பட்டம் சூட்டி அணியப்பட்ட கோட்டை சட்டத்தின் உதவி கொண்டு கழற்ற தீர்மானம் எடுக்கப்பட்டுவிட்டது. மாலதி ''திருமதி 'என்ற கோட்டைக் கழற்றி கோர்ட் மேசையில் வைத்து விட்டு கோர்ட் மண்டபத்தை விட்டு வெளியே வருகிறாள்

''எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே" என்ற பாட்டில் இனி அவளுக்கு குழப்பம் இல்லை . ஒரு தாயால் தீயவழியில் செல்லும் குழந்தையையும் தக்க சமயத்தில் காப்பாற்றி நல்வழியில் நடத்த முடியும். என்ற திடமான நம்பிக்கை யோடு நிமிர்ந்து நடக்கிறாள்.

காலத்தின் கொடுமை இப்படியுமா மனிதப் படைப்புகளை மனசு வலிக்க வலிக்க துன்பம் தந்து சோதனைக்கு மேல் சோதனைச் செய்வது. சாந்தனுக்கு ஒன்றும் புரியவில்லை. சாதாரண வாழ்க்கை வாழ்ந்த காலங்க ளிலேயே பத்துக்கும் நூறுக்கும் பஞ்சப் பட்ட நாட்கள் தான் அதிகம். பஞ்சங்களும் அதனால் ஏற்பட்டக் கவலைகளும் நேற்றும் இன்றும் சரியாகாதத் தோரணையில், நாளையும் பொழுது விடியும்! கவலை மறக்க ஏதோவொரு சந்தர்ப்பம் கிடைக்குமென நம்பிப் பொறுத்திருக்கலாமென எதிர்ப் பார்த்த அடுத்த நாள் நாடு முழுக்க

மாயன் தோட்டத்துப் பலாக்காயும் சாந்தனும்

வரைதல்: கைலாசநாதன்

அவசரக்கால, பயணத் தடைக ளோடு விடிந்தது. என்ன சொல்வது. எதைப்பற்றிக் கதைப்பது. எல்லாமே சூனியமாய்த் தெரிந்தது சாந்தனுக்கு. கையிலிருந்த கொஞ்ச நஞ்சக் காசையும் செலவு செய்தாயிற்று. தற்பொழுது வீட்டில் எல்லாவற்றுக்குமே பற்றாக்குறை. சாம்பவி அரிசி முட்டியைத் திறந்தாள். அதிலொரு மணிகூடயில்லை. பருப்பு டின்னைத் திறந்தாள் அதிலொரு விதையுமில்லை. இப்படி ஒவ்வொரு பொருட்களுமே முடிந்திருந்ததொன்றும் புதின மில்லை. காரணம் ஒருமாத நாட்டு முடக்கம், மீண்டும் மீண்டும் தொடராய் நியமிக்கப்பட்ட போது சிறிய தொழில்கள் செய்து அன்றாட ஜீவனம் நடத்திய பலகுடும்பத்தாரின் நிலையும் இப்படித்தான் விபரித்துக் காண்பிக்க முடியாதளவுக்கு சிக்கலாகியிருக்கின்றது. சாந்தன் சாம்பவியைப் பார்த்துக் கூறினான். என்ன சாம்பவி பிள்ளைகளும் பசியில் அழுகின்றார்கள். இதற்கு மேல் என்ன செய்வதென்று தெரியவில்லை எனக் கூறிக் கவலைப்பட்டான்.சாந்தனுக்கும்

சாம்பவிக்கும் சாந்தன் ஒரு சைவ உணவகத்தில் வேலைச் செய்கிறான். மாநகரில் அவன் வேலையும், கிராமத்திலொரு குடிசை வீட்டில் சாம்பவியும் குழந்தைகளுமென ஆரம்பித்த வாழ்க்கை மாத வருமானம் சிறியத் தொகையாகவும், மாதத்தில் வரும் ஒரு போயா விடுமுறைக்கு மட்டுமே மனைவிப் பிள்ளைகளைப் பார்க்க வரக்கூடிய சந்தர்ப்பமாயும் சாந்தனுக்கு அமைந்திடவே பெரிய கல்வியறிவுமில்லாது வேறு தொழில்களும் தெரியாத காரணத்தால் இருவருக்கும் இதுவே போதுமென நினைக்கத் தோன்றியது.

இந்த வாழ்க்கையை மாற்றியமைத்திடச் சாம்பவியும் எத்தனையோ முறை சாந்தனின் முதலாளியிடம் கூறும்படிகூறி விட்டாள் . தனது மனைவி பிள்ளைகளையுமிங்கு கூட்டிவர விருப்பமுள்ளதாயும் சிறிய வீடொன்றையெடுத்திட உதவும் படியும் கேட்கச் சொல்லி. அவனும் சரி சரியென்றானே தவிர அதற்கான ஏற்பாட்டைச் செய்திட தைரியம் வரவில்லை. மீண்டும் மீண்டும் தனிமையில் பிள்ளைகளை வைத்துக் கொண்டிருக்க எனக்குப் பயமாயிருக்கின்றது, முதலாளியிடம் கெஞ்சிக் கேட்டாலென்ன குறைஞ்சாப் போயிடுவீங்க? எங்களுக்கும் ஆசைதானே, இருக்கின்ற வருமானத்தில் நால்வரும் ஒரேயிடத்திலிருந்து குடும்பம் நடத்திட . ஏனிதைப் புரிந்துக் கொள்ள மாட்டேன்கிறீங்க எனப் பாடாய்ப் படுத்தினாள். சாம்பவியின் வற்புறுத்தலைப் பொறுக்காத சாந்தனும் ஒருவாறு குடும்பத்தை நகரத்திற்குக் கூட்டி வருவதென்று முடிவெடுத்தான்.

அதன் படி முதலாளியிடம் தனது கதையைக் கூறிப் பிள்ளைகளிருவரும் நான் போயாத் தினத்தில் வீட்டுக்குப் போய்த் திரும்பி வரும் போது அழுது அழுது என்னை அனுப்ப முடியாதென்றும், இல்லையேல் எங்களையும் அழைத்துச் செல்லுங்களென்று அடம்பிடிக்கின்றார்களென்றும் அதனால் சிறிய வீடொன்றை வாடகைக்கு எடுத்திட இரண்டு வருட முன் பணம் தேவை. அந்த உதவியை தனக்குச் செய்யுங்கள். அந்த உதவித் தொகையை மாதச் சம்பளத்தில் சிறியத் தொகையை மாதா மாதம் எடுத்துக் கொள்ளுங்கள் என்றும் கேட்டுக் கொண்டான். முதலாளியும் அதற்கு சம்மதித்துக் கொண்டார்.

அந்த சந்தோசத்தை மனைவியிடம் தெரிவித்திட வீட்டுக்கு வந்தான். வந்து சாம்பவியிடம் கூறியதும் மனைவியும் பிள்ளைகளும் துள்ளிக் குதித்தார்கள். நகருக்குப் போவற்காக ஆயத்தமானார்கள். சந்தோசமெல்லாம் மனதை நிறைத்திட கிராமத்திலுள்ள உறவுகளிடம் பயணம் சொல்லி விட்டு நாளை கிளம்பிடலாமென நினைத்த போதுதான் வானொலியில் விஷேட செய்தியென அறிவித்து வைரஸ் தொற்றுக் காரணமாய் நாடு முழுவதும் முடக்கப்படுகின்றது, என ஆரம்பித்த செய்தித் தொடர்ந்தது.இந்தச் செய்தியைக் கேட்டதும் அப்படியே அமைதியாகி விட்டாரகள். மனதுக்கு மிகுந்த வேதனையளித்தது.

கிராமத்துக்கு வந்தயிடத்தில் ஓரிரண்டு மாதமாகியும் நகரத்திற்குத் திரும்பிட முடியாத நிலையில் வருமானமும் இல்லை ,எல்லா மாதிரியான தேவைகளையுமே செய்துக் கொள்ள எந்தவொரு வழியுமே இல்லாத போது தடுமாறிப் போனார்கள். மிச்சம் மீதியென்று எந்தச் சேமிப்பும் இருக்கவில்லை. அக்கம் பக்கத்திலுள்ளவர்களிடமும் உதவிக் கேட்க முடியவில்லை. காரணம் எல்லோரின் வசதி வாய்ப்புகளுமே கிட்டத் தட்ட ஒரே மாதிரி யாகத்தானிருந்தது. இன்றைய நாளில் சாப்பாட்டுக்கு சிறியதாயேனும் ஒன்றுமேயில்லை. இந்த நிமிடத்தில் அவனுக்கு மாயன் தோட்டத்துப் பலாமரம் தான் நினைவுக்கு வந்தது. ஆனாலுமிதை சாம்பவியிடம் கூறினால் வேண்டாமென்றுத் தடுத்திடுவள். பிள்ளைகள் பசியால் அழுது துடித்தார்கள். தண்ணீரைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் பருகக் கொடுத்தார்கள். தாகம் தீர்த்திடவும் பசியையடக்கிடவும் முயற்சி செய்தார்கள். ஒரு கட்டத்துக்கு மேல் புரியாத வயதுப் பிள்ளைகளுக்கு உலக நாட்டு நடப்புத் தெரியாத பருவத்தில் சமாளித்திட சாந்தனுவாலும் சாம்பவியாலும் முடியவில்லை. பிள்ளைகளின் பசியின் வெளிப்பாடாய்க் கண்ணீரைப் பார்த்ததும் என்ன செய்தால் இன்றைய நாளைக் கடத்தலாமென யோசித்த போதுதான் மாயனின் பலாமரம் கண்முன்னே வந்து ஏதோ வழி சொல்வது போன்றிருந்தது. இப்போதெல்லாம் கிராமப் பகுதிகளில் உணவுக்குப் பயன் தராத காட்டு மரங்கள் மட்டும்தான் உயர்ந்து தெரிந்தது. காலம் மாறிப் போய்விட்டதென்று கூறிடுமளவிற்கு குரங்குகள் தொல்லை.

(1983) ஆயிரத்துத் தொளாயிரத்து என்பத்தி மூன்றாமாண்டு கலவரம் வர இரண்டு நாட்களுக்கு முன் குரங்கொன்று வீட்டு வாசலுக்கு வந்ததாகவும் அப்படிக் காட்டிலிருக்க வேண்டியவை வாசலுக்கு வருவது நல்ல சகுணமில்லையெனவும் ,குரங்கு வந்ததால்தான் கலவரம் நடந்ததாவும் பாட்டி சொல்லக் கேட்டுள்ளான்

சாந்தன். ஆனால் இப்போதெல்லாம் கிராமத்திலுள்ள வீட்டினுள்ளேயேனும் எந்தப் பொருளையும் திறந்து வைக்கமுடியவில்லை. மேசையில் சாப்பாடுகளை மூடியும் வைக்க முடியவில்லை. கதவு ஜன்னல்களைத் திறந்து வைக்க முடியாதக் கொடுமை. கொஞ்சம் கவனியாதுவிட்டால் குரங்குகள் சாப்பிட்டு விடுகின்றன. அல்லது தூக்கிச் சென்று விடுகின்றன. அதே போன்று வெளியிலும் எந்த மரத்தில் என்ன காய்களிருந்தாலும் எல்லாவற்றையும் கடித்துச் சாப்பிட்டும், கீழேத் தள்ளியும் விட்டு விடுகின்றன. தென்னைமரங்களில் தேங்காய்களாய் முற்றிப் பதமாகும் முன்னே இளநீரைக் குடித்து விட்டு வெற்றுக் காய்களை கீழேப் போட்டு விடுகின்றன. பயண்தரக்கூடிய பலா, ஈரப்பலா மரங்களில் பிஞ்சிக் காய்களாயிருக்கும் போதே கடித்துக் கீழே போட்டு விடுகின்றன. கிராமத்திலுள்ள மக்கள் ஏற்கனவே சிரமப்பட்ட வாழ்க்கைதான் நடத்துகின்றார்கள். இதிலிந்தக் குரங்குகளின் அட்டகாசம் வேறு பாடாயப் படுத்துகின்றன. ஆக மாயன் வீட்டுத் தோட்டத்தில் யாருமே கால் வைக்க மாட்டார்கள். முரடன் யாருக்கும் ஒன்றும் ஈன்றிட மாட்டான். மனிதர்களைப் பகையாளர்களாயப் பார்க்கும் மாயனுக்குக் குரங்குகளை ஒன்றும் செய்திட முடியவில்லை. முயல்கள் வந்து அவன் தோட்டத்தில் பயிரிடப் பட்டுள்ள கரட் கிழங்குகளை தோண்டிச் சாப்பிட்டு விட்டு மரங்களுக்குக் கீழேப் படுத்தும் விடுகின்றன. குரங்குகள் மேலே தாவித் திரிவதால் ஒன்றும் செய்திட முடியவில்லை. முயல்களுக்குக் கம்பிகளால் செய்யப்பட்ட வலையெனக் கூறும் வட்ட வட்டமாகத் தலை நுழையுமளவிற்கு வடிவமாக்கப் பட்ட கம்பிகளை நெடுகளும் மாட்டி வைப்பான். விடியற் காலையில் முயல்கள் கத்தும் சத்தத்தை வைத்தே சிக்கியுள்ளதா? இல்லையா? எனக் கண்டுப் பிடித்திடுவான். சிக்கியிருந்தால் காலையிலவன் முகத்தில் மகிழ்ச்சிக்கு அளவேயிருக்காது. அன்று மாயன் வீட்டில் முயல் இறைச்சிக் கறி வாசம் மூக்கைத் துழைக்கும்.

கிராமத்தவர்களை மின்சாரச் சக்தி கொடுத்துத்தான் கம்பி வலைகட்டி வைத்துள்ளதாய்க் கூறி ஏமாற்றிப் பயங்காட்டி வைத்துள்ளான். அதனால் யாருமே அவன் வீட்டுத் தோட்டத்துப் பயிர்களைப் பிடுங்கிடத் துணிவதில்லை. ஆனால் இம்முறையிந்தக் கஷ்டக் காலத்துக்கு ஏற்றாற்போல் அவனுடைய பலாமரத்தில் மட்டும்தான் இரண்டு மூன்று பலாக்காய்கள் தெரிகின்றன. அதிலொருக்காயைப் பிடுங்கியெடுத்தால் இன்றையத் தினம் சமாளித்திடலாமே என ரொம்ப ஆசையுடன் மனைவியிடம் கூறிவிட்டான். மாயன் எங்குசரி கடைப்பக்கம் போனவுடன் ஒரே ஒரு காயைப் பிடுங்கிடுவோம் என்றான். சாம்பவிக்கோ உடம்பெல்லாம் நடுங்கியது. கள்ளத்தனமாய் பலாக்காய் பிடுங்க வேண்டாம் மர உச்சியில் காய் தெரிவதால் நீண்ட நாட்களாக மரமேறாத உங்களுக்கு அந்தக் காயை ஏறிப் பிடுங்கிட முடியாது. பேசாமலிருங்கள் என்றாள். அவள் கூறுவதும் சரிதான். அப்படியெதுகும் பிடுங்கி அவன் கையில் மாட்டினால் மனிதர்கள் இந்தப் பக்கமிருக்க முடியாதளவிற்கு அவனுடைய வார்த்தைகள் மனதைக் குத்துமளவிற்குக் கேட்டுத் தொலைத்திடுவான். அவன் தாத்தா நாட்டிய மரத்தை ,அவன் கஷ்டப் பட்டு வளர்த்த மரத்தில் நாம் பிடுங்கினது போன்று கேவலமாய்க் கதைப்பான். வேண்டாம்! பட்டினிக் கிடந்தாலும் பரவாயில்லை. அந்தப் பக்கமேப் போக வேண்டாம் என்றாள். நானுமென்ன ஆசையிலா பிடுங்கிடலாமென நினைத்தேன். இல்லையே! பிள்ளைகளும் பசியில் துடிக்கின்றார்கள். நீயும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் முடிந்தளவு, பசியையடக்கிட முயற்சிக்கின்றாய். எனக்கு இதற்கு மேல் முடியவில்லை. பசியைத்தாங்கும் நேரமெல்லாம் கடந்து வந்து விட்டேன்.

வயிற்றுக்குள் பூச்சிப் புழுக்களெல்லாம் இரைகின்றன. அந்தச் சத்தம் வெளியில் கேட்குமளவிற்குக் கஷ்டமாயிருக்கின்றது. உடம்பெல்லாம் என்னவோ செய்கின்றது. அந்தவொரு மரத்தில் மட்டும் தான் குரங்குகள் கண்ணில் படாதவாறு காய்கள் தெரிகின்றன. அதையும் குரங்குகள் கண்டு விட்டால் கடித்துப் துப்பி வீணாக்கி விடுங்கள் .பிறகு பலாக்காயின் பலனை யாருக்கும் முழுமையாயப் பெற்றுக் கொள்ள முடியாமற் போய்விடும். நாமந்தக் காயைப் பிடுங்கினால் மிளகாய்,பூண்டு மஞ்சள்,தேங்காயென எதுகுமேயில்லாதப் போதும் சுளைகளை நீர் ஊற்றி அவித்துச் சாப்பிட்டு ,விதைகளை அதாவதுப் பலாக் கொட்டைகளை குச்சில் விறகுகளைப் பயன்படுத்தி வறுத்தெடுத்தால் நான்குப் பேருமே வித்தியாசமாய் சாப்பிட்டதாயிருக்கும். நரம்புகளையும், விதையைச் சுற்றியுள்ள தொப்புள் பகுதியெனக் கூறப்படும் பகுதியையும் காய வைத்து பொரிக்க தேங்காயெண்ணையில்லா விட்டாலும் உப்புச் சேர்த்து இருக்கும் பொருட்களைச் சேர்த்து கறி வைத்துச் சாப்பிடலாம். மூக்குப் பகுதியெனக் கூறப்படும் மேல்

சதைப் பகுதியை அவித்து மாவுயில்லா விட்டாலும் உப்பை மடடுமேனும் சேர்த்து நன்றாகப் பிசைந்து ரொட்டிக் கல்லைச் சூடாக்கி ரொட்டியாகத் தட்டி வேகவைத்துச் சாப்பிடலாம். அப்படிச் செய்தால் ஒருநாள் உணவையேனும் சமாளித்ததாயிருக்கும் தானே! என்றான் சாந்தன். உண்மையிலிப்படியொரு நிலையை யாரும் கனவிலும் நினைக்கவில்லை. காலத்தின் கொடுமையை என்னவென்று சொல்வது?. மனிதர்கள் ஆரோக்கியமாக வாழவேண்டுமென்பதற்காகத்தான் எல்லாச் சட்டங்களும் ஏற்பாடுகளுமே!. இருந்தும் அடிப்படைத் தேவையான உணவுக்குப் பிறகுதான் மற்றயவைகள் எல்லாமே என உணர வைத்ததிந்தப் பசியின் வேகம் .

முடிவாய் சாந்தன் பலாக்காயைப் பிடுங்கிட வேண்டுமெனச் செயலில் இறங்கினான். மாயன் வீட்டுத் தோட்டத்துக்குள் புகுந்திட குறுக்கு வழியைத் தேடினான். சாம்பவி மீண்டும் தடுத்தாள். வேண்டாம் சொன்னால் கேளுங்கள். அவனைப் பற்றித் தெரியும் தானே!. வீசினாலும் யாருக்கும் எதையும் கொடுக்க மாட்டான். இதைப் பிடுங்கப் போய் காலத்துக்கும் திருட்டுப் பட்டம் வாங்கிடனும். இது தேவையா?. யோசியுங்கள்.கல் நெஞ்சக்காரன் மரத்திலுள்ள காய்களைப் பிடுங்கி அவனுமெடுத்துக் கொண்டு மிஞ்சியதை வறுமையில் வாடும் மற்றவர்களுக்கும் கொடுத்தாலென்ன !. எவ்வளவு நல்லாயிருக்கும். கோடிப்புண்ணியம் கிடைத்திடுமே! சல்லிக் காரர்களிருக்கும் பகுதிகளில் இருந்தாலும் நிவாரணம் எனும் பெயரில் சரி ஏதேனும் செய்வார்கள். இந்தப் பகுதியில் அப்படி எதையுமே இங்கு எதிர் பார்க்க முடியவில்லையேயென யோசித்து யோசித்து முடிவாயொரு விடயத்தைக் கணவனுக்குக் கூறினாள். நீங்கள் திருட எண்ண வேண்டாம். வறுமையொரு கொடுமைதான். பரவாயில்லை! அவன் வீட்டுக் கதவையே தட்டி எமது நிலவரத்தைக் கூறி ஒரு பலாக்காய் கேளுங்கள். இந்த நேரத்திலும் ஏழைகளுக்கு உதவாத மனசொன்று இருக்காது. மனதாரத் தந்தாலதை வாங்கிக் கொள்வோம் என்றாள். சாந்தனுக்கோ கோபம் தலைக்கேறியது. பசி மனிதனைக் கொல்கின்ற நேரத் திலும் உனக்கு நேர்மைதான் பெரிதாய் போனதா?. என்றான் சாந்தன். பரவாயில்லை.

கல்லும் கரையுமென்பார்களே அது போன்று அவனிதயத்திலும் கொஞ்சம் கூடவா ஈரமிருக்காது? என்னதானிருந்தாலும் அவனும் மனிதன் தானே. மனித உணர்வுகள் எல்லாவற்றையும் பார்க்காவிட்டாலும் பசியெனும்போது தொண்டைக்குக் கீழே போனால் நரகமென்பார்கள். இதை அவனும் அறிவான். என்ன எப்படி நடக்கின்றதென்றே தெரியாத உணர்வில் சில நேரம் கொஞ்சம் கருணையோடு நடந்துக் கொள்வான் என்றாள் சாம்பவி. மனைவி சொல்லே மந்திரமென எண்ணி மாயன் வீட்டுக் கதவைத் தட்டிட கேட்டருகில் சென்றான் சாந்தன். இவனின் கால் நடைச் சத்தம் கேட்டதுமே பௌவ் பௌவ்யென மாயன் வீட்டு நாய் சத்தமாய்க் குலைத்தது. மாயனும் வெளியில் வந்தான். சாந்தன் பயந்து பயந்து பலாக்காயொன்றுத் தாருங்கள் அண்ணா. இரண்டு நாட்களாய் உணவேதும் ஒழுங்காகக் கிடைக்காமல் பசியால் குடும்பமே தவிக்கின்றோம். என்றான் சாந்தன்.

அப்படியா ஏன் நேற்றே கேட்டிருக்கலாமே! எனக் கூறிய மாயன் தொடர்ந்தான். முன்பு போல் எதுவும் கேட்டால் இல்லையென்று விரட்டிடுவேனென நினைத்தாயா? இப்போதெல்லாம் ஒவ்வொரு உயிர்களுமே நாளை உயிர் வாழ்வோமா? என்ற நிலை. வாழ்ந்தால் அதுதான் கடவுள் எமக்குக் கொடுத்த பெரிய கருணை. இந்த உயிர் வாழ்ந்தால் அது தான் பெரிய புண்ணியம். அந்தத் தருமம் சரி உயிர் காக்கட்டும். வாழுமோர் மனிதனுக்கு ஏதேனும் இருக்கின்றதை உதவினால் அதுதான் நல்ல செயல். இந்தக் காலத்தில் தத் தம் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வது மட்டுமல்ல பெரிய விடயம். நம்மாலும் இன்னொரு உயிருக்கு உதவ முடியுமென்றால் அதுவும் ஒரு பெரிய விடயம் தான். இருக்கின்ற காய்கள் எல்லாவற்றையும் பிடுங்கி நீயும் எடுத்துக் கொண்டு மற்றையக் காய்களை எனக்குத் தந்துவிட்டுப் போ! நானும் எடுத்துக் கொண்டு மற்றையவைகளை வேறு யாருக்கும் கொடுத்து முடிக்கின்றேன் என்றான் மாயன்.

சாந்தனுக்கு மகிழ்ச்சி தலைக் கேறியது. முரடன், கல் நெஞ்சக்காரன் என்றெல்லாம் மற்றையோர் மாயனை அடையாளப்படுத்தி வைத்திருந்தாலும் , யாருக்கு எப்போ எப்படியுதவினால், உதவியின் பெறுமதித் தெரியுமெனக் கண்டு வைத்துள்ள மாயனைக் கடவுளாய் நினைத்தான் சாந்தன்.

அரசியல் அதிகாரம் மக்களிடமிருந்தே ஆரம்பிக்கிறது. அது மக்களைவிட்டு தனிமனிதர்களின் கைகளில் தவழும்போது நாட்டில் வன்முறை தலையெடுத்தாடத் தொடங்கி விடுகிறது.

எழுத்தின் அனுபவங்கள்.....

நந்தினிசேவியர்

அயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்

இலக்கியத்திற்கு அப்பாற்பட்டு நான்எதிர்கொண்ட நெருக்குவாரங்களை இப்பதிவுகளில் தவிர்த்துக்கொள்ளலாம் என நினைக்கிறேன். அது இரகசியமானதும் அல்ல. மகன் பிறந்து ஓராவது பிறந்த நாள். மனைவியையும் மகனையும் திருகோணமலை அழைத்து வர யாழ் சென்றேன். மனைவியின் பொலீஸ் உத்தியோகம் காரணமாக பாஸ்பெறுவதில் தாமதமேற்பட்டு திரும்ப முடியாமையால் எனது வேலை வறிதாக்கப் பட்டுவிட்டது.

ஏலவே மனைவியின் வேலையும் வறிதாக்கப் பட்டிருந்தது. நயவஞ்சகனான தன்னை முற்போக்கு எழுத்தாளனாக பின்னர் பிரபலப்படுத்திக் கொண்டிருந்த பதிப்பகத் திணைக்கள உதவிப்பணிப்பாளன் ஒருவனின் சதியால் இது நிகழ்ந்தது. நான் மிகுந்த துன்பத்தில் தள்ளப்பட்டேன். மீள வேலை பெறுவதற்கான பகீரத முயற்சி. அச்சிடமுடியாமல் தட்டச்சு செய்யயப்படிருந்த

அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தொகுதியை திருகோணமலைக்குக் கொண்டு வந்திருந்தேன். எனது நூல் ஒன்றை வெளியிட தேசியகலை இலக்கியப் பேரவையினர் விரும்பியிருந்தனர். வேலையிழப்பு வாழ்வு கழிவதே சங்கடம். நூல் வெளியிடுவது பற்றிச் சிந்திக்க மனதற்றிருந்தேன்.
அரசியல் கருத்து வேறுபாடும் காரணம்.

நண்பன் ஆ.ஐ.யு. ஜபார் எனது தட்டச்சுப்பிரதிகளைப் பலவந்தமாகப் பிடுங்கி அவர்களிடம் கையளித்தான். இதெல்லாம் மறந்திருந்த ஒரு நாளில் திரு. பற்குணம வர்கள் எனது முதல் நூலின் இரு பிரதிகளை என்னிடம் கொண்டுவந்து தந்தார், (இவ்விடத்தில் என்நூலை வெளியிட்டவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன்.)
நூலைப்பெற்றதும் நானடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. என் நூலை திருகோணமலையில் வெளியிட அதனை வெளியிட்டுவைக்க என்னால் முடியவில்லை. அயல்கிராமத்தைச்சேர்ந்தவர்கள் சந்தித்த அவலங்கள் கொஞ்சமல்ல.

திருகோணமலையில் வெளியிடமுடியாத அத் தொகுப்பை சாருமதியும், லோறன்ஸ் வாசுதேவனும் மட்டக்களப்பில் அறிமுகம் செய்து உதவினர். சுமார் 60 பிரதிகள் விற்பனையாயிற்று. வ.கி.மா. பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 70பது புத்தகங்களைக் கொள்வனவு செய்தது. அனேகமாக எனது நூல் அனைத்தும் விற்பனையாகி முடிந்தது பெரிய சந்தோசம்.
சுதந்திர இலக்கிய 93 ம் ஆண்டுக்கான சிறந்தநூல் விருதை அந்த நூல் பெற்றுக்கொண்டதும். இன்னொரு மகிழ்ச்சி.

சாகித்தியமண்டல இறுதிச் சுற்றுக்கு தெரிவான இந் நூல் இனத் துவேசம் பிடித்த ஒரு பேராசிரியரின் ஆட்சேபனையால் பரிசுபெறாமல் போய்விட்டது.

வட.மா.உள்ளூராட்சி திணைக்கள தமிழ் இன்பக் கண்காட்சி விருதை இந்நூல் பெற்றுக் கொண்டது இன்னொரு தகவல்.

திருகோணமலை நகரசபை நூல் நிலைய விளம்பரப்பலகையில் திருகோணமலை எழுத்தாளர் பட்டியலில் இருந்த எனது நூல் மண்ணின் மைந்தர்களின் துவேசத்தால் சுரண்டி அழிக்கப்பட்ட துன்பியல் சம்பவமும் நிகழ்ந்தேறியது.

பின்நாளில் திருகோணமலை நகர முதல்வரின் திருகோணமலை எழுத்தாளர் கௌரவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்பது முக்கியதகவல்.


SKM
BOOKS
COMING SOON!
WWW.SKM-BOOKS.COM
BUY & SELL YOUR BOOKS ONLINE
SKM
BOOKS

Luxmi Education Centre

Contact us now to secure your spot and give your child the best chance to succeed and secure their future

WHAT WE OFFER

YEARS1-3
MATHS, ENGLISH
YEARS4-5(11PLUS)
MATHS, ENGLISH, VERBAL REASONING, NON VERBAL REASONING
YEAR6
MATHS, ENGLISH, SCIENCE
YEAR7-9
MATHS, ENGLISH, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
YEAR10-13
MATHS, PHYSICS, CHEMISTRY, BIOLOGY

WHY CHOOSE US?

BESPOKE RESOURCES

We use our own teaching material created in house for Maths, English and Science

EXPERIENCED TEACHERS

All our tutors are experienced undergraduates or currently teaching in schools

INDIVIDUAL ATTENTION

We ensure students are taught all topics in its entirety. We ensure no one is left with a doubt.

Contact Details:

Tel: 0208 573 0368
Mob: 07852810285
website@Leconline.co.uk
www.leconline.co.uk

Luxmi Education Centre - 101A Blyth Road, Hayes, UB3 1DB, UK

Design by LEC Digital Design